DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1342
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 24, 2021

# HomeLife/Future Realty Inc Brokerage வீடு விற்பனை முகவர்கள் நிறுவனத்தின் விருதுகள் வழங்கும் விழா



கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவரும் **HomeLife/Future Realty Inc Brokerage** வீடு விற்பனை முகவர்கள் நிறுவனம் கடந்த 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் விருதுகள் வழங்கும் விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்தது.

300 க்கும் மேற்பட்ட விற்பனை முகவர்கள் அங்கு தங்கள் விற்பனைத் திறன்களுக்கு ஏற்ப விற்பனை விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். அமலன் - அபி தம்பதியினர் அதி உயர் வீடு விற்பனை முகவர்களுக்கான விருதினைப் பெற்றுக்கொண்டனர். திரு கைலன் தில்லைநாதன் 2வது நிலை உயர் விருதைப் பெற்றுக்கொண்டார். இங்கே காணப்படும் படங்களில் வெற்றியாளர் தமக்குரிய விருதுகளை செல்வா வெற்றிவேல் அவர்களிடமிருந்து பெறுவதைக் காணலாம்.



# RE/MAX ACE Realty Inc Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் வருடாந்த விற்பனை விருதுகள் விழா



ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் **RE/MAX ACE Realty Inc Brokerage** வீடு விற்பனை முகவர் நிறுவனத்தினர் கடந்த 18-12-2021 அன்று தமது வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவத்தையும் கிறிஸ்த்துமஸ் கொண்டாட்டத்தையும் இணைந்து நடத்தினர்.

நிறுவனத்தைச் சேர்ந்த பல வீடு விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனைத் திறன்களுக்கு ஏற்ப தங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர். படத்தில் இவ்வருட அதி உயர்விருது பெற்றவருக்கு நிறுவனத்தின் சார்பில் விருது வழங்கப்படுவதைக் காணலாம் பல ஊடக நண்பர்கள் அழைக்கப்பட்ட சிறப்பு விருந்தினர்கள் என அனைவரும் வெற்றியாளர்களை வாழ்த்திச் சென்றனர்.

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் நடத்திய நன்றி தெரிவிக்கும் வைபவம்

கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும். சம்மேளனத்திற்கு சொந்தமான ஒரு கட்டடத்தை கொள்வனவு செய்வதற்கு “ஆணி வேராக “விளங்கியவரும். 3 தடவைகள் தொடர்ச்சியாக தலைவராக பதவி வகித்தை பெருமையைப் பெற்றவருமான திருசாந்தா பஞ்சலிங்கம் நடத்திய நன்றி தெரிவிக்கும் வைபவம் ஒன்று கடந்த புதன்கிழமையன்று ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்றது. அங்கு அழைக்கப்பெற்றவர்ககள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவரது நன்றி தெரிவிக்கும் உணர்வைப் பாராட்டிய வண்ணம் கலந்து கொண்டனர். படத்தில் சம்மேளத்தின் முன்னாள் தலைவர்கள் சிலர் காணப்படுகின்றனர்.



INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL


Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*




Our secure online application is easy to complete, just go to **gopal@driveautogroup.ca**
Or call Gopal Pillai at: **(647) 763-0210**

### COURIER DRIVERS WANTED

Courier Drivers wanted with your own car in Scarborough, GTA, Mississauga, Brampton, Etobicoke, Woodbridge and Pickering area.

Full time or partime.

**Pala: 416-320-1446**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் பின்ச் - மார்க்கம் வீதிச் சந்திப்புக்கு அருகில் உள்ள உணவகத்தில் இலங்கை-இந்திய உணவு தயாரிக்கக் கூடிய சமையல் வல்லுனர்களும் சமையல் உதவியாளர்களும் உடன் தேவை. பயிற்சியும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**(647) 300-8856**

### HOUSE/BASEMENT for RENT

McCowan / Alton Tower சந்திப்புக்கு அருகில் detached two-story house with 4 bedroom, 2 ½ washrooms, & 2 parking வாடகைக்கு உண்டு. Available as of January 1st, 2022

-----------------------------

Staines / Steeles சந்திப்புக்கு அருகில் 1 bedroom basement with separate entrance வாடகைக்கு உண்டு. Available Immediately.

தொடர்புகளுக்கு:
**(416) 836-0010**

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
**ஜெயா:**
**(647) 669-2739**

# உதயன் கதிரோட்டம்

## ஈழத்தமிழர்களை தொடர்ந்து ஏமாற்றிவரும் இந்தியாவிற்கு ‘துணை’ நிற்கும் கூட்டமைப்பு?

இந்தியா கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழர்களை தனது பகடைக் காய்களாக வைத்திருந்து ஏமாற்றிவருவதை சிறு வயதுப் பிள்ளைகள் கூட நன்கு அறிவார்கள். விடுதலை இயக்கங்களுக்கு உதவி-கள் செய்வது போன்று ஆரம்பத்தில் கவர்ந்து இழுத்து பின்னர் இயக்கங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்திய ‘பெருமை’ இந்தியாவிற்கு மட்டுமே உண்டு.

இதைப் போன்றே. தற்போதைய இக்கட்டான நிலையில் கூட தமிழ் மக்களுக்கு உதவுவது போன்று ‘நடித்து’ அதற்கு துணையாக’ சம்பந்தன். சுமந்திரன். மற்றும் சி.வி. விக்கினேஸ்வரன் போன்றோரையும் ‘ரெலோ இயக்கத்தவரையும் பயன்படுத்தி அதை நிறைவேற்றிட இந்தியா துடிப்பைக் காட்டுவது தற்போது நன்கு புலனாகியுள்ளது.

இந்த விடயத்தை நமது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பம் தெளிவாக விளக்கியுள்ளார். அவர் அண்மையில் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த கருத்துக்களின் மூலம், இந்தியாவின் கபடத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தனது கருத்துப் பகிர்வில் பின்வருமாறு கூறுகின்றார். “ஈழத் தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கி, சீனாவிடமிருந்து இலங்கையைப் பிரித்தெடுத்து தம்வசம் வைத்திருக்க இந்தியாவும் மேற்கு நாடுகளும் முயல்கின்றன. இதற்காகவே அவற்றின் எடுபிடிகளான சட்டத்தரணிகளும், தங்களைத் தாங்களே மூத்த அரசியல் தலைவர்கள் என்று சொல்பவர்களும் தாங்களே நிராகரித்த 13ஐ இப்போது – 30 வருடங்களின் பின்னர் கேட்கிறார்கள்” என்றும் தெரிவித்துள்ளார்.

35 வருடங்களாக தோற்றுப்போன – எட்டாத இடத்தில் இருக்கும் 13இல் இன்னமும் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் தலைமைகள் அல்ல. மடையர்கள் – முட்டாள்கள். ஆனால், இவர்கள் முட்டாள்கள் இல்லை – நிச்சயம் முட்டாள்கள் இல்லை. இந்நிலைக்கும் பூகோள அரசியலில் சீனாவின் வருகை முக்கியமாகிறது. இந்தியாவும் மேற்கு நாடுகளும் சீனாவிடம் இருந்து இலங்கை விடுபட வேண்டும் என்ற தேவை உள்ளது. அந்தப் பின்னணியில் அவை என்ன சொல்கின்றன என்றால், நீங்கள் சீனாவை கைவிடுங்கள் நாங்கள் தமிழனை ஒற்றையாட்சிக்குள் முடக்குகிறோம் என்று.

இதை தங்கள் முகவர்கள் – எடுபிடிகள் ஊடாக செய்கிறோம் என்பதே. சட்டத்தரணிகளின் வாதம் ஆகும். தங்களைத் தாங்களே மூத்த தலைவர்கள் என்று சொல்பவர்கள் தாங்களே நிராகரித்த 13ஐ இப்போது 30 வருடங்களின் பின்னர் நடைமுறைப்படுத்த கோருகிறார்கள். விக்னேஸ்வரன் அதைத் தாண்டி 13 தேவை – புதிய அரசமைப்பிலும் அப்படியே அது உள்வாங்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். இவையெல்லாம் தற்போதைய சில தமிழ்த் தலைவர்கள் தங்கள் அரசியல் பதவிகளை தொடர்ந்து தக்கவைக்கவே இந்தியாவின் தயவை நாடிய வண்ணம் செயற்படுகின்றார்கள். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஐயாவும் சுமந்திரன் எம்பி இருவருமே இதற்கு ‘மூலவர்கள்’ என்று கூற வேண்டும்.

## சிங்கப்பூரில் தலைவர் பிரபாகரன் படத்தோடு நாம் தமிழர் கட்சி அட்டையை வைத்திருந்த தமிழகத் தமிழர் நாடு கடத்தப்பட்டார்



சில நாட்களுக்கு முன்னர் சிங்கப்பூரில் விடுதலைப் புலிகளின் தலை-வர் பிரபாகரன்அவர்களின் படத்தோடு நாம் தமிழர் கட்சி அட்டையை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட தமி-ழகத் தமிழர் ஒருவர் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு தமிழகத்திற்கு சென்றுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி தமிழகத்தைச் சேர்ந்தவர். சிங்கப்பூரில் மாவீரர் நாள் கொண்டாடியதுடன், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் அட்டைப்படம் பொறிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சியின் அடையாள அட்டையை வைத்திருந்த காரணத்தால் அவர் தமிழகத்தில் உள்ள தனது சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே எடையூர் சிவராமன் நகரை சேர்ந்தவர் கிராமத்தைச் சேர்ந்தவர் செல்வமணி. இவர் எடையூர் கடைவீதி-யில் கோழி இறைச்சிக் கடை நடத்தி வருகிறார். இவரது மகன் குமரேசன் (வயது 25). இவர் கடந்த மூன்றரை ஆண்டுகளாக சிங்கப்பூரில் தனியார் நிறுவனத்தில் வெல்டராக பணியாற்றி வருகிறார். இவருக்கு திருமணமாகி ஒரு ஆண் குழந்தை உள்ளது. இவர் இணையதளம் மூலம் நாம் தமிழர் கட்சியில் உறுப்பினராக இணைந்து உள்ளார். இந்த நிலையில் குமரேசன், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் வைத்திருந்ததாக சொல்லப்படுகிறது. மேலும் மாவீரர் நாளையும் அண்மையில் தனது அறையில் வைத்து அவர் கொண்டியிருக்கின்றார்.

இக்காரணங்களுக்காக அவர் சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். சிங்கப்பூரில், தமிழர்கள் சிலர் மாவீரர் நாள் விழாக் கொண்டாட்ட புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பாக சிங்கப்பூர் காவல்துறை விசாரித்து வந்தது. அப்போது, விடுதலைப்புலிகள் இயக்கத் தலை-வர் பிரபாகரனின் அட்டைப்படம் பொறிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சியின் அடை-யாள அட்டையை வைத்திருந்த, திருவாரூரைச் சேர்ந்த குமரேசனை சிங்கப்பூர் நாட்டின் காவல்துறை விசாரித்துள்ளது. விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்பதால் ஆறு நாட்களுக்கும் மேலாக விசாரணை நடத்தி, அவரை சொந்த ஊருக்கே திருப்பி அனுப்பி வைத்துள்ளனர். இனி வாழ்நாள் முழுவதும் சிங்கப்பூருக்குள் நுழைய முடியாத வகையில், அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து குமரேசன் தந்தை செல்வமணி கூறுகையில், எமது செய்தியாளரிடம் கூறுகையில “கடந்த மூன்றரை ஆண்டுகளாக சிங்கப்பூர் நாட்டில் தனியார் நிறுவனத்தில் வெல்டிங வேலை செய்து வருகிறார். நாம் தமி-ழர் கட்சியிலும் உறுப்பினராக உள்ளார். கடந்த ஒருவாரத்திற்கு முன்னர் பணி-யில் இருந்தபோது சீன நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் என் மகனுக்கும் சிறிய

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## இலங்கையில் வயது வித்தியாசமின்றி அனைவரையும் தாக்கி வரும் 19 தொற்று

உலக நாடுகளை பெரிதும் அச்சுறுத்தி வரும் ஒன்றாக கொவிட்-19 தொற்று காணப்படுகின்றது. இது வயது வித்தியாசமின்றி அனைவரையும் தாக்கி வரும் நிலை-யில் இலங்கையிலும் இதன் தாக்கம் அதிகமாகவே காணப்படுகிறது.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களும் கர்ப்பிணிப் பெண்களுமே இத்தொற்றினால் பாரதூரமான தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் இலங்கை சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ தரவுகளின்படி கடந்த வாரம் வரை நம் நாட்டில் 5 இலட்சத்து 75 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர், 14 ஆயிரத்து 600 பேர் இத்தாக்கத்தினால் மரணமடைந்துள்ளனர் என்ற விபரம் தெரியவந்துள்ளது.

கொரோனா தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக கட்டம் கட்டமாக தடுப்பூசி வழங்கும் திட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது மூன்றாம் கட்ட தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தடுப்பூசிகள் மூலம் மக்கள் தொற்றுக்கு உள்ளாவதையோ தொற்று பரவுவ-தையோ முழுமையாக தவிர்க்க முடியாது. ஆனால் உயிராபத்தை பெருமளவில் தவிர்க்க முடியும். எனவே மக்கள் தொடர்ந்து சுகாதார வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டுமென சுகாதார அமைப்புக்கள் எச்சரித்து வருகின்றன.

நாம் இதுவரை கொவிட் தொற்றின் மூன்று அலைகளை கடந்து வந்துள்ளோம். இந்நிலையில் தற்போது நாட்டின் முக்கியமான நகரங்களில் மீண்டும் மக்கள் கூட்டம் களைகட்ட ஆரம்பித்துள்ளது. கொவிட்-19 என்ற சொல் அறிமுகமாவதற்கு முன்னர் மக்கள் கூட்டம் நகரங்களில் எவ்வாறு காணப்பட்டதோ, அதே நிலைமை தற்போதும் காணப்படுகின்றது எனலாம். சமூக இடைவெளி என்ற ஒன்றின் அவசியத்தை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு கடைகளிலும், பொது இடங்களிலும் மக்கள் கூட்டம் மீண்டும் இப்போது களைகட்ட ஆரம்பித்துள்ளது.

கடந்த காலத்தில் பண்டிகைக் காலங்களில் மக்கள் கூட்டம் சுகாதார வழிமுறைகளை கடைபிடிக்காமையினாலே பெரும்பாலான இடங்களில் கொரோனா கொத்தணிகள் உருவாகி தொற்று பாதிப்பும் அதிகமானது. இவ்வாறானதொரு நிலை-மை நாட்டில் மீண்டும் ஏற்படக் கூடும் என்ற அச்சம் இன்றைய சூழலில் ஏற்பட்டுள்ளது.

நத்தார், புத்தாண்டு ஆகியவை நெருங்கி வருகின்ற இன்றைய காலப் பகுதி-யில் கொழும்பு, மலையகம் உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் புத்தாடைகளையும் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக கடைத் தெருக்களில் முண்டியடித்துக் கொண்டு நிற்பதைக் காண முடிகின்றது. இத்தகைய நிலைமை கொழும்பு உள்ளிட்ட பெரும்பாலான நகரங்களில் அதிகமாகவே காணப்படுகின்றது. கிறிஸ்மஸ் பண்டிகையைத் தொடர்ந்து புதுவருடப் பிறப்பு தைப்பொங்கல் என பண்டிகைகள் தொடர்ந்து வருகின்றன. எனவே மக்கள் கூட்டம் அதிகமாகவே நகரங்களில் காணப்படுமென எதிர்பார்க்க முடிகின்றது.

எனவே நாட்டில் மற்றுமொரு அலை உருவாகும் அச்சம் ஏற்பட்டுள்ளது. அ-தேசமயம் கொவிட்-19 வைரஸின் மற்றுமொரு திரிபான ஒமிக்ரோன் எமது நாட்டிலும் பரவ ஆரம்பித்துள்ளது. இதன் முதலாவது தொற்றாளர் இம்மாதம் ( டிசம்பர்)3ஆம் திகதி அடையாளம் காணப்பட்டதையடுத்து, அது பற்றிய அச்சம் அதிகரித்துள்ளது. கடந்த பண்டிகைக் காலங்களிலேயே கொரோனா கொத்தணிகள் உருவான நிலையில், தற்போதைய சூழலில் ஒமிக்ரோன் பரவல் அதிகரிக்கக் கூடிய அச்சம் நிலவுகின்றது. இந்நிலை குறித்து தொடர்ந்து சுகாதார மருத்துவப் பிரிவினர் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

கொவிட் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், இரண்டு டோஸ்களை பெற்றவர்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் தடுப்பூசிகளை பெறாதவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். இத்தடுப்பூசிகள் கொவிட் தொற்றின் போது ஏற்படும் பாதிப்பை பகுதியளவில் குறைக்குமே தவிர, முழுமையாக கட்டுப்படுத்தாது. என்றாலும் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசிகள் பெரிதும் பங்களித்து வருகின்றது என்பது மறைக்க முடியாத உண்மையாகும். எனவே மக்கள் கட்டாயம் தடுப்பூசிகளை பெறுவது அவசியமாகும்.

மக்கள் பொதுஇடங்களுக்குச் செல்லும் போது கட்டாயம் சமூக இடைவெ-ளியை கடைப்பிடிப்பதும் அவசியமாகும். இதன் மூலமாகவும் தொற்று பரவுவதை தடுக்கலாம்.

---

தகராறு ஏற்பட்டுள்ளது. அதனை அடுத்து என் மகன் வேலை பார்த்த நிர்வாகம் அவரது வங்கி கணக்குகளையும் முடக்கி அவரை சிங்கப்பூர் நாட்டில் இருந்து வாழ்நாள் தடை விதித்து இந்தியாவிற்கு அனுப்பி உள்ளனர். இதனால் இங்கிருந்து பணம் அனுப்பி மகனை வரவழைத்தோம். இங்கும் அவரிடம் ஒருநாள் விசாரணை நடத்தப்பட்டது. இச்சம்பவத்தால் என் மகனுக்கு மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது. தற்போது அவர் கும்பகோணத்தில் உள்ள எங்களது உறவினர் வீட்டில் தங்கி உள்ளார்” என தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட குமரேசனிடம் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டு கேட்டபோது, “நான் எனது செல்போனில் ஈழத் தமிழர்களின் தலைவரான பிரபாகரன் மற்றும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டோவை வைத்திருந்தேன். இதைக்கண்டு ‘தடை செய்யப்பட்ட புகைப்படங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவளிக்கும் அமைப்போடு தொடர்பு வைத்துள்ளீர்களா’ என்று என்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவர்களிடம், ‘நான் நாம் தமிழர் கட்சியின் உறுப்பினர். நான் அந்த கட்சிக்கு மாத சந்தா 500 ரூபாய் அனுப்புவேன். அது அந்த கட்சி மக்களுக்காகவும் மரம் நடுதல் போன்ற பணிகளை செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும்’ என்று தெரிவித்தேன்.

உடனடியாக சிங்கப்பூர் காவல்துறை என்னை விசாரணைக்கு அழைத்துச் சென்று ஆறு நாட்களாக சிங்கப்பூர் குடிவரவு திணைக்களத்தில் வைத்து விசார-ணை நடத்தியது. சுமார் ஆறு நாட்கள் அங்கு வைத்திருந்து, அதன் பிறகு நாடு கடத்தியது. அதன் பிறகு நான் தமிழ்நாட்டிற்கு வந்தபோது இந்தியாவில் உள்ள குடி-வரவு அலுவலகத்திலும் இரவு 7 மணி முதல் அதிகாலை 3 மணி வரை தொடர்ந்து விசாரித்தார்கள். அப்போதும் பதிலளித்தேன்” என்றார்.


BEST MOBILEZ
GTA Square Mall. 5215 Finch Ave E # 112
Scarborough, M1S 0C2, Tel: 416 319 1111
தற்போது புதிய இடத்தில்
மற்றுமோர் பரிணாமம்
அலைபேசிகளின் அரசன்
BEST MOBILEZ
BOXING
WEEK SALE!
Unlimited
Talk and text Data
$23
Bring this Voucher
and redeem in stores
இந்த கூப்பனை கொண்டு வந்து $20
தள்ளுபடியை பெற்றுக்கொள்ளவும்
Please cut here - இங்கே வெட்டவும்
Please cut here - இங்கே வெட்டவும்
Canada
PHONE ACCESSORIES
$20 GIFT VOUCHER
Tel: .................
BEST MOBILEZ
அலைபேசிகளின் அரசன்
Valid Between: December 27, to December 31 - 2021,
If'is not redeemable for Cash - Cannot pay for bills payment
* Limit one coupon per purchase

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய வரலாற்றில் முதற் தடவையாக ஒரு வருடத்தில் அதிக குடிவரவாளர்களை அனுமதித்துள்ளது




## கடந்து போகும் 2021ல். 401,000 நிரந்தர குடிவரவாளர்கள் கனடாவில் தம் புதிய வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர்

கனடாவில் வாழும் பழங்குடியினரைத் தவிர, ஏனைய கனடா வாழ் மக்களும் முதலில் வேறு எந்தவொரு நாட்டிலிருந்தோ வந்தவர்கள் என்பது தான் உண்மை. குடியேற்றம் பற்றிய கதை கனடாவின் வரலாற்றில் பல அத்தியாயங்களைக் கொண்டது.

கனடாவின் தொற்றுநோய் பரவலுக்குப் பிந்தைய மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கும், மேலும் வளமான எதிர்காலத்தை விளக்குவதற்கும், கனடிய அரசாங்கம் 2021-2023 குடியேற்ற நிலைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2021 இல் 401,000 புதிய நிரந்தர குடிவரவாளர்களை வரவேற்கும் இலக்கை அடைந்துள்ளது.

கனடாவிற்கான குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் கௌ-ரவ சீன் இப்ரேசர், இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கின்றார்.

கனடா தனது இலக்கை அடைந்து 401,000 க்கும் மேற்பட்ட புதிய நிரந்தர குடியிருப்பாளர்களை 2021 இல் வரவேற்றுள்ளது கடந்த 1913 ஆம் ஆண்டு முதல் சாதனையை முறியடித்து, கனேடிய வரலாற்றில் ஒரு வருடத்தில் அதிக புதிய குடிவரவாளர்கள் கனடாவில் தங்கள் புதிய வாழ்க்கையை 2021ல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தொற்றுநோயின் பல சவால்களை எதிர்கொள்வதற்கு மத்தியில் இந்த வரலாற்று சாதனை குறிப்பாக முக்கியமானது. மூடிய எல்லைகள் முதல் உள்நாட்டு முடக்கங்கள் வரை, உலகளாவிய இடம்பெயர்வு கோவிட்-19 ஆல் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சின் ஊழியர்கள் 2021 ஆம் ஆண்டில் அரை மில்லியன் விண்ணப்பங்களைச் செயல்படுத்தி சாதனை படைத்துள்ளனர். இதை அடைய, கனடிய குடிவரவு அமைச்சகம் தனது வளங்களைச் சேர்த்து இந்த முயற்சியில் வெற்றிகண்டது புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொண்டது மற்றும் மேலும் செயல்முறைகளை இணையவழி மூலம் கொண்டு வந்தது. இந்த மாற்றங்கள் அனைத்தும் கனடாவின் குடிவரவு அமைச்சின் செயற்பாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிதான நிரந்தர மேம்பாடுகள் ஆகும்.

தொற்றுநோயுடன் நாங்கள் தொடர்ந்து போராடுகையில், ஏற்கனவே எங்கள் எல்லைக்குள் இருக்கும் திறமைகளை நாங்கள் அதிகம் பயன்படுத்தினோம். இந்த புதிய நிரந்தர குடியிருப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே தற்காலிக அனுமதியோடு கனடாவில் வாழ்ந்து வந்தனர். மிக முக்கியமாக, அத்தியாவசியத் தொழிலாளர்கள், சுகாதாரப் பாதுகாப்பு வல்லுநர்கள், சர்வதேச பட்டதாரிகள் மற்றும் பிரெஞ்சு மொழி பேசும் புதியவர்களை ஈடுபடுத்த புதிய திட்டங்களை நாங்கள் தொடங்கினோம். குடும்ப மறு ஒருங்கிணைப்பு என்பது எங்கள் குடி-வரவு அமைப்பின் மற்றொரு தூணாகும், மேலும் பெற்றோர்கள் மற்றும் தாத்தா பாட்டிகளுக்கு நிதியுதவி செய்வதற்கு அதிக குடும்பங்களைச் செயல்படுத்தும் அதே வேளையில், வாழ்க்கைத் துணைவர்களையும் குழந்தைகளையும் மீண்டும் இணைத்தோம். இறுதியாக, பல நாடுகள் அகதிகளுக்கான கதவுகளை மூடிவிட்டதால், கனடாவில் உலகின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நாம் கனடாவில் தங்குமிடங்களை நாங்கள் தொடர்ந்து வழங்கினோம்.

நமது பொருளாதாரத்தை இயக்கவும், நமது சமூகத்தை வளப்படுத்தவும் மற்றும் நமது வயதான மக்களை ஆதரிக்கவும் கனடாவிற்கு குடியேற்றும் செய்வது மிகவும் அவசியம். கனடாவில் உள்ள வர்த்தக நிறுவனங்களில் மூன்றுக்கு ஒன்று குடியேறிய ஒருவருக்கு சொந்தமானது, மேலும் 4 இல் 1 சுகாதாரப் பணியாளர்கள் புதியவர். வணிகம், தொழிலாளர் சந்தைப்படுத்தும் ஆற்றல் கொண்ட வல்லுநர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்கள் அனைவரும் கனடாவில் குடியேறும் சந்தர்ப்பங்களைப் இலகுவில் பெறுகின்றார்கள்.

புதிய குடிவரவாளர்களின் வருகை என்பது கனடாவில் புதிய சிந்தனைகளை தோற்றுவிக்கின்றது மற்றும் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவுகிறது. புதிய கனடியர்கள் ஒவ்வொரு நாளும் நமது நாடு முழுவதும் உள்ள சமூகங்களுக்குப் பங்களிக்கிறார்கள், மேலும் நாளைய கனடாவை உருவாக்கும்போது புதிய குடிவரவாளர்களை இன்னும் வரவேற்போம்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

## Canada Welcomes the most Immigrants in a single year in its History

### Government reaches target of 401,000 new permanent residents in 2021

December 23, 2021—Ottawa—With the significant exception of Indigenous people, all Canadians originally come from somewhere else. The story of immigration fills many chapters in the history of Canada—including the most recent one. To support Canada's post-pandemic recovery and chart a more prosperous future, the Government of Canada set a target of welcoming 401,000 new permanent residents in 2021, as part of the 2021–2023 Immigration Levels Plan.

The Honourable Sean Fraser, Minister of Immigration, Refugees and Citizenship, today announced that Canada has reached its target and welcomed more than 401,000 new permanent residents in 2021. Surpassing the previous record from 1913, this is the most newcomers in a year in Canadian history.

This historic achievement is particularly significant in the face of the pandemic's many challenges. From closed borders to domestic lockdowns, global migration has been upended by COVID-19. But the employees of Immigration, Refugees and Citizenship Canada (IRCC) rose to the occasion and processed a record half a million applications in 2021. To achieve this, IRCC added resources, embraced new technology and brought more processes online. These changes are all permanent improvements to Canada's immigration system.

As we continue to struggle with the pandemic, we made the most of the talent already within our borders. The majority of these new permanent residents were already in Canada on temporary status. Most notably, we launched new programs to engage essential workers, health care professionals, international graduates and French-speaking newcomers. Family reunification is another pillar of our system, and we reunited spouses and children while enabling more families to sponsor parents and grandparents. Finally, with many countries closing their doors to refugees, we continued to offer the world's most vulnerable shelter in Canada.

Canada needs immigration to drive our economy, enrich our society and support our aging population. One in 3 Canadian businesses is owned by an immigrant, and 1 in 4 health care workers is a newcomer. Business, labour market experts and economists all agree that immigration creates jobs, spurs innovation and helps address labour shortages. New Canadians contribute to communities across our country every day, and we will continue welcoming more of them as we build the Canada of tomorrow.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா




கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4


உங்கள் அனைவருக்கும்
எனது நத்தார்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
MERRY
Christmas
AND
HAPPY NEW YEAR
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

# வட இலங்கைக் கடலுக்குச் சொந்தக்காரர்களான இலங்கைத் தமிழ் மீனவர்கள் வாழ வேண்டாமா?



கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
Canada Tamil National Alliance
Registered: OC # 1926238

ரொறன்ரோ
டிசெம்பர் 22, 2021
ஊடக அறிக்கை

வட இலங்கைக் கடலுக்குச் சொந்தக்காரர்களான இலங்கைத் தமிழ் மீனவர்கள் வாழ வேண்டாமா?

தமிழ்நாட்டு மீனவர்களை வைத்து ஆளும் கட்சி உட்பட எல்லாக் கட்சியினரும் அரசியல் செய்கின்றன. இவர்கள் எதற்காக - என்ன காரணத்துக்காக - இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள் என்பதைக் கட்சிகள் சொல்ல மறுக்கின்றன. இழுவை படகுகளில் இலங்கைக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட இருமடி மற்றும் சுருக்குமடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்கள். இவர்கள் குஞ்சு மீன், நண்டு, இறால் போன்றவற்றைத் வழித்துத் துடைத்தெடுத்துக் கொண்டு போகிறார்கள். இதனால் வட இலங்கை தமிழ் மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களது கடல் வளங்கள் அழிக்கப்படுவதோடு அவர்களது வலைகளை இழுவைப் படகுகள் அறுத்து எறிந்து விடுகின்றன.



இந்த இழுவைப் படகுகளால் சின்ன வள்ளங்களில் சென்று மீன்பிடிக்கும் ஆயிரக்கணக்கான வட இலங்கைத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட வட இலங்கைத் தமிழ் மீனவர்கள் அவ்வப்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி இழுவைப் படகுகளில் வந்து தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தங்கள் கடலில் மீன் பிடிப்பதைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கை அரசைக் கேட்கிறார்கள்.

இலங்கைக் கடல் எல்லையை தாண்டுகிறோம் என்பதைத் தெரிந்தே தமிழக மீனவர்கள் வட இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகிறார்கள்.



இந்திய, தமிழக அரசுகள் இந்த மீனவர்களுக்கு இலங்கைக் கடல் எல்லையை மீற வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளன. அதனைச் சட்டை செய்யாமல் கடல் எல்லையை மீறி மீன் பிடிக்கிறார்கள். கேட்டால் தங்கள் பக்கத்தில் மீன்வளம் அழிந்து விட்டது என்கிறார்கள்.

அவர்கள் பக்கத்தில் மீன்வளம் அழிந்ததற்குக் காரணம் இழுவைப் படகுகளில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதே. இப்போது வட இலங்கைக் கடற்பரப்பில் அதே பாணியில் மீன் பிடிப்பதால் வட இலங்கைக் கடற்பரப்பில் உள்ள மீன்வளம் விரைவில் அழிந்து போகக் கூடிய அபாயம் இருக்கிறது.

அத்து மீறி வட இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் இழுவைப்படகுகளில் நுழைந்து தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி தொழிலில் ஈடுபடும்போது இலங்கைக் கடற்படை அவர்களை கைது செய்கிறது. உடனே அவர்களை விடுவிக்குமாறு தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம், தொடர் போராட்டத்தில் குதிக்கிறார்கள்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் தமிழக மீனவர்களின் கைதுகளைக் கண்டித்து காரசாரமாக அறிக்கை விடுகிறார்கள். சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவராலயத்தை முற்றுகை இடுகிறார்கள்.

மே17 இயக்கம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல். திருமாவளவன், தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் திரு பழ.நெடுமாறன் போன்றோர் கண்டன அறிக்கைகளை விடுகிறார்கள்.

பழ. நெடுமாறன் மேலும் ஒருபடி சென்று தமிழக மீனவர்களுக்கு எதிராக இராசபக்ச அரசு நாடகம் நடத்துகின்றது எனக் குற்றம் சாட்டுகிறார். இது அடிப்படை எதுவும் இல்லாத குற்றச்சாட்டு. இது நாடகமல்ல. வட இலங்கைத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பற்றிய சிக்கல். அதனை ஏன் தமிழக தலைவர்கள் கண்டுகொள்வதில்லை? அதையிட்டு ஏன் கவலைப்படுவதில்லை? தமிழ்நாடுத் தமிழ் மீனவர்கள் வாழ்ந்தால் போதுமா? வட இலங்கைக் கடலுக்குச் சொந்தக்காரர்களான இலங்கைத் தமிழ் மீனவர்கள் வாழ வேண்டாமா?

தமிழக மீனவர்களை வைத்து அரசியல் செய்யாமல் அவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதைத் தடுக்க இந்திய ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லை என்றால் இந்தக் கைதுகள் தொடர்கதையாகத் தொடர்ந்து கொண்டே இருக்கும்!

தமிழ்நாடு மீனவர்கள் ஆழ்கடலில் மீன்படிப்பதற்குரிய பயிற்சி, படகுகள், வலைகள் மற்றும் நிதி உதவிகளை ஒன்றிய, மாநில அரசுகள் செய்ய வேண்டும். இந்தச் சிக்கலுக்கு இதுவே தீர்வாகும்.




# காசிக்குச் சென்று விசுவநாதரின் ஆசிபெற்று திரும்புகையில் உன் நாடும் வீடும் செழிக்கும்' என்பார்கள் சிவனடியார்கள்

இந்தியா செய்திகள்
India News



இந்தியாவின் காசி என்னும் புனித ஸ்தலம் உணர்வுகளால் உருவாக்கப்பட்டது. இந்த அற்புதமான ஸ்தலத்திற்கு மன்னர் ஆட்சி காலத்திலிருந்தே அநேகமான வரலாற்றுச் சம்பவங்கள் உள்ளன. உலகின் பல பாகங்களிலிருந்தும் தலைவர்களும் சாதாரணமக்கள் பலரும் சென்று ஆசி பெற்று வருகின்றனர். "காசிக்குச் சென்று விசுவநாதரின் ஆசிபெற்று வீடு திரும்புகையில் உன் நாடும் வீடும் செழிக்கும்" என்பார்கள் சிவனடியார்கள். இந்த புண்ணியஸ்தலம் இந்தியாவின் அடையாளமாகத் திகழ்கிறது. இவ்வாறான நிலையில் "காசியின் வளர்ச்சியில் அனைவரது பங்கும் இருக்க வேண்டும்" என்று காசி விஸ்வநாதர் கோயிலில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக தனது சொந்த தொகுதியான வாரணாசியை பிரதமர் நரேந்திர மோடி சென்றடைந்தார். அவரை அம்மாநில ஆளுநர் ஆனந்தி பென் படேல் மற்றும் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் வரவேற்றனர். தொடர்ந்து, அங்கிருக்கும் கால பைரவர் கோயிலில் சிறப்பு வழிபாடு நடத்தி பிரதமர் நரேந்திர மோடி, அங்கிருந்து இரண்டடுக்கு படகில் பயணம் மேற்கொண்டார்.

உலகப்புகழ் பெற்ற காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு வருகை தந்த பிரதமர் மோடி, புண்ணிய நதியான காசி நதியில் புனித நீராடி வழிபாடு நடத்தினார். தொடர்ந்து காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்று சிறப்பு வழிபாடுகளை நடத்தினார். இதனையடுத்து காசி விஸ்வநாதர் ஆலய வளாக கட்டடப் பணியில் ஈடுபட்ட பணியாளருக்கு பிரதமர் நரேந்திர மோடி பூ தூவி மரியாதை செலுத்தினார். காசி விஸ்வநாதர் ஆலய வளாக கட்டடப் பணியில் ஈடுபட்ட பணியாளர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். அதனை முடித்துக் கொண்டு காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்தில் ரூ.339 கோடியில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து பிரதமர் நரேந்திர மோடி, "ஹர ஹர மகாதேவ்" என்ற கோ'த்துடன் தனது உரையைத் தொடங்கினார்.

"இன்று, இந்த மாபெரும் வளாகத்தை கட்டுவதற்கு உழைத்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கொவிட்-19 காலத்திலும், பணிகள் பாதியில் நிற்கவில்லை. "இது இப்படித்தான் இருக்கும், காசியை மாற்ற முடியாது" என்ற எண்ணம் இருந்தது. மோடியை போல் பலர் வருவார்கள், ஆனால் எதையும் மாற்ற முடியாது என்று எண்ணினர். பல மதத்தை சேர்ந்தவர்கள் காசிக்கு வந்து செல்கின்றனர். காசி இப்போது மீண்டும் புதிய ஒளி பெற்றுள்ளது.

இந்த மிகப் பெரிய நிகழ்வுக்கு அனைவரையும் வரவேற்கிறேன். இதற்கு வழிவகுத்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காணாமல் போன கோயில்கள் மீண்டும் இங்கு நிறுவப்பட்டன. இன்று இந்த நிகழ்வு வரலாற்றில் புதிய அத்தியாயமாக எழுதப்பட்டுள்ளது. காசி விஸ்வநாதர் கோயில் வளாகம் பிரமாண்டமானது மட்டுமல்ல, இந்தியாவின் சனாதன கலாசாரம் மற்றும் மரபுகளின் சின்னமாகும்.

பண்டைய காலத்தின் உத்வேகங்கள் எவ்வாறு எதிர்காலத்திற்கு வழிகாட்டுகின்றன என்பதை இங்கே காணலாம். காசி விஸ்வநாதர் கோயிலின் இருண்ட பக்கம் தற்போது முடிவடைந்துள்ளது. 3000 சதுர அடியில் இருந்த காசி விஸ்வநாதர் கோயில் வளாகம், தற்போது 5இலட்சம் சதுர அடியாக மாறியுள்ளது. இப்போது 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் பக்தர்கள் கோயிலுக்கும் அதன் வளாகத்திற்கும் வரலாம்.

காசி மிகப் புனிதமானது, மக்களின் மிக உணர்வுபூர்வ இடமாகும். இதனை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. காசி என்பது வார்த்தைகள் மட்டும் அல்ல. காசி - உணர்வுகளின் உருவாக்கம், காசி என்பது - வாழ்க்கை, காசி என்பதுதான் - உண்மை பண்பாடு. காசியில் பல தியாகிகள் உருவாகி உள்ளனர். உண்மை, அஹிம்சையின் அடையாளம் காசி. இது நமது ஆன்மிக ஆன்மாவின் சின்னம், இது இந்தியாவின் தொன்மை மற்றும் பாரம்பரியத்தின் சின்னம். காசிக்கு பல மதத்தைச் சேர்ந்தவர்கள் வந்து செல்கின்றனர். காசியில் அனைத்து தரப்பினரும் வந்து ஆசி பெற்றுச் செல்கின்றனர். இங்குள்ள அனைவருக்கும் காசியின் வளர்ச்சியில் பங்கு உண்டு.

வாரணாசியை பலர் கேலி செய்தனர். ஆனால் நோக்கம் சரியாக இருந்தால் முடியாதது எதுவும் இல்லை. கோயில்கள், மருத்துவக் கல்லூரிகள் அதிகம் உருவாக்கி வருகிறோம். இன்றைய புதிய அமைப்பு சிவன் அருளால் நடந்தேறியுள்ளது". இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசம் வாரணாசியில் ரூ.339 கோடி செலவிலான காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்தை பிரதமர் நரேந்தர மோடி தொடக்கியுள்ளார். இதற்காக வந்த அவருக்கு வீதியில் மக்கள் வரவேற்பு அளித்தனர். அவர் மக்களுடன் கலந்து மகிழ்ந்தார். மோடியின் மக்களவை தொகுதியான வாரணாசி மக்கள் பிரதமரை வழிநெடுக கூடி நின்று ரோஜா மலர்களை தூவி வரவேற்றனர். இதில், தன்ச் தெருவின் பாதுகாப்பு வளையத்திற்குள் நுழையும் வகையில் ஒரு சாது திடீரென வீதியில் இறங்கினார்.

அவரது கைகளில் பிரதமருக்கு அணிவிக்கவென சிவப்புநிறத் தலைப்பாகையும், காவிநிறத்துண்டும் இருந்தன. முன் அனுமதியின்றி வந்த சாதுவை, மடக்கிய பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை வெளியேற்ற முயற்சித்தனர்.

இதை சற்று தொலைவிலிருந்து முன் இருக்கையில் அமர்ந்தபடி தனது வாகனத்தில் வந்த பிரதமர் மோடி கவனித்து விட்டார். பிறகு வாகனத்தை நிறுத்தக் கூறி பாதுகாப்பு அதிகாரிகளை தடுத்து அந்த சாதுவை அனுமதிக்கும்படி உத்தரவிட்டார்.

இதனால், மகிழ்ந்த சாதுவின் கைகளில் தலைப்பாகையை வாங்கிய பிரதமர் மோடி அதே மகிழ்ச்சியுடன் அணிந்து கொண்டார். காவித்துண்டையும் அணிந்தவர் கைகூப்பி அங்கிருந்த தன் தொகுதி வாசிகளை வணங்கி மகிழ்ந்தார். இந்த காட்சி அங்கிருந்தவர்களால் வீடியோ பதிவாகி சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.




இந்த வீடியோ பதிவை தனது ட்விட்டரில் பதிவேற்றம் செய்த பிரதமர் மோடி, "காசியை அடைந்ததும் பெருமகிழ்ச்சி கொண்டேன். விரைவில் காசிவிஸ்வநாதருக்கான திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளேன். இதற்கு முன்பாக நான் பாதுகாவலரான காலபைரவரையும் தரிசித்தேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தர பிரதேசம் வாரணாசியில் உள்ள கால பைரவர் கோயிலில் பிரதமர் மோடி சுவாமி தரிசனம் செய்து கங்கையாற்றில் பூக்களை தூவி புனித நீராடினார். கங்கை நதிக்கு பூக்களை தூவி பூஜை செய்தார். பிரதமர் நரேந்திர மோடியின் சொந்தத் தொகுதியான வாரணாசி தொகுதியில் உள்ள காசி விஸ்வநாதர் கோயிலையொட்டிய பகுதிகள் நவீன முறையில் புணரமைக்கப்பட்டுள்ளன.

புனித நீராடி விட்டு, தண்ணீரை எடுத்து வந்து கோயிலில் அபிஷேகம் செய்யும் சம்பிரதாய பணியில் பக்தர்கள் ஏராளமான இடையூறுகளை சந்தித்து வந்தனர்.

இதை கருத்திற் கொண்டு, ரூ.339 கோடி செலவில் கோயிலில் இருந்து கங்கை நதிக்கரை வரை பக்தர்கள் வசதிக்காக பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தங்கும் அறைகள், அருங்காட்சியகம், பார்வையாளர் மாடம், சுற்றுலா மையம், உணவு கூடங்கள் என மொத்தம் 23 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் நுழைவாயில் மற்றும் இதர கட்டுமானங்கள், பாரம்பரிய முறைப்படி கற்கள் மற்றும் இதர மூலப்பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையுடன் இந்த கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உத்தரபிரதேசத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கும் நிலையில், இந்த கட்டடங்களின் திறப்பு விழா நடைபெற உள்ளது.

# 941 முதல் 950 வரையிலான 10 குறள்களை மாணவர்கள் படிக்க வேண்டும் என்கிறார் தமிழக ஆளுநர் ரவி



தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 34-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த விழாவில் தமிழக ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான ஆர்.என்.ரவி படிப்பில், பல துறையில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி கவரவித்தார்.

மேலும், இந்த விழாவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில் மாணவர்கள் மத்தியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது: இதுவரை வீட்டுக்கு பிள்ளையாக இருந்த நீங்கள், தற்போது மருத்துவ துறைக்கு வந்து விட்டதன் மூலம் நாட்டு மக்களுக்கு பிள்ளையாகி இருக்கிறீர்கள். உங்களிடத்தில் நான் ஒரு கோரிக்கை வைக்க போகிறேன். இன்றைய காலகட்டத்தில் கிராமப்புற மருத்துவ சேவை என்பது மிகவும் சவாலாக உள்ளது. மருத்துவ படிப்புகளை முடித்து விட்டு நீங்கள் மருத்துவராக பணியாற்றும்போது நீங்கள் கிராமப்புறங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் அங்கு சேவையாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த கடமையை நீங்கள் செய்ய வேண்டும். மக்கள் மருத்துவர்கள் என்னும் பெயரை பெற வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

அப்போது மருத்துவ துறைக்கு திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்கள் குறித்தும் முதல்வர் ஸ்டாலின் பேசினார். இதனை தொடர்ந்து பேசத் தொடங்கிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, "சக்தி வாய்ந்த முதல்வரான மு.க.ஸ்டாலின் அவர்களே" என்று தொடக்கத்தில் கூறியபோது அரங்கம் கைத்தட்டல்களால் அதிர்ந்தது. தொடர்ந்து பேசிய ஆர்.என்.ரவி, "மருத்துவ மாணவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பால் இந்த பட்டம் சாத்தியமாகி உள்ளது. மத்திய, மாநில அரசுகளுக்கு மக்களின் நல்வாழ்வு மிக முக்கியமானதாக உள்ளது. ஏழைகளுக்கு மருத்துவம் எளிதில் கிடைக்கும் நிலையை உருவாக்குவதே நமது எண்ணமாக இருக்க வேண்டும். இந்தியாவிலேயே சுகாதாரத்துறையில் தமிழகம் முன்னிலையில் சென்று வருகிறது. நமது சங்க இலக்கியங்களில் ஏராளமான அறிவு சார்ந்த விஷயங்கள் உள்ளன. அதனை நாம் பார்க்க வேண்டும். 941 முதல் 950 வரையிலான 10 திருக்குறள்களை மாணவர்கள் படிக்க வேண்டும்" என்று ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.



# கருணாநிதியின் உதவியாளர் சண்முகநாதன் சென்னையில் காலமானார்

முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் உதவியாளர் கோ. சண்முகநாதன் உடல்நலக்குறைவால் காலமானார். உடல் நலக்குறைவால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் காலமானார். 50 ஆண்டுகளாக கலைஞரின் உதவியாளராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நம் அனைவர் வீட்டிற்கும் ஒமைக்ரான் வருமென எச்சரிக்கிறார், பில்கேட்ஸ்

உலக செய்திகள் World News



கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பரில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கி மக்களின் இயல்பு வாழ்க்கையை தலைகீழாக புரட்டிப் போட்டது. தற்போது வரை டெல்டா, டெல்டா பிளஸ், ஒமைக்ரான் என, கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து வருகிறதே தவிர குறைந்தபாடில்லை. தடுப்பூசிகள் செலுத்திக் கொண்டவர்களையும் ஒமைக்ரான் விட்டு வைக்கவில்லை.

தென் ஆப்பரிக்காவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொ-ரோனா வைரசான ஒமைக்ரான், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் மிகவும் அதிக அளவில் பரவி வருகிறது. இதுவரை சுமார் 90க்கும் மேற்பட்ட நாடுகளில் ஒமைக்ரான் வைரஸ் பரவிட்டது.

உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோ-ம், கிறிஸ்துமஸ், புத்தாண்டுக் கொண்டாட்டங்களை ரத்து செய்ய வேண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்நிலையில், மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ், உலகை ஆட்டிப்படைக்கும் ஓமிக்ரான் பாதிப்பு குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டு இருப்பதாவது:

“இதுவரை நாம் பார்த்ததில் எந்த ஒரு வைரசையும் விட ஒமைக்ரான் வேகமாகப் பரவி வருகிறது. ஒமைக்ரான் உங்களை எப்படி தாக்குகிறது என்பது பெரிதாகத் தெரியாது. இதில் டெல்டாவை விட பாதிப்பு அதிகமாக இல்லை. ஆனாலும் பரவும் தன்மை மிக வேகமாக உள்ளது.

கொரோனாவின் இரண்டாம் அலை ஓய்ந்த பிறகு வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பும் என நம்பினோம். ஆனால், நாம் தொற்றுநோயின் மோசமான பகுதிக்குள் நுழையும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஓமைக்ரான் நம் அனைவரின் வீட்டிற்கு வரும்.

என்னுடைய நெருங்கிய நண்பர்கள் வீட்டில் இப்போது அது உள்ளது. இதனால் என் விடுமுறைத் திட்டங்களை ரத்து செய்துவிட்டேன். இதில் நல்ல செய்தி என்னவென்றால் ஓமைக்ரான் மிக விரைவாக கடந்து செல்லும் என்பது தான்.

ஒரு நாட்டில் ஓமைக்ரான் புகுந்தால் அது அங்கு கொரோனா அலையாக 3 மாதங்களுக்கும் குறைவாக நீடிக்கும். நாம் சரியான நடவடிக்கைகளை எடுத்தால், தொற்றுநோய் 2022 இல் முடிவுக்கு வரும் என்று நான் இன்னும் நம்புகிறேன்.”

இவ்வாறு பில்கேட்ஸ் பதிவிட்டுள்ளார்.

# 12 மணி நேரம் கடலில் நீந்தி கரையை அடைந்த மடகாஸ்கர் தீவின் அமைச்சர் ஒருவர்



மடகாஸ்கர் தீவில் கடந்த திங்கட்கிழமை அன்று, முறையாக அனுமதி பெறாமல் சுமார் 130-க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு, சரக்கு கப்பல் ஒன்று இந்தியப் பெருங்கடலில் வடகிழக்கு திசையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது, திடீரென கப்பலில் பழுது ஏற்பட்டது. அதனால் கப்பலில் தண்ணீர் புகுந்து கப்பல் மூழ்கத் தொடங்கியது. இந்த எதிர்பாராத விபத்தால், கப்பலில் பயணம் செய்தவர்களில் 39 பேர் கடலில் மூழ்கி இறந்துவிட்டனர். 68 பேரின் நிலை என்னவெனத் தெரியாமல் இருந்துவந்தது. அதையடுத்து, பயணி-களை மீட்பதற்காக மடகாஸ்கர் தீவிலிருந்து மீட்புப்படை கிளம்பியது. அந்த மீட்புப்படையுடன், ஹெலிகாப்டரில் மடகாஸ்கர் அமைச்சர் கேலேவும் உடன் சென்றிருந்தார். இந்த நிலையில், அவர் சென்ற ஹெலிகாப்டர் திடீரெனப் பழுதானது.

மீட்பு நடவடிக்கை ஒன்றின்போது ஹெலிகொப்டர் கடலில் விழுந்த நிலையில் மடகஸ்கார் அமைச்சர் ஒருவர் 12 மணி நேரம் நீந்தி உயிர்தப்பியுள்ளார்.

“இது நான் இறக்கும் நேரம் இல்லை” என்று மீட்கப்பட்ட பொலிஸ் அமைச்சர் செர்கே கெல்லே தூக்குப் படுக்கையில் இருந்தபடி தெரிவித்தார்.

அவருடன் ஹெலியில் சென்ற இரு பாதுகாப்பு அதிகாரிகளும் உயிர் தப்பியுள்ளனர். நாட்டின் வட கிழக்கு பகுதியில் பயணிகள் படகொன்று மூழ்கிய நிலையில் இவர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த படகு விபத்தில் குறைந்தது 39 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் தாம் திங்கட்கிழமை இரவு 7.30 மணி தொடக்கம் அடுத்த நாள் காலை 7.30 மணி வரை நீந்தி கரையை அடைந்ததாக 57 வயதான கெல்லே தெரிவித்தார். தமக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் அதிக குளிரை உணர்வதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News



# இலங்கையில் பிரதமர் மகிந்தாவால் "நாவலர் ஆண்டு" பிரகடனப்படுத்தப்பட்டது

*மன்னார் நிருபர்*

சைவத் தமிழ் உலகிற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் இருநூறாவது ஜனன ஆண்டான 2022 ஆம் ஆண்டை "நாவலர் ஆண்டு" என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனம் செய்வதற்கான தீர்மானத்தை அங்கீகரிக்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் சனிக்கிழமை (17) அலரி மாளிகையில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரகடனத்திற்கு அங்கீகாரத்தையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் வகையில் பிரதமரினால் அங்கீகார கடிதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகப்புகழ் பெற்ற ஓவியர் திரு. மு. பத்மவாசன் அவர்களினால் தத்ரூபமாக வரையப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் இரு திருவுருவப் படைப்புகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் திருவுருவ வர்ணப் படைப்பு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் நல்லை ஆதீனக் குரு முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள் ஆகியோரிடம் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது. மற்றைய படைப்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் திரு.சி.தனபாலா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் திரு. வே.கந்தசாமி ஆகியோரிடம் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.

குறித்த பிரகடன நிகழ்வில், நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் வணக்கத்திற்குரிய கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், அங்கஜன் இராமநாதன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர்களான எஸ்.தில்லை நடராஜா மற்றும் திருமதி.சாந்தி நாவுக்கரசன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சி.தனபாலா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் வே.கந்தசாமி, திரு.சுந்தரலிங்கம், திரு.சுப்பிரமணியன், திரு.விக்னேஸ்வரன் ஜெயராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# வெளிநாட்டிலுள்ள மூன்று தூதரகங்களை மூட அவசர தீர்மானம்




வெளிநாட்டில் உள்ள மூன்று இலங்கை தூதரகங்களை மூட வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி நைஜீரியாவில் உள்ள இலங்கை தூதரகம், ஜேர்மனியின் பிராங்பேர்ட்டில் உள்ள இலங்கை துணை தூதரகம் மற்றும் சைப்ரஸில் உள்ள இலங்கை துணை தூதரகம் ஆகியவற்றை மூட வெளிவிவகார அமைச்சு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் செலவீனங்களை குறைத்து அமெரிக்க டொலர்களை சேமிக்கும் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே இலங்கை தூதரகங்கள் மூடப்படவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிராங்பேர்ட் துணைத் தூதரகம் மூடப்படுவதால், பேர்லினில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அதன் செயல்பாடுகள் மாற்றப்படும் என்றும், நைஜீரியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் செயல்பட முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். தற்போதைய சூழ்நிலைகள். மேலும், சைப்ரஸில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் மூடப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இது தற்போது மற்ற அனைத்து அமைச்சகங்களாலும் பின்பற்றப்படும் செலவுக் குறைப்பு செயல்முறையின் ஒரு பகுதியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அனைத்து அமைச்சுக்களும் தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னதாக கோரிக்கை விடுத்துள்ளார்.

# வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்களே: எம்.பி சாணக்கியன் தெரிவிப்பு!!!



காணியதிகாரம் வேண்டும். இதனைத்தான் நாங்கள் அரசியல் உரிமை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். காணியதிகாரம் எங்களிடமிருந்தால் மயிலத்தமடு மாதவனையில் குடியேறியுள்ளவர்களை நாங்களே அதிகாரிகளிடம் கூறி வெளியேற்றியிருப்போம். அது நடக்காது போகியிருந்தால் எங்களிடமிருக்கும் பொலிஸ் அதிகாரங்களை கொண்டு செயற்படுத்தியிருப்போம்.

இன்று நாங்கள் எதையும் செய்ய முடியாது உள்ளோம். எங்களிடம் எந்த அதிகாரமுமில்லை. இப்படி பயணித்தால் வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் இல்லாத நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம். வடக்கு கிழக்கு என்று நாங்கள் பார்க்க முடியாது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்கள். அது எங்களின் நிலம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை (19) பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், எங்கள் கைகளில் அதிகாரம் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லை என்பதற்காக அதிகாரம் வேண்டாம் என்று எங்களினால் கூற முடியாது.

அதிகாரம் எங்களுக்கு தேவையாக இருக்கிறது. மயிலத்தமடு பிரச்சினைக்கு நானும் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாவும் இணைந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எங்களின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி வழக்கு பேசி வருகிறார். அந்த வழக்கை கொண்டு இவர்களை வெளியேற்றுவது மட்டுமல்ல நோக்கம். அந்த இடத்தை மேச்சல்தரையாக்க வேண்டும்.

தமிழர்களின் மேச்சல்தரையான மயிலத்தமடு மாதவனை, கெவிலியாமடு திபுலான, வட்டமடு போன்ற அனைத்தையும் பிரித்து ஏனைய சமூகங்களுக்கு கொடுக்க முனைப்பு நடந்துகொண்டிருக்கிறது. இதனை எங்கள் மக்கள் உணரவேண்டும். இவற்றெல்லாம் மாற்றியமைக்க அரசியல் அதிகாரம் எங்களின் கைக்கு வரவேண்டும்.

காணியதிகாரம், பொலிஸ் அதிகாரம் எங்களுக்கு தேவை. பொலிஸ் அதிகாரம் எங்களிடம் இருந்தால் நாங்கள் விடயங்களை கையாளுவோம். இப்போது எங்களின் பிரச்சினைகளுக்கு கொழும்பில் இருந்துதான் அறிவித்தல்கள் வருகிறது.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் இல்லாத நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம். வடக்கு கிழக்கு என்று நாங்கள் பார்க்க முடியாது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்கள். அது எங்களின் நிலம் அதனை பாதுகாக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு சில வேலைத்திட்டங்களை செய்து கொண்டிருக்கிறது என்றார்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் வேலணையில் உலருணவு விநியோகம்





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை வேலணை, தாவடி, நாவற்குழி, மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழுகின்ற, தொழில்வாய்ப்பிழந்த மற்றும் கொரோனாப் பேரிடர் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. இதனொரு கட்டமாகவே ஞாயிற்றுக்கிழமை தெரிவுசெய்யப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர் பகுதிகளில் கால்பதிக்கும் சீனா!! தமிழர் தேசத்தின் அரசியல் இறையாண்மை நிலைநாட்டப்பட வேண்டும்: நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

தமிழர் தாயகத்தில் சீனா மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து முழுமையாக விலகிக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், எந்த திட்டங்களானாலும் தாயக மக்களிடமிருந்து வெளிப்படையான இசைவு பெற்ற பிறகே தொடங்க வேண்டும் என இடித்துரைத்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீன வட்டத்தை விரிவாக்கும் ஆட்டத்துக்காகத் தமிழர் தாயகப் பகுதிகளை பலியிடவிடாது, தமிழர் தேசமும், தமிழர் அரசியல் தலைமைகளும் தமது அரசியல் இறையாண்மையினை செலுத்த வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத்தீவின் தமிழர் தாயகப்பகுதியின் வட புலத்தே, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இயற்றும் மின்சக்தி திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ள சீனா, இந்த முடிவுக்கு "மூன்றாம் தரப்பின் பாதுகாப்பு" காரணமென கூறியுள்ளது. சீனாவின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது எனினும் தமிழர் தாயகத்தின் சீனா மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து முழுமையாக விலகிக் கொள்ள வேண்டும்.

போருக்கு பின்னராக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தாயக பகுதிகளில் தொடங்கப்படும் திட்டங்கள் எதுவானாலும் அம்முயற்சிக்கு தாயக மக்களிடமிருந்து வெளிப்படையான இசைவு பெற்ற பிறகே தொடங்க வேண்டும். இசைவு என்பது திட்டங்களின் அரசியல், பொருளியல் கூறுகளுக்கு மட்டுமன்று, நம்பகமான பன்னாட்டு அமைப்பொன்றின் சூழலியல் மதிப்பாய்வின் ஊடாகச் சூழலியல் கூறுகளுக்கும் இசைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

சீன நிறுவனங்களுக்கு திட்டங்கள் வழங்குவதன் மூலம் இந்தியாவைச் சுற்றிவளைக்கவும் அடக்கி வைக்கவும் சீனாவுக்கு உதவும் சிறிலங்காவின் நகர்வுகள் தமிழர் இறையாண்மை மீது நெடுந்தாக்கத்தினை ஏற்படுத்தும். வட புலத்தே யாழ் குடா நாட்டையும் இந்தியாவின் தமிழ்நாட்டையும் பிரிக்கும் குறுகலான பாக்கு நீரிணையில் அமைந்த சிறு தீவுகளான நெடுந்தீவு, அனலைத்தீவு, நைனாத்தீவு ஆகிய இடங்களில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு சைனோ சர் ஹைப்ரிட் டெக்னாலஜி என்ற சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிறிலங்காவுக்கான சீனத் தூதரகம் "மூன்றாம் தரப்பு" எதுவென்று சொல்லா விட்டாலும் அது இந்தியாதான் என்று நம்பப்படுகிறது. அந்தச் சிறு தீவுகளில் இந்திய நிறுவனமான அதானி குழுவுக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள திட்டப் பணியை வழங்கும் ஒப்பந்தத்தை கடந்த பெப்ரவரியில் கொழும்பு நீக்கம் செய்து, அதனை சீன நிறுவனத்துக்கு வழங்கிய போது, இந்தியா தனது பாதுகாப்பு சார்ந்த கவலைகள் தெரிவித்தது.

இந்திய நிறுவனத்தின் முயற்சியை சீனம் கீழறுத்த செயல் அந்த நேரத்தில் சிறிலங்காவில் தன் நலன்களைக் காத்துக்கொள்வதோடு அண்டை நாடுகளோடு இந்தியாவுக்குள்ள உறவுகளைக் கெடுக்கவும் கிழக்காசிய நாடாகிய சீனத்துக்குள்ள வல்லமையாகக் கருதப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குப் முனையத்தின் இரண்டாம் கட்ட வளர்ச்சிக்கு இந்தியாவுடனும் ஜப்பானுடனும் செய்த ஒப்பந்தத்தை சிறிலங்க அதிபர் கோத்தபய ராஜபக்சே, பெய்ஜிங்கின் தூண்டுதலால் முறித்துப் போட்டதாகச் செய்தி வந்த நேரத்தில் அந்தச் சிறு தீவுகளில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்ட நிலையங்களை நிர்மாணிக்கும் முன்மொழிவு பிறந்தது. இந்தியாவுடனும் ஜப்பானுடனும் செய்த ஒப்பந்தப்படி கிழக்குப் முனையத்தில் சிறிலங்காவின் துறைமுகப் திணைக்களத்துக்கு 51வீத பங்குகள் இருக்கும். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் 49வீத பங்குகள் இருக்கும் என கூறப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சிறிலங்கா மறுத்தன் காரணம் என்ன? சீன நிறுவனங்களை வளர்த்தெடுக்கும் வசதிகளையொட்டி முனையத்தை நடத்துவதில் தன் புவிசார் அரசியல் போட்டி நாடுகளான இந்தியாவும் ஜப்பானும் எவ்விதப் பங்கும் வகிக்க விடாமல் தடுக்க பெய்ஜிங் அழுத்தம் கொடுத்ததாலேயே கிழக்குப் முனையத்தை வளர்த்தெடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற சிறிலங்கா மறுத்ததாக பரவலாக நம்பப்படுகிறது. இந்தியாவும் ஜப்பானும் அமெரிக்காவின் நெருங்கிய தோழடமை நாடுகள். நாற்கூட்டுப் பாதுகாப்பு உரையாடல் (குவாட்) பங்காளிகள். ஆனால் நாட்டின் சொத்துகளை அயல் நாடுகளுக்கு விற்கத் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததைக் காரணமாகக் காட்டியே சிறிலங்கா இந்தப் பேரத்திலிருந்து விலகிக் கொண்டது. சிங்கள மக்களும் இந்திய மக்களும் பண்பாட்டுறவு என்றும் சிறிலங்கா இந்தியாவின் நட்பு நாடு என்றும் தம்பட்டமடிக்கும் கொழும்பின் நிலையினை இந்த விலக்கல், அதன் உண்மை முகத்தை வெளிச்சம்போட்டு காட்டியது. 2019 மே மாதம் செய்த மூல உடன்பாட்டை மதித்து நடக்கும்படி கொழும்பைக் நியூ டெல்லி கேட்டுக் கொண்டது.

திட்டங்கள் தொடர்பாக இந்தியாவுக்கு அளித்த உறுதிப்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ளும் ராஜபக்சேயின் நகர்வு, இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்த கருத்துக்களை மீளுறுதி செய்கிறது. 1998இல் பெர்னாண்டஸ் கூறினார்: "சீனா எதிர்காலத்தில் முதலாம் எண் அச்சுறுத்தலாகும்.... இடைக்கால நோக்கிலும் நெடுங்கால நோக்கிலும் இந்தியாவுக்கு முதன்மையான பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருந்து வரவே வாய்ப்புண்டு. சீனத்தின் அச்சுறுத்தல் பாகிஸ்தானின் அச்சுறுத்தலை விடவும் பெரிது. இந்தியாவின் பாதுகாப்பு பற்றிக் அக்கறை எவரும் இந்தக் கருத்தை ஏற்கத்தான் வேண்டும்".

மேற்கே பாகிஸ்தானில் குவாதர் தொடங்கி கிழக்கில் கோக்கோ தீவுகள் வரை இந்தியா மீதான கடல்சார் சுற்றிவளைப்பானது தெற்கே சிறிலங்காவில் பெய்ஜிங்கின் வளரும் செல்வாக்கினால் முழுமையடைகிறது. இந்தியப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் மோகன் மாலிக் கூறியது போல், "இந்தியாவின் பால் சீனத்தின் மூலோபாயம் என்பது சுற்றிவளைத்தல், மூடியடைத்தல், சிக்கவைத்தல் ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டது". 2017ஆம் ஆண்டு தெற்கிலங்கையில் இந்தியப் பெருங்கடல் கடற்போக்குவரத்து வழிகளையொட்டி அமைந்த அம்பாந்தோட்டாவில் சீனம் கட்டிய துறைமுகத்தை பெய்ஜிங்கிடம் 99 ஆண்டுக் குத்தகைக்குக் கொழும்பு ஒப்படைத்தது. 2014ஆம் ஆண்டு கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல் நிறுத்தப்பட்ட போது புது டெல்லி வன்மையாக எதிர்த்திருந்தது.

இலங்கையின் வட கடலோரத்தில் யாழ் குடாநாடும் அதன் கடற்பகுதியில் அமைந்த சிறு தீவுகளும் தொன்றுதொட்டுத் தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்துள்ளன. ஆக, அவை தமிழர் தாயகத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும். மேலும், இலங்கைத் தீவின் தமிழர் தாயகம் பகுதியும் அதையொட்டிய கடற்பிராந்தியம் தமிழர் இறைமைக்கு உட்பட்டவை. இதனை உறுதி செய்திடத் தமிழர் தேசமும், தமிழர் அரசியல் தலைமைகளும் தமது அரசியல் இறையாண்மையினை செலுத்த வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

-------------

## China Should Withdraw Plans for Projects in Tamil Areas in Sri Lanka: TGTE

China suspended its renewable hybrid energy project on the islets off Tamil-majority northern Jaffna Peninsula in the island of Sri Lanka in early December, citing "security concerns from a third party.

While this is a welcome move, China should withdraw entirely from development projects in the Tamil areas, said Mr. Visuvanathan Rudrakumaran, Prime Minister of Transnational Government of Tamil Eelam (TGTE).

"Any future development project initiated in the Tamil areas should only be done after explicit consent is obtained from the people of the North East for the undertaking. Consent should not only be for political and economic aspects of development projects, but on environmental features as well, through an environmental impact assessment by a credible international body."

"Sri Lanka's moves assisting China to encircle and contain India by awarding Chinese companies development projects will have a lasting impact on Tamil sovereignty. The renewable energy project awarded to the Chinese company Sino Sar Hybrid Technology were in Delft, Analativu, and Nainativu, which are islets in the narrow Palk Strait that divides the Tamil-majority Jaffna Peninsula and India's Tamil Nadu."

Although the "third party" was not named by the Chinese embassy in Sri Lanka, it is believed to be India. India voiced security concerns in February when the Colombo revoked the agreement to develop US $12 million worth project on the islets with the Indian firm Adani Group and awarded it to the Chinese company. Under terms of the agreement, the project was to be developed jointly by the Chinese company and the Ceylon Electricity Board. China undercutting the Indian company's bid was seen at that time as the East Asian nation's power not only to secure its interests in Sri Lanka but also undermine New Delhi's relationship with its neighbours, said Mr. Rudrakumaran.

"The proposal to install a renewable energy project on the islets came as Sri Lanka President Gotabaya Rajapaksa's government rescinded a contract with India and Japan, reportedly on Beijing's instigation, for second phase development of the Eastern Container Terminal (ECT) at the Colombo Port. Under the agreement with India and Japan, the Sri Lanka Ports Authority was to own 51% shares in the ECT, while India and Japan would hold 49%."


Sri Lanka's refusal to go ahead with the project to develop the ECT is widely seen as pressure from Beijing to prevent its geopolitical rivals in the region, India, and Japan – both close U.S. allies and partners in the Quadrilateral Security Dialogue (QUAD) – having any part to play in running of the terminal, which is adjacent to facilities being developed nearby by Chinese companies. Sri Lanka however cited objections by trade unions to sell the country's assets to foreign countries as the reason to withdraw from the deal. The ostensible reason shatters the often-trumpeted assertion by Colombo that the Sinhala people are culturally related to the Indian people and Sri Lanka is a friendly country of India's. India protested the move and asked Colombo to honour the original agreement of May 2019.

The move by the Rajapaksa to withdraw from commitments to India on development projects reinforces the concerns of former Defence Minister of India, George Fernandes who stated in 1998 that "China is potential threat number one... China is and is likely to remain the primary security challenge to India in the medium and long-term... The potential threat from China is greater than that of Pakistan and any person who is concerned about India's security must agree with that."

The maritime encirclement of India from Gwader in Pakistan in the West to Koko Islands in the East, is complete with Beijing's growing influence in Sri Lanka, which is South. As Professor Mohan Malik of Indian Defence said, "China's strategy towards India have three elements namely encirclement, envelopment, and entanglement." In 2017 Colombo handed over a Chinese-built port in Hambantota, which is in southern Sri Lanka and adjacent to the Indian Ocean shipping lanes, to Beijing on a 99-year lease. In 2014, a Chinese submarine berthed in the Colombo port provoking strong protests from New Delhi.

The Jaffna Peninsula on Sri Lanka's northern coast and the islets off its shoreline, are part of the territory that has been under the control of the Tamils from ancient times. As such, they are an integral part of the Tamil homeland. Furthermore, the Northeastern part of the Island and the adjacent seas fall within the purview of Tamil sovereignty. Tamils and their political leadership should exercise their sovereignty and their right to self-determination more forcefully to ensure that Colombo does not sacrifice parts of the Tamil homeland in its game to broaden Chinese orbit in the Indian Ocean.

# மட்டக்களப்பு அரசடியில் வர்த்தகரின் மனைவியை கொலை செய்து நகைகள் கொள்ளையிட்டவர்கள் மடக்கிப் பிடிப்பு



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வர்த்தகர் ஒருவரின் மனைவியைக் கொலைசெய்துவிட்டு அவரது நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற இருவர் பொதுமக்களினால் மட்டக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

20ம் திகதி திங்கட்கிழமையன்று பிற்பகல் மட்டக்களப்பு அரசடி, பார் வீதியிலுள்ள வீட்டிலேயே இந்த துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. குறித்த வீட்டுக்கு வழமையாக வந்து வேலைகள் செய்துவிட்டுச் செல்லும் தகப்பனும் மகளுமே இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளது தொடர்பாக ஆரம்பக் கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தகப்பனும் மகளும் பசிக்கிறது சாப்பாடு தாருங்கள் என்று கூறி குறித்த பெண்ணிடம் சாப்பாடு வாங்கி உண்ட பின்னரே இந்தக் கொலையைச் செய்துள்ளனர்.

இன்று வீட்டுக்கு வந்தவர்கள் குறித்த வீட்டில் வேலைகளைச் செய்துவிட்டு உணவு உண்டுகொண்டிருக்கும்போது திடீரென குறித்த வீட்டின் உரிமையாளர் பெண் மீது கத்தியால் சரமாரியாக வெட்டியுள்ளதுடன் கழுத்தை வெட்டிய பின் தாலிக்கொடியை பறித்துள்ளதுடன் காதணிகளைக் கழற்ற முடியாத நிலையில் அதனை வெட்டி எடுத்துச்சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் குறித்த பெண்ணை கொலைசெய்துவிட்டு அங்கிருந்த தங்க நகைகளை களவாடிச்சென்றபோது வீதியில் நின்றவர்கள் அவர்களின் உடைகளில் இரத்தக்கறை உள்ளதை கண்டு சந்தேகம்கொண்டு துரத்திச்சென்று இருவரையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின்போது 50 வயதுடைய தயாவதி செல்வராஜா என்னும் பெண்ணே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்கு வந்த மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்ட தடயவியல் பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த பகுதியில் பெருமளவு மக்கள் ஒன்றுகூடியதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளதை காண முடிந்தது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மெசிடோ நிறுவனத்தினால் வடக்கில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்வு ஆரம்பம்



*- மன்னார் நிருபர்*

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஊடாக (மெசிடோ) வடக்கில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொதிகள் அடிங்கிய நிவாரணப் பொருட்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு 20ம் திகதி திங்கட்கிழமை குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காயாக்குளி கிராமத்தில் இடம் பெற்றது.

நாட்டில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெய்த கடும் மழையினால் வடக்கு மாகாணத்தில் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட கரையோர மீனவ குடும்பங்கள் மற்றும் அதி கூடிய வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 2000 குடும்பங்களுக்கு தலா 2700 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப கட்ட நிகழ்வாக மன்னார் முசலி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காயாக்குளி கிராமத்தில் 50 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.



குறித்த நிகழ்வில் மெசி-டோ நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ஏனைய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படவுளயும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்



**- மன்னார் நிருபர்**

தலை மன்னார் கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்களை எதிர்வரும் 3 ஆம் தி-கதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் திங்கட்கிழமை (20) உத்தரவிட்டுள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (19) மதியம் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளி-டம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்கள் திங்கட்கிழமை (20) காலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 03 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் உத்தரவிட்டார்.



இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ராமேஸ்வரம், மண்டபம், தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மேற்படி கைது செய்யப்பட்டு மன்னார் நீரியல் வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

12 மீனவர்களில் ஒருவருக்கு திடீ-ரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக மன்னார் பொது வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் ஆரம்பமாகியுள்ளது



தமிழ் பேசும் மக்களின் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலை-வர் சம்பந்தன் தலைமையில் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு கொழும்பில் ரெலோ-வின் முன்னெடுப்பில் சிறப்புடன் ஆரம்பமாகியுள்ளது.

02ம் திகதி நவம்பர் 2021 திண்ணையில் நடந்த சந்திப்பு மற்றும் 12-02-2021ம் ஆண்டு கொழும்பில் நடந்த சந்திப்பின் தொடர்ச்சியாகவும் இக்கூட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே எமது உறுதியான நிலைப்பாடு. அதுவே எமது அரசியல் இலக்கு. அதில் ஒருபோதும் விட்டுக் கொடுப்புக்கு இடம் இல்லை.

ஆனால் ஏற்கனவே அரசியல் அமைப்பில் உள்ள 13யு முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தி மாகாணசபை தேர்தல்கள் விரைவில் நடாத்தப்படவேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்த இந்திய அரசிடம் கோரிக்கை சமர்ப்பிக்கும் வரைபை இறுதி செய்யும் முயற்சியில் இக்கூட்டம் நடைபெறுகிறது.என ரெலோ-வின் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் – பிரதி பொலிஸ் அதிபரிடம் முறைப்பாடு



ஊடகவியலாளருக்கு விடுக்கப்பட்ட தொடர்ச்சியான கொலை அச்சுறுத்தல் காரண-மாக அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக குறித்த ஊடகவியலாளரை இலக்கு வைத்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தை சேர்ந்த உயர் பொலிஸ் அதி-காரி ஒருவர் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த முன்னணி தொலைக்காட்சி ஒன்றின் பிராந்திய ஊடகவ-ியலாளரான கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வரும் சஹீர் அஹமட் பாறுக் (வயது 29) மீது குறித்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உயர் அதிகாரியினால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது பிரத்தியேக வேலை ஒன்றுக்காக அக்கரைப்பற்று பிரதான வீதியில் இருக்கின்ற முஸ்லிம் மையவாடிக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் இரவு 8.35 பயணம் செய்த வேளை EP முகு 0842 இலக்கமுடைய காரில் வந்த குறித்த உயரதிகாரி தனது (ஊடகவியலா-ளர்) மோட்டார் சைக்கிளை நிறுத்தி இவ்வச்சுறுத்தலை தனக்கு விடுத்துள்ளதாக ஊடகங்களிடம் பேசும் போது குறிப்பிட்டார்.

அத்துடன் மேலும் தெரிவித்த குறித்த ஊடகவியலாளர் மோட்டார் சைக்கிளை அந்த இடத்தில் நிறுத்திய பின்னர் சிவிலுடையில் குறித்த அதிகாரி என்னை நோக்கி வருவதை அவதானித்தேன். அதன் பின்னர் என்னை நோக்கி அவர் கடும் கோபத்தில் இவ்வாறு சொன்னார்.




எனக்கு எதிராக உதவி பொ-லிஸ் அத்தியட்சகர் மற்றும் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் உள்ள முறைப்பாடுகளை மீளப்பெறல் வேண்டும் அத்துடன் மனித உரிமை மீறலில் வழக்கு விசாரணையை வாபஸ் பெற வேண்டும் அப்படி இல்லாவிட்டால் உன்னை இந்த மையவாடிக்கு வெகுவிரைவில் புதைப்போம்.. நீ யாருடன் மோதுகிறார் என்று உனக்கு தெரியாதா...

வருகின்ற வாரத்துக்குள் மனித உரிமை மீறல் வழக்கு விசாரணையில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இடம் பிடிப்பாய் இல்லாது விட்டால் உயிருடன் புதைக்கபடுவாய்.. அச்சுறுத்தி விட்டு சென்றார் என குறிப்பிட்டார்.

மேலும் குறித்த உயர் பொலிஸ் அதிகாரி கடந்த 02.09.2021 அன்று ஊடக கடமைக்குச் சென்ற வேளை என்னை பொலிஸ் குழு ஒன்றுடன் இணைந்து தாக்கி காயப்படுத்தியதுடன் கமராவினையும் உடைத்துள்ளதை என்னிடம் உள்ள வீடீயோ ஆதாரத்தில் குறிப்பிட்டுள்ளேன்.எனவே இது தொடர்பாக எனக்கு நீதி ஒன்றினை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பெற்றுத்தர வேண்டும். எனக்கு திருமணம் ஆகி 6 வயது, 1 வயது குழந்தைகள் உள்ளன என தெரிவித்தார்.

# மேலும் 14 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது



யாழ்ப்பாணம் - எழுவைதீவு அருகே இன்று மீன்பிடித்துக் கொண்டிருந்த 14 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களையும் படகுடன் கைது செய்து மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

அதன் பின்னர் யாழ்ப்பாண கடற்றொழில் நீரியல்வள துறை அதிகாரிகள் ஊடாக இந்திய மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை நேற்று 43 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு சவாலாக தோன்றிய எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள்



இலங்கையில் கடந்த நவம்பர் மாத ஆரம்பம் முதல் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளில் ஆங்காங்கே தீ பரவல் மற்றும் வெடிப்பு சம்பவங்கள் பதிவாக ஆரம்பித்தன. இச்சம்பவத்தின் விளைவாக உயிரிழப்புக்களும், காயங்களும் மாத்திரமல்லாமல் சொத்து சேதங்களும் கூட ஏற்பட்டுள்ளன.

இதன் காரணத்தினால் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளைப் பயன்படுத்துவது தொடர்பில் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் இவ்விதமான சமையல் அடுப்புகளைப் பயன்படுத்துவதை பலர் தவிர்த்துக் கொள்ளவே விரும்புகின்றனர். இன்னும் பலர் மின்சார மற்றும் மண்ணெண்ணெய் சமையல் அடுப்புகளைப் பயன்படுத்தவும் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளில் ஏற்படும் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்திய அதிகாரிகள், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவும் அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறியவுமென விஷேட குழுவொன்றை நியமித்தார்கள். அக்குழுவினர் இச்சம்பவங்கள் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளை அடிப்படையாகக் கொண்ட அறிக்கை குழுவின் தலைவரான மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பலகேவினால் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த குழுவின் உறுப்பினரான மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிடுகையில், “இந்நாட்டில் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளில் தீ பரவல் மற்றும் வெடிப்பு சம்பங்கள் 847 இவ்வருடம் பதிவாகியுள்ளன. இச்சம்பவங்களினால் 07 பேர் உயிரிழந்துள்ளதோடு 16 பேர் காயமடைந்துமுள்ளனர். 18 சம்பவங்களில் சொத்து சேதங்களும் ஏற்பட்டுள்ளன“ என்று தெரிவித்துள்ளார்.

அதேநேரம் “இச்சம்பவங்களில் 797 லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு சொந்தமான எரிவாயு சிலிண்டர்கள் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புகளிலும் 50 வெடிப்புச் சம்பவங்கள் லா∴ப் எரிவாயு நிறுவனத்திற்கு சொந்தமான சிலிண்டர்கள் பயன்படுத்தப்படும் அடுப்புகளிலும் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறியுள்ள அவர், இவ்வருடம் நவம்பர் மாதம் வரையும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் 28 இலட்சம் சமையல் எரிவாயு சிலிணடர்களையும் லா∴ப் எரிவாயு நிறுவனம் 2 இலட்சத்து 80 ஆயிரம் சிலிண்டர்களையும் சந்தைப்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

என்றாலும் எரிவாயு சமையல் அடுப்புகளில் ஏற்படும் வெடிப்பு சம்பவங்களை மக்கள் தவிர்த்துக் கொள்வதற்கு உதவும் வகையிலும், தரமான எரிவாயு சிலிண்டர்களை அவர்கள் அடையாளம் கண்டு கொள்ள உதவும் நோக்கிலும் சிவப்பு நிறத்திலான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறான சிலிண்டர் பயன்படுத்தப்பட்ட சமையல் அடுப்புகளிலும் 12 வெடிப்பு சம்பங்கள் பதிவாகியுள்ளன என்றும் பிரதி பொலிஸ் மாஅதிபர் குறிப்பிட்டார். அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் ஊடாக இந்த விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அதேநேரம் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புக்களில் இவ்வாறு தீ பரவல் மற்றும் வெடிப்பு சம்பவங்கள் ஏற்படக் காரணமாக அமைந்திருக்கும் விடயம் சரியாக அடையாளம் காணப்பட்டு அவ்விடயத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும். அதன் ஊடாக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்கக் கூடியதாக இருக்கும்.

அத்தோடு எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தப்படும் சமையல் அடுப்புக்களில் இவ்வாறு தீ பரவல் மற்றும் வெடிப்பு சம்பவங்கள் ஏற்படுவதன் காரணத்தைக் கண்டறியவும் தவறக் கூடாது. அவற்றில் சதி, சூழ்ச்சிகள் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பன குறித்தும் ஆராய வேண்டும். அவ்வாறான தீய செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பின் எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு அவ்வாறான மோசடியான நடவடிக்கைகளில் எவராவது சம்பந்தப்பட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக இவ்விதமான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் எதிர்காலத்தில் நாடும் மக்களும் முகம் கொடுப்பதை தவிர்த்துக் கொள்ள முடியும். இவ்வாறு அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மன்னாரில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள்

- மன்னார் நிருபர்

மன்னாரில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) வியாழக்கிழமை உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக தொழில் வாய்ப்பை இழந்த மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தலைமன்னார் கிராமம், ஓலைத்தொடுவாய், சாந்திபுரம், ஜிம்ரோன் நகர் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கும் அதிகூடிய வறுமைக்கோட்டின் கீழ் உள்ள தெரிவு செய்யப்பட்ட 140 குடும்பங்களுக்கு தலா 2600 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ அவர்களின் பணிப்பில் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வியாழக்கிழமை (23) காலை வழங்கி வைத்துள்ளனர்.

குறித்த நிகழ்வில் மன்னார் நகர உதவி திட்டப் பணிப்பாளர் றொகான், குறித்த பகுதிகளை சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைத்த மையும் குறிப்பிடத்தக்கது.




# இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதே வட பகுதி மீனவர்களின் எதிர்பார்ப்பு – வடமாகாண கடற்றொழிலாளர் இணைய மன்னார் மாவட்ட தலைவர்




- மன்னார் நிருபர்

நாங்கள் பல்வேறு போராட்டங்களையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்ட போது மேற்கொள்ளாத இந்திய மீனவர்களின் கைது நடவடிக்கைகள் சீன தூதுவர் வருகைக்கு இடம் பெற்றுள்ள நிலையில் சீனத் தூதுவரின் வருகை எதனை குறிக்கின்றது? என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் என்.எம்.ஆலம் கேள்வி எழுப்பி உள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வியாழக்கிழமை 23ம் திகதி மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடையம் இலங்கையை விட இந்தியாவில் பிரபலமாக பேசப்பட்டு வருகின்றது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பாகவும் அவர்களின் படகுகள் தொடர்பாகவும் இந்தியாவில் விவாதங்களும், தலைவர்களின் கண் மூடித்தனமான பேச்சுக்களையும் ஊடகங்கள் ஊடாக பார்த்து வருகிறோம். எல்லை தாண்டி எமது இறைமையை மீறி எமது நாட்டிற்குள் அத்துமீறி பிரவேசித்த பல நூற்றுக்கணக்கான படகுகளில் சுமார் 10 படகுகள் மட்டுமே கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த படகுகளில் இருந்த 63 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கை கடற்பரப்பிற்குள் வந்த படகுகளின் எண்ணிக்கை 500 இற்கும் அதிகம். இந்திய மீனவர்கள் இல்லது இந்தியாவில் உள்ள மக்கள் எல்லை தாண்டும் போது இலங்கை எல்லை என்பது இந்தியாவிற்குச் சொந்தம் என அவர்கள் நினைக்கிறார்கள்.

பாகிஸ்தான் அல்லது சீனாவின் எல்லையை இவர்களினால் தாண்ட முடியுமா?. சட்ட விரோதமான தொழிலை செய்து கொண்டு அதை நியாயப்படுத்தி அதனை மக்கள் அவையிலும், நாடாளுமன்றத்திலும் தலைவர்கள் வாதாடுவது என்ன வகையில் பொருத்தமானது என்பது எமக்கு தெரியவில்லை.

ஒரு இறைமையுள்ள நாட்டின் மீது அத்துமீறி அந்த நாட்டிற்குள் சென்று இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதனை அவர்களும் கண்டித்திருக்க வேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்த ஒரு கருத்தை முன் வைத்திருந்தார். கைது செய்யப்பட்ட இந்திய இழுவைப்படகுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மீன்களை பார்க்கின்ற போது அதில் சிறு மீன்கள் உட்பட ஏனைய கடல் உயிரினங்கள் அழிக்கப்படுவதை அவதானித்ததாக கருத்தை தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தைத் தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.நாங்கள் இப்போது அல்ல பல வருடங்களுக்கு முன்பு இருந்தே நாங்கள் கூறி வருகிறோம். இந்திய இழுவைப்படகுகளும், உள்ளூர் இழுவைப்படகுகளும், மேற்கொள்கின்ற இந்த தொழில் முறையினால் கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றது. முற்றிலும் கடல் வளத்தை அழிக்கும் நோக்குடன் இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக நாங்கள் பல்வேறு போராட்டங்களையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்ட போது மேற்கொள்ளாத கைது நடவடிக்கைகள் அண்மையில் வருகை தந்த சீன தூதுவர் வருகைக்கு பின்னரே இந்த கைது இடம் பெற்றுள்ளது. அவரின் வருகை எதை குறிக்கின்றது? என்று தெரியவில்லை.

இந்திய மீனவர்களை கைது செய்து பின்னர் அவர்களை விடுதலை செய்து இந்தியாவை சாந்தப்படுத்துவதற்கான நடவடிக்கையா? அல்லது மீனவர்களை கைது செய்து சீனாவை சாந்தப்படுத்துவதற்கான நடவடிக்கையா? அல்லது கைதின் மூலம் வட பகுதி மீனவர்களுக்கு என்ன செய்தியை இந்த அரசு கூற விரும்புகிறது. இக் கைதுகாளுக்கான உண்மை நிலை எதிர் காலத்தில் தெரிய வரும். இந்திய மீனவர்களின் அத்துமீறளை தடுக்க வேண்டும் என்பதனையே வட பகுதி மீனவர்கள் எதிர் பார்க்கின்றனர்.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத தொழில் நடவடிக்கையை தடுத்தால் எமது மீனவர்களும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை நிறுத்த வாய்ப்பு உள்ளது. எனவே இந்திய மீனவர்களின் வருகை முழுமையாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு அத்துமீறி வருகின்றவர் கைதுசெய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மேலும் அண்மையில் வருகை தந்த சீனத் தூதுவர் மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். வருகை தந்த சீன தூதுவர் சில அமைப்புகளை அழைத்து அவர்கள் ஊடாக வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதில் மீனவர் சார்ந்த எந்த அமைப்புக்களும் கலந்து கொள்ளவில்லை. கடற்றொழில் திணைக்களமும் சம்மந்தப்படாத வேளையில் வெறுமனே வெளிநாட்டு தூதுவர் வருகை தந்து இவ்வாறான பொருட்களை மீனவர்களுக்கு வழங்கியதன் காரணம் என்ன? என்று இன்று வரை தெரியாத புதிராக உள்ளது. குறித்த பொதி உலர் உணவாக காணப்படுகின்றது.மன்னார் மாவட்டத்திற்கு 600 பொதிகள் வழங்கப்பட உள்ளதாக தெரிய வருகின்றது.

சீனத் தூதுவர் எதை எதிர்பார்த்து எமது மீனவர்களுக்கு வழங்குகிறார் என்று தெரியவில்லை.மன்னார் மாவட்டத்தில் 40 மீனவ சங்கங்கள் பதிவில் உள்ளது. 600 பொதிகளை எவ்வாறு பங்கிட்டு வழங்குவது? என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை மன்னார் மாவட்ட பிரதேச மீனவ கூட்டுறவு சங்கங்களின் தலைவர் ஜே.யோகராஜ் குரூஸ் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு – ஒரு எதிர்வினை

**- நக்கீரன் (கனடா)**

உதயன் வார ஏட்டில் மூத்த "ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு" என்ற தலைப்பில் சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன் எழுதிய நான்கு பகுதி கொண்ட (29-10-2021 தொடக்கம் 19-11-2021) ஒரு தொடர் கட்டுரை வெளிவந்தது.

இந்தத் தொடரை எழுத்துக் கூட்டிப் படித்துவிட்டுத்தான் எதிர்வினை செய்கிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கத்தக்கன. குறிப்பாக ஆக்க பூர்வமான விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்தத் தொடரை விமர்சனம் என்பதை விட ஒரு வரலாற்றுப் பதிவாகவும் எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக ததேகூ வி. புலிகளால் உருவாக்கப்பட்டது என்ற ஒரு பிழையான கருத்து பலரிடம் இன்றும் உண்டு.

இந்தக் கட்ரையாளர் கூட "இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அக்டோபர் 2001 இல் நான்கு தமிழ்க் கட்சிகள், விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் - ஒரு கிச்சடி கூட்டணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணி உருவாக்கப்பட்டது. அதில் அரசியல் ரீதியாக எதிரும் புதிருமாக இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியோருடன் ஆயுதக் குழுவாக இருந்து அரசியல் கட்சியாக உருமாறிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி ஆர் எல் எ.ஃப்) மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) ஆகியவை இணைந்தன" என எழுதியிருக்கிறார். வரலாறு அப்படியல்ல.

வி.புலிகளுக்கும் ததேகூ இன் தொடக்கத்துக்கும் தொடர்பே இல்லை. அது மட்டுமல்ல அதன் உருவாக்கம் நான்கு கட்சித் தலைவர்களாலும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் தொடக்கப்பட்டது.

ததேகூ 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி (சனிக்கிழமை) தொழிலதிபர் வடிவேற்கரசனின் கொள்ளுப்பிட்டியில் உள்ள வீட்டில் ஒப்பந்தம் (https://www.koormai.com/pathivu.html?vakai=1&therivu=1547) கைச்சாத்தானது. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமரகுருபரன், ஈபிஆர்எல்எப் சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ சார்பில் சிறிகாந்தா ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். எனினும் புலிகளின் தலைப்பீடம் அது பற்றிவாயே திறக்கவில்லை. இவ்வாறான நிலையில், நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹொலிடேயின் ஹோட்டலில் வெளியிடப்பட்டது. மேற்படி நான்கு கட்சிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டுமென்பதே முக்கிய அம்சமாகக் காணப்பட்டது.

2001 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட ததேகூ ஒரு தேசியப் பட்டியல் உறுப்பினர் உட்பட 15 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். தேர்தலில் ததேகூ பெற்ற வாக்குகள் 348,164 (3.89) ஆகும்.

2003 - 2004 காலப் பகுதியில்தான் வி.புலிகள் ததேகூக்கு ஒப்புதல் கொடுத்தார்கள். 2004 இல் நடந்த தேர்தலில் வி.புலிகள் தாங்கள் தெரிவு செய்த சிலரை வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வைத்தார்கள். இதிலிருந்து மே 18, 2009 வரை ததேகூ வி.புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. "நாங்கள் சொல்வதைத்தான் நீங்கள் நாடாளுமன்றத்தில் பேச வேண்டும்" என வி.புலிகளால் அறிவுறுத்தப்பட்டது.

பிழை கண்டு பிடிப்பது எனது நோக்கமல்ல. வரலாற்றை காய்தல், உவத்தல் இன்றி பதிவு செய்யப்பட வேண்டும். வரலாற்றைத் திரிப்பது வருங்காலச் சந்ததிகளுக்கு செய்யும் இரண்டகமாகும். சிறு சிறு தவறுகளை விடுத்து கட்டுரையாளரின் மையக் கருத்துக்கள் பற்றி எனது எதிர்வினையை வைக்கலாம் என நினைக்கிறேன். கட்டுரையாளர் பின்வருமாறு எழுதுகிறார்:

"இதில் இரண்டு சனாதிபதி தேர்தல்களில் கூட்டமைப்பு எடுத்த நிலைப்பாடு மிகவும் முக்கியமானது. முதலாவது போர் முடிந்த பிறகு நடைபெற்ற சனாதிபதி தேர்தலில், மஹிந்த இராசபக்சவை எதிர்க்க வேண்டும் என்கிற நோக்கத்திற்காகவே இராணுவத்தின் முன்னாள் தளபதியான சரத்பொன்சேகாவை ஆதரித்தது. போர் முடிந்தவுடன் எழுந்த இன்னும் ஓயாத போர்க் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விடயத்தில் முன்னாள் மற்றும் இந்நாள் சனாதிபதிகளான மஹிந்த இராசபக்ச மற்றும் கோத்தபய இராசபக்ச மீது எந்தளவுக்கு அந்த குற்றச்சாட்டு உள்ளதோ அதே அளவுக்கான குற்றச்சாட்டு இறுதிப் போருக்குத் தலைமையேற்று "விடுதலைப் புலிகளை அழித்தே தீருவேன்" என்று சூளுரைத்து அதை நிறைவேற்றிய சரத் பொன்சேகா மீதும் அந்த குற்றச்சாட்டு உண்டு.

அவரைக் கூட்டமைப்பு ஆதரிக்கப் போவதாகப் பேச்சுக்கள் எழுந்த போதே நான் கூட்டமைப்பில் இருந்த பலருடன் தொடர்பு கொண்ட போது யாரும் அந்த நிலைப்பாட்டிற்கான காரணத்தை நியாயப்படுத்தும் வகையில் கூறவில்லை. பொதுவாக அப்போது பேச்சாளராக இருந்து ஊடகங்களிடம் குறிப்பாக பிபிசி தமிழோசையிடம் பேசும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட இப்படி - அப்படி ஒரு பதிலையே கூறினார். "எம்மால் மஹிந்த இராசபக்சவை ஆதரிக்க முடியாது - அதை ஒரு போதும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்று சம்பந்தர் எனக்களித்த பேட்டியில் கூறினார். ஆனால் மஹிந்தவை ஆதரிக்க முடியாது அதனால் பொன்சேகாவை ஆதரிக்கிறோம் என்கிற நிலைப்பாடு ஏன் என்பதற்கான பதில் வழக்கம் போல "நன்றி.......வணக்கம்" என்பதே. அத்தேர்தலில் மஹிந்த இராசபக்ச வென்றார், கூட்டமைப்பு அரசியல் ரீதியாகத் தோல்வியடைந்தது.

சரி, அந்த தேர்தலில் "காலத்தின் கட்டாயம்" காரணமாக சரத்பொன்சேகாவை ஆதரிக்க வேண்டிய நிலைப்பாட்டை எடுத்த கூட்டமைப்பு அடுத்த தேர்தலில் அதே பிழையை மீண்டும் செய்தது. 2015 நாடாளுமன்றத் தேர்தலிலும் அதே மஹிந்த எதிர்ப்பு நிலைப்பாடு என்று கூறி அவருடன் முதல்நாள் வரை இருந்த மைத்ரிபால சிறிசேனாவை ஆதரித்தது. அதுவும் போரின் இறுதி நாட்களில் மஹிந்த இராசபக்ச ஜோர்டான் நாட்டிற்கு சுற்றுப்பயணம் சென்றிருந்த நிலையில், மைத்திரிபால சிறிசேனாவே இராணுவ அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்.

அதாவது குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16, 17 ஆகிய நாட்களில் சிறிசேனாவே இராணுவ அமைச்சிற்கு தலைமையேற்றிருந்தார். நாட்டில் நல்லாட்சிக்கான ஒரு வாய்ப்பு, நாங்கள் மைத்ரி - ரணில் கூட்டணியை நம்புகிறோம், அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை அளிப்பார்கள், போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகள் இடம்பெறும் என்றெல்லாம் கூறி அந்த கூட்டணியை ஆதரித்ததை நியாயப்படுத்தினார்கள். இத்தேர்தலில் மைத்ரிபால சிறிசேன வென்றார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்ற கூட்டணியில் இருந்தும் தோல்வியடைந்தது."

ததேகூ 2010 இல் நடந்த சனாதிபதி தேர்திலில் சரத் பொன்சேகாவை ஆதரித்தது ஏன்? 2015 இல் நடந்த சனாதிபதி தேர்தலில் மயித்திரிபால சிறிசேனாவை ஆதரித்தது ஏன்? என்ற கேள்விகளுக்கு அவ்வப்போது விலாவாரியாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதரித்ததற்கான காரண காரியத்தை எமது மக்கள் சரியாக புரிந்து வைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் ததேகூ சரத் பொன்சேகா மற்றும் மயித்திரிபால சிறிசேனா இருவரையும் ததேகூ ஆதரிக்கச் சொல்லாவிட்டாலும் தமிழ்மக்கள் அவர்களுக்கே வாக்களித்திருப்பார்கள். 2015 சனாதிபதி தேர்தலில் அதுதான் நடந்தது.

ஆங்கிலத்தில் இளவரசர் ஓட்ரோ வொன் பிஸ்மார்க் (Prince Otto von Bismarck) சொன்ன ஒரு பொன்மொழி உண்டு. அதுதான் அரசியல் என்பது சாத்தியமான கலை (Politics is the art of the possible) என்பது. "சாத்தியமான கலை" என்பது வரலாற்று ரீதியாக உண்மையான அரசியலுடன் தொடர்புடைய ஒரு சொற்றொடர். இது "நாம் விரும்புவதை (பெரும்பாலும் சாத்தியமற்றது) விட, நம்மால் முடிந்ததை (சாத்தியமான) அடைவது" என்று பொருள்படும். இந்த தந்திரோபத்தையே ததேகூ அரசியலில் கடைப்பிடிக்கிறது.

மேலும் மேலும் தனக்குத் துணை இல்லை பகைவர்களோ இருவர் தானோ ஒருவன் இந்நிலையில் அவர்களுள் ஒருவரைத் தனது இனிய துணையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

தனக்கு உதவிசெய்ய துணையே இல்லை, பகையே இரண்டு, தானே ஒருவன் இந் நிலையில் அப் பகைகளில் ஒன்றை இனிய துணையாகக் கொள்ள வேண்டும்.

தன்துணை இன்றால் பகையிரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்க அவற்றின் ஒன்று.
(குறள் 875 அதிகாரம் 88 - பகைத்திறன் அறிதல்)

இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து இதே தந்திரோபயத்தை தனது பொதுவுடமைக் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

ததேகூ இன் நிலைப்பாட்டை தமிழ்மக்கள் ஏற்று வாக்களித்தார்கள் என்பதுதான் வரலாறு. தேர்தல் முடிவுகள் அதைத் துலாம்பரமாகச் சொல்லியது. அடுத்த வாரம் அந்தப் புள்ளி விபரங்களைப் பார்ப்போம். (தொடரும்)

இரண்டு எதிரிகள் இருந்தால் அதில் ஒரு

"சொல்லியுள்ளோம், செய்வார்கள், பேசினோம், பேசுவோம், நம்பிக்கையுள்ளது" போன்ற பல்லவிகளையே தொடர்ந்து கூறினார்கள். ஆனால் மஹிந்த மற்றும் மைத்ரி ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பால் எதுவுமே செய்ய முடியவில்லை என்பதே யதார்த்தம். மைத்திரி இரணில் மோதல் கூட்டமைப்பிற்குள் இருந்த மோதலுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல. அவர்கள் தமக்குள் இருந்த பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் திணறிய நிலையில், தமிழ் மக்களின் பிரச்சனைகளை கவனிக்க எங்கே நேரமிருந்தது?

ஒரு முறை இருமுறை ஆயிற்று மூன்றாவது முறையாவது கூட்டமைப்பு சரியான முடிவை எடுத்ததா? ...............தொடரும்...........

பாட்டெழுதி பரிசு வாங்குபவர்கள் இருக்கிறார்கள். பாடலில் பிழையிருக்கிறது என்று சுட்டிக்காட்டி பரிசுவாங்குபவர்களும் இருக்கிறார்கள். இதில் நீர் எந்த ரகம்?" என தருமி நக்கீரரைப் பார்த்துக் கேட்பார்.

ததேகூ எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் பிழை கண்டு பிடிப்பவர்கள் இருக்கிறார்கள். அதில் இந்தக் கட்டுரை எழுதியவரும் ஒருவர்.

2010 இல் பொன்சேகாவை ஆதரித்தது போல 2015 இல் சிறிசேனாவை ததேகூ ஆதரித்தது முற்றிலும் சரியே. ததேகூ இன் முடிவு சரியென்பதை மக்கள் எண்பித்திருக்கிறார்கள்.

2010 தேர்தலில் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களில் விழுந்த வாக்குகளை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

2015 சனாதிபதி தேர்தல்

| மாவட்டம் | மாகாணம் | ராசபக்ச | % | பொன்சேகா | % | ஏனையோர் | % | வாக்களித்தோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வடக்கு | 44.154 | 24.75% | 113,877 | 63.84% | 20.338 | 11.40% | 25.66% |
| வன்னி | வடக்கு | 28.740 | 27.31% | 70,367 | 66.86% | 6,145 | 5.84% | 40.33% |
| மட்டக்களப்பு | கிழக்கு | 55.663 | 26.27% | 146,057 | 68.93% | 10,171 | 4.80% | 64.83% |

2015 சனாதிபதி தேர்தலில் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களில் விழுந்த வாக்குகளை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

2015 சனாதிபதி தேர்தல்

| தேர்தல் மாவட்டம் | மாகாணம் | ராசபக்ச வாக்குகள் | ராசபக்ச % | சிறிசேன வாக்குகள் | சிறிசேன % | ஏனையோர் வாக்குகள் | ஏனையோர் % | பெற்ற வாக்குகள் வாக்குகள் | பெற்ற வாக்குகள் % | வாக்குவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | கிழக்கு | 41,631 | 16.22% | 209,422 | 81.62% | 5,533 | 2.16% | 256,586 | 100.00% | 70.97% |
| யாழ்ப்பாணம் | வடக்கு | 74,454 | 21.85% | 253,574 | 74.42% | 12,723 | 3.73% | 340,751 | 100.00% | 66.28% |
| வன்னி | வடக்கு | 34,377 | 19.07% | 141,417 | 78.47% | 4,431 | 2.46% | 180,225 | 100.00% | |

2019 சனாதிபதி தேர்தலில் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களில் விழுந்த வாக்குகளை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

2019 இலங்கை அரசுத்தலைவர் தேர்தல் முடிவுகள்

| தேர்தல் மாவட்டம் | மாகாணம் | ராசபக்ச வாக்குகள் | ராசபக்ச % | பிறேமதாச வாக்குகள் | பிறேமதாச % | ஏனையோர் வாக்குகள் | ஏனையோர் % | செல்லுபடியானவை | நிராகரிக்கப்பட்டவை | மொத்த வாக்குகள் | பதிவான வாக்காளர்கள் | வாக்குவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | கிழக்கு | 38,460 | 12.68% | 238,649 | 78.70% | 26,112 | 8.61% | 303,221 | 4,258 | 307,479 | 398,301 | 77.20% |
| யாழ்ப்பாணம் | வடக்கு | 23,261 | 6.24% | 312,722 | 83.86% | [illegible] | [illegible] | 372,911 | 15,201 | 388,104 | 564,714 | [illegible] |
| வன்னி | வடக்கு | 26,105 | 12.27% | 174,739 | 82.12% | 11,834 | 5.51% | 212,278 | 3,294 | 216,072 | 282,119 | |

இந்தப் புள்ளிவிபரங்கள் ததேகூ எடுத்த முடிவு சாணக்கியமானது என்பதை எண்பித்துள்ளது. ததேகூ யாருக்கு வாக்களிப்பது என்று கேட்டிருக்கவிட்டாலும் பெரும்பான்மை தமிழ் வாக்காளர்கள் இப்படித்தான் வாக்களித்திருப்பார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட எதிரிகள் இருந்தால் அவர்களில் முக்கிய எதிரியைத் தனிமைப்படுத்துவதற்கு ஏனைய எதிரிகளோடு கைகோர்க்க வேண்டும் என்பது லெனினின் தத்துவம். ஆனால் லெனிக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் இந்த யுத்த தந்திரத்தை சொல்லியிருக்கிறார்.

தன்துணை இன்றால் பகையிரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.
(அதிகாரம்:பகைத்திறம்தெரிதல் குறள் எண்:875)

(தொடர்ச்சி _16_ பக்கம்)

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் நடத்திய நன்றி தெரிவிக்கும் வைபவம்












கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும். சம்மேளனத்திற்கு சொந்தமான ஒரு கட்டடத்தை கொள்வனவு செய்வதற்கு 'ஆணி வேராக 'விளங்கியவரும். 3 தடவைகள் தொடர்ச்சியாக தலைவராக பதவி வகித்தை பெருமையைப் பெற்றவருமான திருசாந்தா பஞ்சலிங்கம் நடத்திய நன்றி தெரிவிக்கும் வைபவம் ஒன்று கடந்த புதன்கிழமையன்று ஸ்கா-புறோவில் சிறப்பாக நடைபெற்றது. அங்கு அழைக்கப்பெற்றவர்ககள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவரது நன்றி தெரிவிக்கும் உணர்வைப் பாராட்டிய வண்ணம் கலந்து கொண்டனர்.
இங்கே காணப்படும் படங்களில். அங்கு கலந்து கொண்டவர்கள் சிலர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.



(_14_ பக்கத் தொடர்ச்சி)

தனக்கு உதவியான துணையோ இல்லை தனக்குப் பகையோ இரண்டு. இந்நிலையில் அப்பகைகளுள் ஒன்றை இனிய துணையாகக் கொள்ள வேண்டும். இந்த தந்திரத்தைத்தான் ததேகூ கையாண்டது. இது கூட்டமைப்புக்க அரசியல் ரீதியாகத் தோல்வி என்பது அடிப்படையில்லாத குற்றச்சாட்டு. சிறிசேனா போரின் இறுதிக் கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தார் என்பது உண்மை. பொன்சேகா புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்தினார் அதில் வெற்றியும் கண்டார் என்பது எமக்குத் தெரியும். ஆனால் பொது எதிரியான இராசபக்சாக்களை தோற்கடிக்க அவர்களது எதிரிகளோடு நாம் கைகோர்க்க வேண்டும்.

கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அரசியல் தீர்க்கதரிசனம் இல்லாது பல பின்னடைவுகளை சந்தித்தோம். 1931 இல் நடந்த சட்ட சபைத் தேர்தலை யாழ்ப்பாண மாணவர் புறக்கணித்தார்கள். விளைவு ஏக சிங்கள அமைச்சர் வாரியத்தை சிங்கள அரசியல்வாதிகள் உருவாக்கினார்கள். 1994 நாடாளுமன்றத் தேர்தலை வி.புலிகள் புறக்கணித்தார்கள். விளைவு டக்லஸ் தேவானந்தாவின் அரசியல் நுழைவுக்கு வழிகோலியது. 2005 இல் நடந்த சனாதிபதி தேர்தலை வி.புலிகள் உத்தியோகப்பற்றற்ற முறையில் புறக்கணித்தார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு வாக்குத்தான் விழுந்தது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்களித்தவர்களின் விழுக்காடு வெறமனே 1.21% ஆகும். மகிந்த இராசபக்சாவின் பெரும்பான்மை 180786 வாக்குகள் மட்டுமே. விக்கிரமசிங்க வென்றிருந்தால் போரின் முடிவு வேறுவிதமாக அமைந்திருக்கும்.

சனாதிபதி தேர்தல் 2005

| District | Province | Rajapaksa | percentage | Wickremesinghe | percentage | Others | percentage | Turnout |
|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | Northern | 1,967 | 25.00% | **5,523** | 70.20% | 1,034 | 4.8% | 1.21% |
| Vanni | Northern | 17,197 | 20.36% | **65,798** | 77.89% | 2,876 | 1.75% | 34.30% |
| Batticaloa | Eastern | 28,836 | 18.87% | **121,514** | 79.51% | 4,265 | 1.62% | 48.51% |

ததேகூ சிறிசேனா - இரணில் ஆட்சிக்காலத்தில் ஒன்றுமே செய்யவில்லை என்று பிலாக்கணம் பாடுபவர்கள் நெஞ்சாரப் பொய் சொல்கிறார்கள். எதிர்மறை பரப்புரை செய்கிறார்கள்.

இரணில் - சிறிசேனா ஆட்சியில் வடக்கு கிழக்கின் துரித அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றி வந்தது. தமக்குக் கிடைத்த வாய்ப்பை வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு பயன்படுத்தி வருகின்றது.

சனவரி 2015 தொடக்கம் நொவெம்பர் 2019 வரை ததேகூயின் முயற்சியால் பின்வருன நிறைவேறியுள்ளது.

(1) வட மாகாணத்தில் வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டன. இதற்காக 40,352 மில்லியன் ரூபாய் நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கொடுக்கப்பட்டது.

(2) காங்கேசன்துறை துறைமுகம் இந்திய அரசின் உதவியோடு மீள் கட்டமைக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு 45.27 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய அரசு கொடுத்து உதவியுள்ளது.

(3) உயர் பாதுகாப்பு வலையமாக இருந்த மயிலிட்டித் துறைமுகமும் அதனை அண்டிய 54 ஏக்கர் நிலமும் மக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது. தொடர்ந்து மயிலிட்டித் துறைமுகம் 205 மில்லியன் ரூபா முதலீட்டில் புனரமைக்கப்பட்டது. ஒகஸ்ட் 22, 2018 ஆம் திகதி சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தொடக்கி வைக்கப்பட்டது. ஒகஸ்ட் 15, 2019 முதல்கட்ட வேலைகள் முடிவுற்றது. அதனை பிரதமர் இரணில் மக்களிடம் கையளித்தார். ஆனாலும் முழுமையாகக் காணிகள் கையளிக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீள்குடியேற்றம் முற்றாக நின்றுவிட்டது.

(4) இரணில் - சிறிசேனா ஆட்சிக் காலத்தில் (2015 -2019) மொத்தம் 47,604 ஏக்கர் காணி (அரச காணி 41,677 ஏக்கர், தனியார் காணி 5,927 ஏக்கர்). இதில் வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட 3,000 ஏக்கர் காணி, சம்பூரில் கேட்வே இன்டஸ்ரீஸ் (Sri Lanka Gateway Industries (pvt) ltd) என்ற நிறுவனத்துக்கு 99 ஆண்டு குத்தகைக்கு 818 ஏக்கர், கடற்படையினர் வசம் இருந்த 237 ஏக்கர் (617 குடும்பங்கள்) அடங்கும்.

(5) வலி வடக்கில் 3100 ஏகக்ர் காணி 2018 இறுதியில் விடுவிக்கப்பட்டுள்ளது. மிகுதி 3,218. ஏக்கர் காணி விடுவிக்கப்படவில்லை.

(6) யாழ்ப்பாண பன்னாட்டு விமான நிலையம் பன்னாட்டு வர்த்தகப் பயணிகள் பயன்படுத்துவதற்கு வசதியாக அபிவிருத்திப் பணிகளை 1950 மில்லியன் ரூபா முதலீட்டுடன் அபிவிருத்திப் பணிகளை தொடக்கப்பட்டது. இந்தியா ரூபா 300 மில்லியனை முதலீடு செய்ய முன்வந்தது. இலங்கை விமானப் படையின் மூலம் துரிதமாக மேற்கொள்வதற்கும் முடிவு செய்யப்பட்டது. ஆட்சி மாற்றத்தின்பின் இந்தத் திட்டம் முடக்கப்பட்டுள்ளது.

(7) 2019 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்துக்கு கம்பெரலி திட்டத்தின் கீழ் 15 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1,658 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (8) முன்னாள் நல்வாழ்வு அமைச்சர் மரு. ப. சத்தியலிங்கம் அவர்களது முயற்சியால் வடக்கில் 5 மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகளின் மேம்பாட்டுக்கு நெதலாந்து அரசு உருபா 12,000 மில்லியன் (60 மில்லியன் யூரோ) நன்கொடையாகக் கொடுத்து.

(8) "கம்பெரலிய" என்ற கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மே 2019 வரை வடக்குக்கு கஉ.37, 565.2 மில்லியன் உருபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(9) பின்தங்கிய மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு வீதிகள், குளங்கள், அணைக்கட்டுகள், வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றின் சீரமைப்புக்கு மேலதிகமாக உருபா 3,402 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

(10) போரினால் தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உருபா 10 பில்லியன் அரச நிதியுதவியுடன் 10,000 கல் வீடுகள் மற்றும் கிழக்கு மாகாணங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டன.

(11) கிளிநொச்சி மாவட்டத்தில் உருபா 4474 மில்லியன் மதிப்பீட்டில் சகல வசதிகளுடனும் கூடிய பொது மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டது. இதில் 1974 மில்லியன் நெதலாந்து அரசின் நிதி உதவியாகவும், மிகுதி 2500 மில்லியன் இலங்கை அரசின் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியாகவும் இருந்தது.

(8) 450 கோடி ரூபாயில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு புதிய கட்டிடத்தொகுதி. கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு உங்கள் கையால் அடிக்கல் நாட்டிவைப்பதே சிறந்ததென்று பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிறீதரனிடம் கல்லைக்கொடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அத்தோடு 5 கோடி ரூபாய் மதிப்புள்ள வைத்திய உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டது.

250 மில்லியன் ரூபாவில் யாழில் கணனி மையம் மாவையின் பங்கேற்புடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

யாழ்ப்பாணத்தில் 250 மில்லியன் ரூபாய் செலவில் தகவல் தொழில்நுட்ப விருத்திக்கான தகவல் பேணும் வர்த்தக மையம் ஒன்றை அமைப்பதற்காக இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தம் வியாழக்கிழமை அலரிமாளிகையில் வைத்து, இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவும், அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சின் செயலர் கொடிகாரவும் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் மலிக் சமரவிக்ரம, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் மக்கள் நலன்சார் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்படும் உதவிகளின் வரிசையில் இத்திட்டமும் ஒன்றாகும். இவ் வர்த்தக மையமானது வடமாகாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் பிற தொழில்சார் சேவைகளுக்கான வாய்ப்பை அதிகரிக்கவும், மேம்படுத்தவும் உதவும்.

இவை தவிர, இந்திய அரசினால் அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாணம் மற்றும் மீள்குடியேற்றத்தினை மேம்படுத்தும் முகமாக வடமாகாணத்தில் 46,000 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்திய அரசின் நிதியுதவியினால் இம் மாகாணத்தில் 1990 இலக்க அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களான யாழ். கலாசார மையம், 27 பாடசாலைகளுக்கான கட்டடங்கள், 3000 மழை நீர் சேகரிப்பு தொகுதிகள், 600 வீடுகளைக் கொண்ட 25 மாதிரிக் கிராமங்கள் ஆகியன அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பில் நாடு முழுவதும் 70ற்கும் மேற்பட்ட மக்கள நலன் சார் அபிவிருத்தி திட்டங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் தற்போது 20 அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய அரசாங்கத்தின் இலங்கைக்கான 3 பில்லியன் அமெரிக்க டொலர் உதவிகளில் 560 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியானது மானிய உதவியாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வரவுசெலவுத் திட்டத்தில் முதல் முறையாக வடக்குக்கு இன நல்லிணக்கம் என்ற பிரிவுக்காக 12 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டு 20 திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் நான் பல தடவை வடக்குக்கு விசயம் செய்துள்ளேன். அத்துடன் திறைசேரியின் நிதி உதவி மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றத்தை கிரமமாக நேரடியாக பரிசீலித்து வந்திருக்கின்றேன் என்றார்.

2019 ஆம் ஆண்டு வாக்குப் பணகணக்கு ஒதுக்கீட்டில் 15 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1,658 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 536 மில்லியன் யாழ்ப்பாணம், 200 மில்லியன் கிளிநொச்சி, 143 மில்லியன்மன்னார், 121 மில்லியன் முல்லைத்தீவு மற்றும் 86 மில்லியன் வவுனியா மாவட்டங்களுக்கு பல்வேறு உட்கட்மைப்புகருத்திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெரியளவான நிதிஒதுக்கீடு கிராமியவீதிகள், பாலங்கள் உள்ளடங்கலாக உட்கட்மைப்பு வசதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட கிழக்கு அபிவிருத்தி

(1) வட மாகாணத்தில் வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இதற்காக 40,352 மில்லியன் ரூபாய் நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(2) காங்கேசன்துறைமுகம் இந்திய அரசின் உதவியோடு மீள் கட்டமைக்கப்பட்டு வருகிறது. சென்ற வாரம் பிரதமர் இரணிலஇந்திய நிதியுதவி கீழ் இந்த திட்டத்திற்கு 45.27 மில்லியன் அமெரிக்க டொலர்களை டெல்லி ஒதுக்கியுள்ளதுடன் மூன்று ஆண்டுகளுக்குள் திட்டம் பூர்த்தியடையும்.

(3) 205 மில்லியன் ரூபா முதலீட்டில் ஆகஸ்ட் 22, 2018 ஆம் திகதி மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தொடக்கி வைக்கப்பட்டது. வேலைகள் துரித கெதியில் நடைபெறுகிறது. பெப்ரவரி 15,2019 அன்று புதிதாக மயிலிட்டி பகுதியில் மீள்குடியேறிய 615 மக்களுக்கான வீட்டுத்திட்டத்தினை பிரதமருடன் சுமந்திரன் அடிக்கல் நாட்டி தொடக்கி வைதனர்.

(4) வலி வடக்கில் 3100 ஏககர் காணி 2018 இறுதியில் விடுவிக்கப்பட்டுள்ளது. மிகுதி 3,218. ஏக்கர் காணி விடுவிக்கப்படவில்லை.

(4) 450 கோடி ரூபாயில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு புதிய கட்டிடத்தொகுதி கட்டப்பட இருக்கிறது.

(5) கடந்த 2019 சனவரி மாதத்தில் வடக்கில் 1201 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது.

(6) பலாலி விமான நிலையத்தை சர்வதேச வர்த்தக பயணிகள் பயன்படுத்துவதற்கு வசதியாக அபிவிருத்திப் பணிகளை 1950 மில்லியன் ரூபா முதலீட்டுடன் இலங்கை விமானப் படையின் மூலம் துரிதமாக மேற்கொள்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(7) 2019 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்துக்கு கம்பெரலி திட்டத்தின் கீழ் 15 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1,658 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(8) 450 கோடி ரூபாயில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு புதிய கட்டிடத்தொகுதி. கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு உங்கள் கையால் அடிக்கல் நாட்டிவைப்பதே சிறந்ததென்று பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிறீதரனிடம் கல்லைக்கொடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அத்தோடு 5 கோடி ரூபாய் மதிப்புள்ள

ததேகூ விமர்ச்சிக்கும் பலர் சிங்கள - பவுத்த பேரினவாத அரசுக்கு முண்டு கொடுக்கும் டக்லஸ் தேவானந்தாவின் ஈபிடிபி, அங்கயனின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சிவநேசதுரை சந்திரகாந்தனின் (.பிள்ளையான்) தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கருணாவின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகளையோ அதன் தலைவர்களையோ விமர்ச்சிப்பதில்லை. அரசியல் யாப்புக்கு கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்தத்துக்கு டக்லஸ், பிள்ளையான், அங்கயன், வியாழேந்திரன் எந்த வெட்கமோ துக்கமோ இன்றி இரண்டு கைகளாலும் வாக்களித்தார்கள். இந்த சட்டம் இலங்கையில் ஒரு சர்வாதிகார ஆட்சி அமைய வழிகோலியுள்ளது.

ததேகூ யை யாரும் விமர்ச்சிக்கக் கூடாது என யாரும் கூறவரவில்லை. ததேகூ தான் இன்று தமிழ்மக்களது இனச் சிக்கலை ஐநாமஉ பேரவையிலும் பூகோள அரசியலிலும் பேசு பொருளாக வைத்திருக்கிறது. ததேகூ தான் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா போனற நாடுகள் பேசுகின்றன. கண்ணிருந்தும் குருடர்களாக இருப்பவர்களே இந்த யதார்த்தத்தை மறுக்க முடியும்.

# TAMIL HERITAGE SOCIETY OF CANADA

8 Milner Avenue, Scarborough, ON. M1S 3P8

E Mail: officialtamilheritagemonth@gmail.com |Tel: 416 – 254 - 6868

தமிழ் மரபுரிமை நடுவம்
ஊடக அறிக்கை
டிசம்பர் 21, 2021

வணக்கம்!

மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்ட, தமிழரின் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தவல்ல ஷதமிழ் மரபுரிமைத் திங்கள்' என்ற அரிய வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம்.

அதற்கமைய நாம் ஆண்டுதோறும் மரபுரிமை நிகழ்வுகளை முன்னடுத்து வருகின்றோம். மரபுரிமைத் திங்கள் என வரையறுக்கப்பட்ட நாள்களில் எமது சமூகம் நாட்டின் பல பகுதிகளிலும் மரபுசார் நிகழ்வுகளை முன்னெடுப்பது வழமை. பண்பாடு, மரபுகள் சார்ந்த விழிப்புணர்வை யாவருக்கும் ஏற்படுத்தும் வகையில் நிகழ்வுகளைத் திட்டமிட்டு வடிவமைத்துப் பயன்மிக்கதாக்குவதே தமிழ் மரபுரிமை நடுவத்தின் முதன்மை இலக்காகும்.
2021 - மரபுரிமை நிகழ்வுகளுக்கான கருப்பொருள்:
இவ்வாண்டுக்கான கருப்பொருளாகத் 'தமிழர் தொன்மை - தேடலும் பேணலும்' என்ற பொருண்மைத் தொடர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எமது தலைமுறைத் தொடர்ச்சியின் எழுச்சியும் மேன்மையும் எமது வரலாற்றுத் தொன்மையிலேயே தங்கியுள்ளது. தொன்மைமிக்க எமது வாழ்வியல் பதிவு-களையும் வரலாற்றையும் பேணிக் காப்பதன் வாயிலாக நாம் எமது தொடர்ச்சியை வலிமை மிக்கதாக்கிக் கொள்ள முடியும்.

மரபுரிமை நிகழ்வுளை முன்னெடுக்கும் அமைப்புகள் யாவும் இக்கருப்பொருளை உள்வாங்கி நிகழ்வுகளை ஒழுங்கமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தமிழ் மர-புரிமை நடுவம் விடுக்கின்றது.

தொடக்க நாள் - நிறைவு நாள்
ஸ்காபரோவில் அமைந்திருக்கும் தமிழ்கல்விப் பணிமனை முன்றலில் தொடக்க நாளான ஜனவரி 1ம் நாள் சனிக்கிழமை காலை பத்து மணிக்குக் கொடியேற்ற நிகழ்வு இடம்பெற இருக்கின்றது.
அன்று மாலை 5 மணிக்கு இணையவழியாகத் தொடக்கநாள் நிகழ்வுகள் நடைபெறும்.

நிகழ்வுகள்:
இவ்வாண்டு, மரபுரிமை நடுவம் தொடக்கநாள் உட்பட மூன்று நிகழ்வுகளையும் 3 இணையவழிக் கருத்தரங்குகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. விபரங்கள் வருமாறு:

சனவரி 01, 2021 - காலை 10 மணி - கொடியேற்றம்
மாலை 5 மணி - தொடக்கநாள் நிகழ்வு

சனவரி 09, 2021 - காலை 10 மணி - கருத்தரங்கு 'ஈழத்தில் தமிழர் வரலாற்றுத் தொன்மை'

சனவரி 14, 2021 - மாலை 7 மணி - பொங்கல் விழா


சனவரி 16, 2021 - காலை 10 மணி - கருத்தரங்கு
'தமிழர் வரலாற்றுத் 'தொன்மையில் தொல்லியல் ஆய்வுகளின் பங்களிப்பு'

சனவரி 23, 2021 - காலை 10 மணி - கருத்தரங்கு
'தலைமுறைத் தொடர்ச்சியைப் பேணுவதில் வரலாற்றுத் தொன்மையின் பங்கு'


சனவரி 29, 2021 - மாலை 5 மணி - நிறைவு விழா

மரபுரிமைத் திங்களில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்துக்கும் முதன்மை கொடுத்து, எமது மொழி, பண்பாடு, மரபு என்பவை தொடர்பான விழிப்புணர்வை இளையோருக்கும் மற்றோருக்கும் ஏற்படுத்தும் வகையில் ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டும் என அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 416 757 2006 - 416 400 9662



# இந்தியாவிடம் தமிழ்க்கட்சிகள் கேட்பது என்ன?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

இந்தியாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன் வைப்பதன் மூலம் இந்தியாவை மறுபடியும் இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட வைப்பது என்ற உள்நோக்கத்தோடு டெலோ இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைப்பு முயற்சிகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கின்றன. கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள குளோபல் டவர் விடுதியில் இடம்பெற்ற சந்திப்பில் சம்பந்தரும் உற்பட தமிழரசுக்கட்சியினர் பங்குபற்றினார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் இதில் வெளியே நிற்கிறது. மேற்படி கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு இறுதி ஆவணத்தை நோக்கி நகர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அந்த இறுதி ஆவணமானது டெலோ இயக்கம் முதலில் முன்வைத்த உத்தேச ஆவணத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி என்று கருதப்படுகிறது.

டெலோ இயக்கம் 13ஐ முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று இந்தியாவை கோர முற்பட்டது. ஆனால் தமிழரசுக் கட்சி அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. எனவே இந்திய-இலங்கை உடன்படிக்கையை முழுமையாக அமல்படுத்துவது என்ற தொனிப்பட கூட்டு கோரிக்கையை மாற்றுவது என்று கடந்த செவ்வாய்க்கிழமை சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இந்திய இலங்கை உடன்படிக்கையில் உள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தை முழுமையாக அமல்படுத்துவது என்ற தொனிப்பட கோரிக்கை இறுதியாக்கப்படலாம் என்று தெரிகிறது. இதில் பல கட்சிகள் சம்பந்தப்படுவதால் இறுதி ஆவணம் கடைசி நேரத்திலும் திருத்தப்பட்ட முடியும். அதுதான் இயல்பானதும் இயற்கையானதும் கூட. பல கட்சிகள் சம்பந்தப்படும் பொழுது ஒருமித்த கருத்தை அடைவது என்றால் அப்படித்தான் அமையும். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொது ஆவணம் எனப்படுவது அவ்வாறுதான் அமையும். அந்த ஆவணம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரையிலும் அதைக்குறித்து மேலதிகமாக எழுத முடியாது. இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் அந்த ஆவணம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பை உற்றுக் கவனித்தால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. இந்தியாவை உள்ளே கொண்டு வருவது என்ற விடயத்தில் பெரும்பாலான கட்சிகள் ஒரே விதமாகத்தான் சிந்திக்கின்றன. ஆனால் அந்த கோரிக்கை எது என்பதில்தான் அவர்களுக்கிடையே முரண்பாடு காணப்பட்டது. உண்மையில் இந்த முரண்பாடு கொள்கை முரண்பாடு அல்ல. கூட்டமைப்புக்குள் காணப்பட்ட ஜனநாயகமின்மையின் விளைவாக உண்டான உட்கட்சிப் பிரச்சினைதான்.

கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளைத் முதலில் தொடங்கியது மாவை சேனாதிராஜா. இந்த முயற்சிகள் யாவும் கடந்த பொதுத்தேர்தலின் விளைவுகளே. கடந்த பொதுத் தேர்தலில் டெலோ இயக்கத்துக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தன. மாவை சேனாதிராஜா தோற்றுவிட்டார். எனவே தோல்வியடைந்த மாவை சேனாதிராஜா ஒருங்கிணைப்பு முயற்சியின் மூலம் தன்னை மீண்டும் ஸ்தாபித்துக் கொள்ள விரும்பினார். ஆனால் சம்பந்தரும் சுமந்திரனும் அதை ஒரு கட்டத்துக்கு மேல் நகர விடவில்லை. எனவே கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சி ஒரு கட்டத்துக்கு மேல் போக முடியவில்லை. அதனை டெலோ தொடர்ந்தது. ஏனெனில் டெலோ இயக்கத்தைப் பொறுத்தவரை அது கடந்த பொதுத் தேர்தலில் மூன்று ஆசனங்களை பெற்றிருக்கிறது. அந்த மூன்று ஆசனங்களும் கூட்டமைப்பின் வாக்கு வங்கிதான் என்று தமிழரசுக்கட்சி நம்புகிறது. அது டெலோ இயக்கத்துக்கு மட்டும் உரிய வாக்கு வங்கி இல்லை என்றும் தமிழரசுக்கட்சி நம்புகிறது.

ஆனால் டெலோ இயக்கம் தனது பேர பலம் அதிகரித்திருப்பதாக நம்புகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறாதவரும் அக்கட்சியின் பேச்சாளரும் ஆகிய குருசாமி சுரேந்திரன்தான் இப்போதைய நகர்வுகளின் நடுநாயகமாக காணப்படுகிறார். மொழிப்புலமை உள்ளவராகவும் தன்முனைப்பு உள்ளவராகவும் தூதரகங்களோடு இடையூடாடக் கூடியவராகவும் காணப்படும் அவர் கட்சியின் பேர பலத்தை மேலும் அதிகப் படுத்துவதில் துடிப்பாக செயற்பட்டு வருகிறார். கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக அப்பாவியாக காணப்பட்ட டெலோ இயக்கம் இப்படி ஒரு ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபடுவதற்கு அவர்தான் பிரதான காரணம்.

இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளை தமிழரசுக்கட்சி ரசிக்கவில்லை. குறிப்பாக சுமந்திரனை ஓரங்கட்டிவிட்டு இந்த முயற்சிகள் நடப்பதால் சுமந்திரன் அதை எல்லாவிதத்திலும் குழப்ப முயற்சித்தார். மாவை சேனாதிராஜா மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகளில் ஈடுபாடு காட்டினாலும் அவரை ஒரு கட்டத்துக்கு மேல் நகர சுமந்திரனும் சம்பந்தனும் விடவில்லை. இதனால் மேற்படி முயற்சிகள் தமிழரசுக் கட்சிக்கு எதிரானவை போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தின. அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக டெலோவின் நகர்வை தமிழரசுக்கட்சி குறிப்பாக சுமந்திரன் கையாண்ட விதமானது தமிழரசுக் கட்சி இந்தியாவை உள்ளே கொண்டுவர விரும்பவில்லை என்ற ஒரு தோற்றத்தை வெளிக்காட்டியது. சுமந்திரனின் அமெரிக்க பயணமும் இந்தியாவுக்கு போவதை தமிழரசுக்கட்சி ஒத்திவைத்த விதமும் மேற்படி தோற்றத்தை மேலும் பலப்படுத்தின. இப்படிப்பட்டதொரு பின்னணியில்தான் சம்பந்தர் டெலோவின் முயற்சிகளில் ஈடுபாடு காட்டுவது என்ற முடிவுக்கு வந்தார். அதன் விளைவாக கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டாவது சந்திப்பு இடம்பெற்றது.

இப்பொழுது ஏறக்குறைய எல்லா கட்சிகளும் இந்தியாவை உள்ளே கொண்டு வருவது என்ற விடயத்தில் ஒன்றுபட்டிருப்பதாக தோன்றுகிறது. 13ஐப் பற்றி அழுத்தி கதைக்காமல் இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைக்கலாம் என்பது சில சமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஏற்புடையதாக இருக்கக்கூடும். ஏனென்றால் அக்கட்சி ஏற்கனவே தெளிவாகக் கூறியிருக்கிறது இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு தான் எதிரில்லை என்று. அந்த அடிப்படையில் இந்திய இலங்கை உடன்படிக்கையை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் அந்த கட்சி கூறிவிட்டது. ஆனால் அதற்காக 13 ஆவது திருத்தத்தை இந்தியா தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அந்த கட்சி தெரிவித்திருக்கிறது.

எனவே மேற்படி கட்சிகள் தயாரிக்கப் போகும் இறுதிக் கோரிக்கையானது 13ஆவது திருத்தத்தை அழுத்தி கேட்காமல் விட்டால் அது தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்காவது ஏற்புடையதாக இருக்கக்கூடும். எனினும் அக்கட்சியை கடைசி நேரத்தில் இவ்வாறான ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியுமா என்பது சந்தேகமே. தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த ஒருங்கிணைப்புக்குள் இணைந்தால் சில சமயம் கூட்டுக் கோரிக்கையின் வடிவமே மாறக்கூடும். ஆனால் கடைசி நேரத்தில் அக்கட்சியை உள்ளே கொண்டுவர தேவையான உத்திகள் ஏனைய கட்சிகளிடம் உண்டா என்றும் தெரியவில்லை.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்தியாவை நோக்கி ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகரிப்பது தெரிகிறது. ஆனால் இங்கே ஒரு அடிப்படைக் கேள்வியைக் கேட்கவேண்டும். இந்தியாவை நோக்கி அப்படி ஒரு கோரிக்கையை வைப்பதன் அர்த்தம் என்ன? இந்தியா இனிமேல்தான் இனப்பிரச்சினையில் தலையிட வேண்டும் என்றா?

இல்லை. இந்தியா ஏற்கனவே இனப் பிரச்சினையில் தலையிட்டு கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அது தமிழ் மக்களின் பக்கம் நின்று தமிழ் மக்களுக்கு ஆதரவான ஒரு சக்தியாக நின்று தலையிடவில்லை என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. இந்திய இலங்கை உடன்படிக்கைக்குப் பின்னரான வளர்ச்சிகள் இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதோடு ஈழப் போராட்டத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒருவித விரோத பாவமே காணப்பட்டது. 2009 இறுதிக்கட்ட போரின் போது இந்தியா தங்களுக்கு எதிராகவே நின்றது என்று தமிழர்களில் அதிகமானவர்கள் நம்புகிறார்கள். எனவே 2009க்கு பின்னரும் அவர்கள் இந்தியாவை நோக்கிப் போகத் தயாரில்லை. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன் வைப்பது என்பது நடைமுறை அர்த்தத்தில் இந்தியாவை மறுபடியும் தமிழ் மக்களுக்குச் சார்பாக தலையிட வைக்கும் ஒரு முயற்சிதான் என்று எடுத்துக்கொண்டால், அதை எப்படிச் செய்வது? உத்தேச கோரிக்கையின் பிரகாரம் இந்தியா கொழும்பை பகைத்துக்கொண்டு தமிழ் மக்களின் பக்கம் வந்து நிற்குமா?

குறிப்பாக சீனா வட கடலில் கண் வைத்திருக்கும் ஒரு காலகட்டத்தில் இந்தியாவை நோக்கி இப்படி ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டால் இந்தியா அதை சாதகமாக பரிசீலிக்கும் என்று மேற்படி கட்சிகளில் சில தரப்புக்கள் நம்புவதாகவும் தெரிகிறது. ஆனால் இலங்கையை கையாள்வது என்பது கொழும்பை கையாள்வதுதான் என்ற இந்தியாவின் பல தசாப்தகால அணுகுமுறைகளில் மாற்றம் ஏற்படாதவரையிலும் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக கொழும்பை பகைக்கும் ஒரு ராஜதந்திர முடிவை உடனடியாக எடுக்கும் என்று எதிர்பார்க்கலாமா?

## வீணாவின் கவிக்கணை

உன் காசுக்கு
மண்டியிடும் கயவரை
நம்பாதே,
உன் அன்பிற்கு
தலை வணங்கும்
நல் உள்ளகளை நம்பு,
பணம் இருப்பதும்
இல்லாததும்
அவர் பிழையல்ல,
ஆனால் குணம்
இல்லாமல் போவது
அவருக்கு மட்டுமல்ல,
அவரால் அவர்
சுற்றத்திற்கே கிடைத்த சாபம்.


SARAVANAA BHAVAN®
CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
ALL DAY
BUFFET
25th Dec, 2021
1st Jan, 2022
SPECIAL
LUNCH BUFFET
26th Dec
2021
Festive Season Greetings
Merry Christmas
& Happy New Year
FROM TEAM SARAVANAA BHAVAN CANADA
Celebrate this Festive Season with us!
45Mins
Buffet Time Per Customer
All of our food may contain traces of nuts and peanuts for information about allergens in our food, please ask a member of staff.
saravanaacanada
SaravanaaBhavanCanada
www.saravanabhavan.ca
SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION.1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9
DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4
Canada | U.S.A | Germany | Ireland | U.K | Belgium | France | Italy |Sweden | Netherlands | South Africa | India
Bahrain | Oman | Qatar | Kuwait | Malaysia | Saudi Arabia | U.A.E | Hong Kong | Thailand | Singapore | Australia | New Zealand


HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Thank you to all Our Clients and Friends
எமது வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி
Homelife/Future Realty Brokerage, celebrated it's 19th Annual Awards Gala, on the 19th of December, 2021.
Abi -Amalan became the Top Producer 3rd time in a row since 2019.
This year Abi-Amalan earned over 3 Million Dollars and they were presented the following Awards:
Top Producer 2021
Multimillion Dollar Producer Award 2021
Homelife National Founder's Club Award 2020
We are honoured to receive the Awrds from Mr. Andrew, the President of Homelife Head Quarters, our MP Mr. Gary Anandasangaree and Homelife Future Realty Brokerage, Founder and CEO, Mr. Selva Vettyvel.
Homelife Future
Amalan Ganeshamoorthy
Sales Representative
(416) 829-9993
Abi Amal
Sales Representative
(416) 732-1810
உங்கள் அனைவருக்கும்
எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Happy Christmas and Wonderful New Year Greetings to you all


HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE / FUTURE
REALTY INC.,
BROKERAGE
Homelife Future
Award Night 2021
Thank you to all my Clients and Friends!
எனது வாடிக்கையாளர்கள் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும் நன்றி!
With Your Great Support,
I have achieved this year's
2nd Top Producer &
Million Dollar Club Member
at Homelife Future Realty Brokerage
உங்கள் அனைவருக்கும் எனது
நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
Merry Christmas and Wonderful
New Year Greetings to you all!
Kailain Thillainathan
Sales Representative
(647) 668-8276

SARAVANAA BHAVAN®
HSB CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

# Dosa & Poori

## All day Unlimited Buffet
(at Scarborough only)





**Christmas**
On December 25th, 2021

**New Year**
On January 1st, 2022

45Mins Buffet Time Per Customer

Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA

SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575

SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9
DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4

# தமிழ் எழுத்தாளர்களுக்கு விருது, ரூ.5 லட்சம் பரிசு, ஒரு சவரன் தங்கம் வழங்கப்படுமென தமிழக அரசு அறிவிப்பு

இந்தியா செய்திகள் India News



தமிழ் எழுத்தாளர்களுக்கு இலக்கியமாமணி விருது வழங்க, தொழிற்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டு உள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 97-வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக அரசால் இயல், இசை, நாடகத்தில் சிறந்த விளங்கும் கலைஞர்களுக்கு தமிழ் நாடு அரசின் சார்பாக கலைமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி விருது உருவாக்கப்பட்டு தமிழின் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படும். இவ்விருதாளர்களுக்கு பாராட்டுப் பத்திரம் மற்றும் ரொக்கப் பரிசும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியதாவது வளர்ச்சித்துறை மானிய கோரிக்கை விவாதத்தின் போது., "தமிழ் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இலக்கியமாமணி விருதுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதை செயல்படுத்தும் வகையில் சிறந்த எழுத்தாளர்களை தேர்வு செய்ய தொழிற்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தேர்வுக்குழுத் தலைவராகவும், உறுப்பினர் செயலாளராக தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரும், உறுப்பினர்களாக முனைவர் ராஜேந்திரன், முன்னாள் துணைவேந்தர் சபாபதி மோகன், முன்னாள் பல்கலைக்கழக முதல்வர் சாரதா நம்பி ஆருரான் உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இலக்கிய மாமணி விருது பெறும் விருதாளருக்கு ரூபாய் 5 லட்சம் ஒரு சவரன் தங்கப் பதக்கம், பொன்னாடை மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கப்படும் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை மற்றும் விருதாளர் விருது பெற வருகை தரும் போது தங்குமிடச் செலவு, போக்குவரத்துக் கட்டணம், சிற்றுண்டி, உணவு ஆகிய அனைத்து செலவும் அரசே ஏற்கும். இதற்கு என மொத்தம் ரூ.17.10 லட்சம் செலவினமாக அனுமதித்து ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இவ்விருது 2021-2022-ஆம் நிதியாண்டு முதல் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் வழங்கப்பெறும் விருதுகளோடு சேர்த்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நரேந்திர மோடியின் யூடியூப் வருமானம் ஆண்டுக்கு 1,44,600 டாலர் முதல் 2.4 மில்லியன் டாலர்?



கொரோனா காலத்தில் கொரோனாவுக்கு நிகராகப் பரவிய இன்னொரு விஷயம், யூடியூப் சேனல் ஆரம்பிப்பதுதான். சமைக்கத் தெரிந்தவர்கள், மோடிவே'ன் பேச்சாளர்கள், அழகு குறிப்பு தெரிந்தவர்கள் இப்படி பலரும் தங்களுடைய மொத்தத் திறமையையும் காட்ட யூடியூப் சேனல் ஏற்றதாக இருக்க, பல லட்சம் புதிய சேனல்கள் சில மாதங்களுக்குள் ஆரம்பித்து, அகில உலகை ஆச்சர்யப்பட வைத்தார்கள் நம்மவர்கள். இந்த யூடியூப் சேனலில் அவ்வப்போது அவர் ஆற்றும் உரைகள், நிகழ்வுகள், யோகா போன்ற பிற பொது விஷயங்கள் என அனைத்தையும் அதில் பதிவேற்றுகிறார்கள். அவருடைய வீடியோக்கள் அனைத்துமே யூடியூபில் ஹிட் அடித்துக்கொண்டிருக்கின்றன. இதில் மிகப் பெரிய யூடியூபர்களின் வெற்றிக்கதைகளை நீங்கள் நிறையவே கேட்டிருக்கலாம். ஆனால், நாட்டின் பிரதமரும் தனது பெயரில் ஒரு யூடியூப் சேனல் வைத்துள்ளார் என்பது பலருக்கும் தெரியாத விஷயம். இந்த சேனலை உடனடியாகப் பார்க்க நினைக்கிறவர்கள் இந்த லிங்க்கை சொடுக்குக: https://www.youtube.com/c/NarendraModi பொதுவாக, வீடியோவுக்கு ஏற்ப, அதன் பார்வைகள், விளம்பரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் யூடியூப் ஒவ்வொரு 1,000 பார்வைகளுக்கும் 3 டாலர் முதல் 7 டாலர் வரை வழங்குகிறது. இதுபோக, தனியாகவும் யூடியூபில் விளம்பரம் செய்வது, பொருள்கள், சேவைகள் விற்பது ஆகியவற்றின் மூலம் கூடுதலாகவும் வருமானம் பார்க்கலாம். 2007 அக்டோபரில் தொடங்கப்பட்டது இந்த யூடியூப் சேனல். அப்போது அவர் குஜராத் முதல்வராக இருந்தார். ஆனால், பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னரே அவரது யூடியூப் சேனல் சூடுபிடிக்க ஆரம்பித்தது. தற்போது அவரது யூடியூப் சேனலுக்கு 9.6 மில்லியன் சப்ஸ்கிரைபர்கள் இருக்கிறார்கள். இதுவரை அவரது யூடியூப் சேனலில் பதிவேற்றிய வீடியோக்களின் மொத்த எண்ணிக்கை 15,116. மொத்தமாக 1.5 பில்லியன் பார்வைகளைக் கடந்து சென்றுள்ளது. ஒரு நாளைக்கு தோராயமாக 6,47,490 பார்வைகளை ஈர்க்கிறது. இதன் மூலம் ஆராய்ந்து அறிந்து social Blate என்கிற இணையதளம், "இந்த யூடியூப் சேனல் மூலம் மோடி மாதத்துக்கு 12,000 டாலர் முதல் 1,99,500 டாலர் வரை வருமானம் ஈட்டுகிறார்" என்று கணக்கிட்டுச் சொல்லி இருக்கிறது. இந்த யூடியூப் சேனல் மூலம் ஆண்டு வருமானம் 1,44,600 டாலர் முதல் 2.4 மில்லியன் டாலர் வரை இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

அடல் பிஹாரி வாஜ்பாய் காலத்தில் மத்திய அமைச்சர்கள் தங்களின் சொத்துக் கணக்கைப் பொது தளத்தில் தெரிவிக்க வேண்டும் என்று கொண்டுவந்த சட்டத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் அமைச்சர்களின் சொத்து விவரம் வெளியிடப்படுகிறது. இந்த ஆண்டில் பிரதமர் மோடி வெளியிட்ட சொத்து விவரங்களின்படி, அவருடைய சொத்து மதிப்பு கடந்த ஆண்டை விட ரூ.22 லட்சம் உயர்ந்து, ரூ.3.07 கோடியாக உள்ளது. இந்த வருமானத்தில் யூடியூப் வருமானம் குறித்த விவரம் சேர்க்கப்பட்டுள்ளதா, இல்லையா என்கிற விவரம் எதுவும் தரப்படவில்லை. நரேந்திர மோடி யூடியூப் சேனல் மூலம் வருகிற வருமானம் அவருடைய தனிப்பட்ட கணக்கில் சேர்கிறதா அல்லது அதை அவர் வேறு நிறுவனங்களுக்கு நன்கொடையாக அளிக்கிறாரா என்கிற விவரங்களுக்கும் பதில் இல்லை!


## JOB POSTING - Project Coordinator
## Date: December 10, 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors and others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active and healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The project coordinator will report to the STSP President/Secretary and will work on.
Preparing proposals in consultation with STSP President and secretary, to obtain funds from various funding organization for society activities.
Ensuring all proposals for funding are submitted within the timeline specified.
Ensuring the funds received for each project are spent to activities specified in the submitted proposals and within the approved amount.
Maintaining all documentations required for each project and communicating actions and issues to the board members.
Working with the STSP treasurer in maintaining all financial transactions and creating monthly financial report for all current projects.
Maintaining and updating the STSP web page periodically and also helping seniors to solve basic computer issues.
Supporting in organization of daily activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:

Diploma in Accounting with three years of work experience in a computerized accounting environment or six years of work experience in a computerized accounting field.
Basic computer skills with proficiency in Word, Excel and Power point.
Experience on designing, updating troubleshooting websites.
Effective interpersonal, communication and organizational skills
Working knowledge of community resources, services for seniors in Peel and relevant government programs and policies
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

Salary and benefits: Negotiable and according to the experience
Duration of engagement: Minimum of one year on part time basis with possible extension. Minimum 20 hours per week working hours required.

Deadline for application: December 30, 2021
Please forward your application with your updated resume by email to
info@peeltamilseniors.ca

Nadarajah Moorthy
Secretary
Cell: 416 473 5380, nmoorthy10@gmail.com
.



CANADA'S OTHER VOICES
NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA
Conseil national de la press et des medias ethniques du Canada



**NEWS RELEASE**

**FROM:** National Ethnic Press and Media Council of Canada

**TORONTO - DATE:** November 15th, 2021

**The Local Journalism Initiative was launched by the Government of Canada to support the creation of original civic journalism that covers the diverse needs of underserved communities across Canada. The National Ethnic Press and Media Council of Canada (NEPMCC) is one of seven not-for-profit organizations that administers the Initiative.**

If you are an Ethnic Media Outlet (written press, community radio, community television and online news service) you may be eligible to receive funding from the Local Journalism Initiative and you will be able to hire journalists to strengthen local coverage of civic matters in underserved communities.

NEPMCC is available to provide support and financial assistance to qualifying candidates. Applications can be found at www.nationalethnicpresscouncil.com

Applicants are encouraged to contact the National Ethnic Press and Media Council of Canada:

**Address:**
100 Queen Street West
Toronto, Ontario M5H 2N2
**President and CEO:** Thomas Saras
**Executive Director:** Maria Saras-Voutsinas
**Phone:** 416-921-8926
**Web:** nationalethnicpresscouncil.com

**The National Ethnic Press and Media Council of Canada** is a non-profit organization established in 1958 (formerly Canada Ethnic Press Federation) whose mission is to promote and integrate the economic, social and cultural interests of ethnic communities into the mainstream of Canadian Society. We are 850 Canadian media outlets available in more than 111 languages that serve new Canadians and help them to integrate into their new Canadian Culture.

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly – Brampton

**15 Kenview Blvd. Unit 3 (Upstairs), Brampton, On. L6T 5G7**

### கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை

2021, டிசம்பர் 24ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணிக்கு
இயேசுவின் பிறப்பை மனமகிழ்ச்சியுடன் நினைவு கூருவோம்.

“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.” - ஏசாயா 9: 6

-------

### புதுவருட நள்ளிரவு ஆராதனை-2021

2021, டிசம்பர் 31ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு
2022ம் ஆண்டின் ஆரம்பத்தை தேவ சமுகத்தில் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்போம்

“வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்,
உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.” - சங்கீதம் 65: 11

என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார். துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன், அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன். - சங்கீதம் 18: 1-3

அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார். கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும், மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும், அவன் எம்மாத்திரம்? - சங்கீதம் 144: 2-3

பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன், அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின. இருபத்துநான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள். - வெளிப்படுத்தல் 5 11-14

--------

### இயேசு சொன்னார்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். - யோவான் 14: 13-14

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**பாஸ்டர் அல்பிரட் செருபிம் - (647) 271-7645**

**அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் - புதுவருட வாழ்த்துக்கள்**

# கடந்தவையும் கடப்பவையும் (15)

- உமா மோகன் -

கெடுபிடிகள் குறைந்த இடம் - அப்போ
அடிபாடுகள் கொஞ்சம் தளர்ந்த இடம் என்றே

பலர் வலிகாமத்தின் சில பகுதிகளை - தம்
வசதிக்காய்த் தேர்ந்தெடுத்தார் - நாமும்

நல்ல பல கோயில்கள் உள்ள அந்த ஊருக்கே
மெள்ளமாய் புறப்பட்டோம் - முன்னர்

பல தடவை சீறி வந்து வெடித்தாலும்
சிறு இடைவெளி கிடைக்கும் போது

யாருக்கும் பயப்படாது கடந்ததுண்டு - வல்லை வெளியை
போருக்கு வராதவர் வந்த பின்பே - அவரை

நேருக்கு நேர் கண்டுவிட்டால், என்ற பயம் - ஆனாலும்
ஆருக்கும் தெரியாமல் அவர்களால் வரவியலாது

மூக்கிருக்கும் அனைவரும் உணர்ந்திடுவர் - அவர்
போக்கு வரத்து உள்ள இடம் எங்கெனினும்

ஏக்கத்தோடு அவர் திரிவார் ஆனாலும்
பார்ப்பவர்க்கு தம் பயத்தைக் காட்டமாட்டார் - வேறு

பாசைகளும் விளங்காமல் தம் பாசைகளில் அவர் கதைப்பார் - சிறப்பு
ஓசைகளால் குறிப்பு உணர்த்தி அவர் நடப்பார்

ஆண்கள் என்றால் ஒவ்வாமை அவர்களுக்கு
ஆக்ரோசமாய் இருப்பதோடு 'நீ அதுவா'

எனக் கேட்டு ஆக்கினைகள் கொடுத்திடுவர்
கனநேரம் இருக்கவைத்தே 'போ' எனவும் சொல்லிடுவார்

அடி வெளியில் வாங்கிடுவார் - அடித்தவர்
காலடியை வீடுகட்குள் தேடிடுவார் - அதற்கும்

தம் துணைக்குப் பெண்களையே கூப்பிடுவார் - அன்றைய
அப் பிரஜைகள் குழுவின் புகார்களுக்கு - பெரும்

சொந்தக்காரர் என்பதனால் போகும் இடம்
எந்த இடம் ஆனாலும் நன்கு ஆராய்ந்தே போவதுண்டு

நல்லகாலம் வல்லையைத் தாண்டும் வரை
எல்லைகளில் அவர்கள் இல்லை என்பதனால்

நல்லபடி தொடருகின்றோம்.

பல நாட்கள் போகாத காரணத்தால் - அவ்வழியால்
புதிதாகப் போவது போல் இருந்தது அன்று,

வல்லைவெளி முனியப்பர், வழிப்போக்கர் தொல்லைகளை அகற்றிடுவார் -
அவருக்கு

அண்மையிலும் குண்டுகள் வெடித்திருக்கு - சிறு
குண்டு பட்ட அடையாளம் ஆங்காங்கே அங்கிருக்கு

பாதையிலும் பல இடங்கள் குன்றும் குழியும் - அது
நேராகப் போவதற்குத் தடையாகத் தானிருக்கு

கார்த்திகை மாதம் வல்லைக்கடலின் வடிவு
பார்த்தவர்க்கு பரவசத்தைக் கொடுப்பதுண்டு - அது

நிரம்பிய நீரோடு எங்கும் மினுமினுப்பாய் இருப்பதுண்டு - குளிர்
பரப்பும் காற்று வந்து வருடும்போது பெரு மகிழ்வு
பெறுவதுண்டு - அன்றோ

வரண்ட காற்று வந்து தள்ள தானாய்
உருண்டு ஓடும் காகிதம் போல்

வெளி கொடுக்கும் வெய்யிலாலே அங்கு
துளி நேரம் நிக்கேலாமல் நகருகிறோம்

அச்சுவேலித் தென்னைகளின் நிழலை நாடி...

(தொடரும்)

# போராட்ட காலத்தில் வட இலங்கையில் 'போதை வஸ்து' என்பது மருந்துக்கும் கிடையாமல் இருந்தது. ஆனால். தற்போது..?



இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய சவால்களில்போதைப்பொருள்பாவனையும்ஒன்றாகும். பொழுதுபோக்குக்காகவும், சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்துக்காகவும் பயன்படுத்தப்படும் இந்த போதைப் பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவித்து உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதோடு, சமூகத்தில் பல சீர்கேடுகளையும் தோற்றுவிக்கின்றன.

ஒரு நாட்டின் வளர்ச்சி, அபிவிருத்தி என்பன அந்நாட்டில் சுகதேகிகளாக வாழும் மக்களிலேயே தங்கியுள்ளன. அதிலும் நாட்டின் எதிர்காலத்தையும் தலைவிதியையும் தீர்மானிப்பவர்களாக இளந்தலைமுறையினரே காணப்படுகின்றனர். இந்நிலையில், தெற்காசிய வலையத்தில் பல தொன்மையான வரலாறுகளையும், சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற, இலங்கைத் தீவின் சிரசு எனப் போற்றப்படுகின்ற வடமாகாணமானது கலாசாரம், கல்வி, மக்களின் வாழ்வியல் என அனைத்து மட்டத்திலும் சிறந்து விளங்கியதும், விளங்கி வருவதும் யாவரும் அறிந்ததே.

இவ்வாறு அனைத்து மட்டங்களிலும் சிறந்து விளங்கும் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு குடிமகனது மனதிலும் யாழ்ப்பாணம் அதன் பெருமையை, சிறப்பை படிப்படியாக இழந்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் என்றுமில்லாத அளவிற்கு தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. போதைப்பொருள் சந்தை கடத்தலுக்கான முக்கிய கேந்திர நிலையமாக இப்பகுதி மாறி வருவதாக எண்ணத் தோன்றுகின்றது. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது போதைப்பொருள் குற்றங்கள் வடக்கில் அசுர வளர்ச்சியைப் பெற்று பெற்றிருப்பதைக் காண முடிகின்றது.

யாழ் சிறைச்சாலை அத்தியட்சகரின் கருத்துப்படி யாழ்ப்பாணத்தில் கஞ்சா, ஹெரோயின் பாவனையாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். இவர்களில் சிலர் போதைவஸ்து வியாபாரிகளின் அடிமைகளாக உள்ளனர். சிறைச்சாலையில் போதைவஸ்து பாவித்த கைதிகள் ஏனைய கைதிகளுடன் தொடர்பில் இல்லாது தனியாகவே வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட மதுவரி திணைக்கள அதிகாரிகளின் கருத்துப்படி யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஹெரோயின் பாவனையும் கஞ்சா பாவனையும் அதிகரித்துள்ளதாகத் தெரிகின்றது. மேற்கூறிய தகவல்கள் யாழ் பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றன.

போதைவஸ்து பாவனையானது ஒருவரை அதற்கு அடிமையாக்கி விடும். அவரது வருமானம் முழுவதையும் இதற்கெனவே செலவிட்டு அவர்களது உடலையும் கெடுத்துக் கொள்வார்கள். மது பாவனையால் உடல் பருமன், ஈரல், சிறுநீரகம் போன்ற உறுப்புகள் பாதிக்கப்பட்டு விரைவில் நோயாளியாகி இறுதியில் உயிரிழக்கும் நிலை ஏற்படுகின்றது.

நாட்டின் பல இடங்களில் மதுபானசாலைகள் பெருகி விட்டன. இதனால் பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. குடும்பங்களில் பிரச்சினைகள் தோன்றவும்,நாட்டில் களவு, கொலை, விபத்துக்கள் இடம்பெறவும் மதுபாவனை பிரதான காரணமாகும். அதுமாத்திரமன்றி பல இளைஞர்கள் கல்வி கற்க வேண்டிய சிறுவர்கள் கூட தமது கல்வியை இடைநிறுத்தி விட்டு மதுப்பாவனைக்கு அடிமையாகி திரிவதை நாம் அவதானிக்கலாம்.

அதனைப் போலவே சிகரெட், கஞ்சா போன்ற புகைத்தல் பொருட்கள் பாவிப்பதனால் அவர்கள் இளம் வயதிலேயே இதற்கு அடிமையாகி பல குற்றச் செயல்களில் ஈடுபடும் நிலை ஏற்படுகின்றது. சிறு வயதினர் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட இதுவும் வாய்ப்பாக அமைகின்றது. சிறுவயதில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவதால் இவர்களின் கல்வி பாதிப்புற்று எதிர்காலம் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போய் விடுகின்றது. அவர்களை நம்பியுள்ள குடும்பங்களும் வேதனை அடைகின்றன. இவ்வாறான போதைக்கு அடிமையானவர்கள் "கொலை, களவு, கொள்ளை பெண்கள் மீதான வன்முறைகள், போன்றவற்றில் ஈடுபடுவோராக சமூகத்தில் காணப்படுகின்றனர்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த சமூக மட்டத்தில் விழிப்புணர்வு செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும். பொதுவாக போதைப் பொருளுக்கு அடிமையானவர் 16 வயது தொடக்கம் 35 வயது வரையிலானவர்கள். பாடசாலைக் கல்வி சமூக ஒழுக்கத்தை ஏற்படுத்துகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளில் கண்காணிப்பாக இருத்தல் அவசியம். பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் பணம் நல்ல வழியில் செலவு செய்யப்படுகின்றதா என்பதை உற்று பார்த்தால் வேண்டும்.

போதைப்பொருள் பாவனையின் தீமையை மதத் தலைவர்களும் தமது அன்றாட சமய நிகழ்வுகளில் நினைவூட்டல் வேண்டும். போதைப்பொருள் பாவனையிலிருந்து மக்களை மீட்பதற்கு மருத்துவ வசதிகளை மேம்படுத்தல் அவசியம்.பெற்றோர் தம் பிள்ளைகளை பாதுகாப்பாக வளர்த்தல் அவசியம். தனியார் கல்வி நிலையங்கள் என்பவற்றை சூழ ஏற்படும் நட்புச் சூழலையும்,விளையாட்டு மைதானச் சூழலையும் பாதுகாப்பானதாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். பொது நிறுவனங்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு ஊட்டுவது அவசியமாகும்.

இளைஞர்களுக்கு போதிய தொழில் முயற்சிகள், தொழில்நுட்பக் கல்வி என்பவற்றை அதிகரிக்க வேண்டும். வேலையற்ற இளைஞர்களிடம் சேரும் மிகையான பணம் அவர்களை போதைப்பொருள் மீது நாட்டம் அடைய வைக்கும் எனவே பெற்றோர் உறவினர்கள் தமது இளைஞர்களை சுயமாகத் தொழில் செய்வதற்கு வழிபடுதல் அவசியம். கிராமங்களிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் போதைப்பொருள் விழிப்புணர்வு மேற்கொள்ள வேண்டும்.

போதைப்பொருள் பாவனை வெறும் சட்டப் பிரச்சினை அன்று. அது சமூகப் பிரச்சினை ஆகும்.இதனை வெறுமனே குறித்த தரப்பினரது பொறுப்பு என்று எமது கடமையிலிருந்து சுகாதார சேவையினர் ஒதுங்க முடியாது. மேலும் இதனை பிரதேச மட்டத்தில் கட்டுப்படுத்தாவிடின் சமூகம் மீள முடியாத பாதாளத்துக்கு சென்று விடும்.

செ. எழிலன் (ஊடகத்துறை மாணவன்)

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com










மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 978



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*"சிந்து வாரணம் வாழி சேவல் வாழி*
*திறன் மகாகாளர் முதற் சேனை வாழி*
*சந்ரநுதற் பூரணைபுட்கலையும் வாழி*
*சதுர்வேத ஆச்சிரம தருமம் வாழி*
*மந்திர வேதியர் வாழி மகங்கள் வாழி*
*வான்மகளிர் கற்புநெறி மநுநூல் வாழி*
*எந்தையரி ஹரகுமர னடியார்ர் வாழி*
*எழிலணலப் பதியென்றும் வாழி வாழி."*

குளிரும், கூதலும் நிறைந்த மார்கழி மாதத்திலே, மக்கள் மனதையும் உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க, நமது மூதாதையர் பல நெறி-களையும், விரதங்களையும் இக்காலப் பகுதியில் மக்கள் கடைப்பிடிக்கத்தக்க வகையிலே வகுத்து வைத்துள்ளர். இவற்றுள் ஒன்றாகக் காணப்படுவது மா-ர்கழித் திருவெம்பாவை விரதமாகும். ஆதிகாலையில் எழுந்து நீராடி ஆலயம் செல்வது இவ்விரதத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்திலும் மார்கழித் திருவெம்பாவைகாலத்தில், பத்து நாட்களும், காலைப்பூசையும், திருவிழாவும் நடைபெறும். இக்காலப்பகுதியில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை படிக்கப்படும். திருவிழாவின் முடிவில், திருவாதவூரடிகள் புராணபாராயணம் நிகழும். ஆருத்திரா தரிசனத்தன்று, கடலிலே சமுத்திரதீர்த்தம் நடைபெறும். சமுத்திரதீர்த்தம் நிறைவுபெற்று திரும்பி வரும்பொழுது, அடியார்களை மஞ்சள்நீரால் முழுக்காட்டுவர். சுவாமி கோயிலுக்குத் திரும்பியதும், திருப்பொன்னூஞ்சல் வைபவம் சிறப்பாக இடம்பெறும்.

இவற்றோடு தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைக்கஞ்சி, சித்திரபுத்திரநாயனார் பூசை, நாகதம்பிரான் பொங்கல், ஆவணி விநாயகசதுர்த்தி, கார்த்திகைவிளக்கீடு, முதலிய காலங்களிலும் சிறப்பான பூசைகள் நிகழ்வதோடு, விசேட அபிஷேகங்களும், திருவிழாவும் நடைபெறும். ஆனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துநாள் அலங்கார உற்சவங்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். ஆனிப்பரணியிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம், உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். மதியநேரத்திலும், மாலையிலும் திருவிழாக்கள் நடைபெறும். இவற்றில் ஆரம்பத்தில் நடைபெறும் சில திருவிழாக்கள், ஆலயபரிபாலன சபையால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கோயில் திருவிழாக்கள் என அழைப்பர். இந்நாட்களிலே சுவாமி எழுந்தருளி உள்வீதி வலம்வருவர். ஐந்தாம்நாள் நடைபெறும் திருவிழாவைக் குருக்கள் திருவிழா என அழைப்பர். இந்நாளிலிருந்து சுவாமி எழுந்தருளி உள்வீதியும், வெளிவீதியும் வலம்வருவது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ஆரையம்பதி பரமநாயினார் ஆலயத்தில் விசேடநாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் எழுந்தருள வாகனங்கள் பல காணப்படுகின்றன. குதிரை வாகனம், இடப வாகனம், யானை வாகனம், மயில் வாகனம், என்பன குறிப்பிடத்தக்கவையாகும். திருவிழாக்காலங்களிலே வெளிவீதி வலம்வரும்பொழுது விநாயகப்பெருமான் குதிரை வாகனத்திலும், சந்திரசேகரர் இடப வாகனத்திலும், பரமநயினார், பூரணை, புட்கலை சமேதராக யானை வாகனத்திலும், வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் மயில்வாகனத்திலும் எழுந்தருளி வலம்வருவர். இவ்வாகனங்கள் மலர்த்தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும். அயற்கிராமங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள், இத்திருவிழாநாட்களில் இவ்வாலயத்திற்கு வந்து சாம்பவதீட்சை பெற்றுச்செல்வர்.

இவ்வாலயத்தின் திருவிழாக்காலம், மக்களுக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற காலமாக அமையும். தீர்த்தோற்சவதினத்தன்று அதி-காலையிலேயே திருப்பொற்சுண்ணம் இடித்துக்கொண்டு, பல நூற்றுக்கணக்கான அடியார்கள் சூழ்ந்துவரக் கோயிலிலிருந்து புறப்பட்டு, சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளிச் செல்வார். கடற்கரையை அடைந்ததும் அங்கு அஸ்திரதேவருக்கு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் முடிந்தபின், சுவாமி-யை ஆலயத்திற்கு அழைத்து வருவர். வழிநெடுகிலும் தோரணங்கள் தூக்கி, மகரகும்பம் வைத்து சுவாமியை வரவேற்று மக்கள் சிறப்புச் செய்வர். சுவாமி கோயிலை வந்தடைந்ததும் யாகசாலை பிரிக்குங் கிரியைகள் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்றிரவு திருப்பொன்னூஞ்சல் நடைபெற்று, கொடியிறக்கம் நிகழும். பிராயச்சித்த அபிஷேகம், வைரவர்பூசை என்பவற்றுடன் அடுத்தநாள் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பலவகைத் தத்துவநுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவையாக விளங்குகின்றன. அத்தோடு மக்கள் உடலும் உள்ளமும் தூயவராகி மகிழ்வுடன் வாழவும் விழாக்களும் விரதங்களும் உதவுகின்றன. ஐயனாரின் தோற்றம் பற்றிப் புராணக் கதைகள் பலவாகக் காணப்பட்டபோதிலும், சிவவைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக, ஐயனார் வரலாறு விளங்குகின்றது. அரிகரனார் ஐக்கியம், சாதாரண நிலையில் புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலையாகக் காணப்பட்டபோதிலும், அருவ உருவ-மாய் காலத்திற்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக, அரிகரனார் ஐக்கியத்தின்மூலம் பிறந்த குழந்தையே, ஐயனார் என்பது ஞானிகள் கூற்றாகக் காணப்படுகின்றது. சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனின் அவதாரமாக விளங்குகின்றன.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# நாம் தமிழர் கட்சி பொதுக்கூட்டத்தில் கொலைவெறித் தாக்குதல்: நடவடிக்கை எடுக்க எடப்பாடி பழனிசாமி கோரிக்கை

நாம் தமிழர் கட்சியினர் நடத்திய பொதுக்கூட்டத்தில் கொலை வெறித்தாக்குதல் நடத்திய திமுகவினர் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:''தமிழகத்தில் தற்போது ஒரு நூதனமான ஆட்சி தீய சக்திகளால் நடத்தப்பட்டு வருகிறது என்பதற்கு பல்வேறு சம்பவங்களை எனது அறிக்கைகளின் வாயிலாக அவ்வப்போது சுட்டிக் காட்டி வருகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு (21.12.2021), தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஒன்றியத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அப்பகுதியில் உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், பேச்சாளரை மேடையிலேயே கடுமையாகத் தாக்கியுள்ளனர்.ஜனநாயக முறையில் நடைபெற்ற அரசியல் கட்சியினரின் பொதுக்கூட்டத்தில், இவ்வாறு திமுகவினர் அராஜகத்தில் ஈடுபட்டிருப்பது கண்டிக்கத்தக்க ஒன்றாகும். தாக்குதல் நடத்திய ஆளும் கட்சியினரைத் தடுக்காமல், அங்கிருந்த காவல்துறை கைகளைக் கட்டியபடி வேடிக்கை பார்த்தது ஜனநாயகப் படுகொலையாகும்.அதிமுக அரசு ஆட்சியில் இருந்தபோது, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனநாயக முறையில் செயல்பட அனுமதிக்கப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் பல்லாயிரக் கணக்கான போராட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அப்போதெல்லாம் நாராச நடையில் அதிமுக அரசையும், எங்களையும் விமர்சித்தவர்கள் திமுகவினர்.எப்போதும் கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஆகிய வற்றின் குத்தகைதாரர்கள் தாங்கள் தான் என்று தம்பட்டம்



அடித்த ஸ்டாலின் இன்று, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், அவரது கட்சியினர் வன்முறை வெறியாட்டத்தை நடத்தி , எதிர்க்கட்சிகள், சமூக செயல்பாட்டாளர்கள், மக்களின் நலன் விரும்பிகள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் குரல் வளையை நெறிக்கிறார்கள்.தனக்குக் கீழுள்ள காவல் துறையை, திமுகவினரின் ஏவல் துறையாக மாற்றி, எதிர்க்கட்சியினர் மீது, ஆளும் கட்சியினர் நடத்தும் தாக்குதலையும், ஜனநாயகப் படுகொலையையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தற்போதுள்ள அரசில், தமிழகத்தில் உள்ள உண்மையான எதிர்க்கட்சிகள் ஜனநாயக முறையில் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது கண்டு மக்கள் கொதித்துப் போயுள்ளனர். தருமபுரி சம்பவத்தில் ஈடுபட்ட திமுகவினர் மீதும், இந்த அராஜகத்தைத் தடுக்கத் தவறிய அங்கிருந்த காவல் துறையினர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக காவல் துறை தலைவரை வற்புறுத்துகிறேன்.டிசம்பர் 21தேதி அன்று கோவை மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோதவாடி குளம் நிரம்பி வழிந்ததை அடுத்து, அக்கிராம மகளிர் மற்றும் பொதுமக்கள் பொங்கல் வைத்து வழிபடும் நிகழ்ச்சியில், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமனை கலந்துகொள்ள அழைத்துள்ளனர்.

அவர்களுடைய அழைப்பினை ஏற்று அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட, முன்னாள் அமைச்சர் உள்ளிட்ட பல அரசு மற்றும் கட்சிப் பதவிகளை வகித்த, அத்தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி ஜெயராமன் மீதும், வழிபட்ட மகளிர் மீதும் திமுகவினர் தாக்குதல் நடத்தினர். இதை அன்றே நான் கண்டித்தேன். இருப்பினும், தாக்குதலுக்குள்ளான சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் மீதே காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளது விந்தையாக உள்ளது. பாதுகாப்பிற்கு வந்த காவல் துறையினர் முன்னிலையிலேயே, கொலைவெறித் தாக்குதல் நடத்திய திமுகவினரை விட்டுவிட்டு, தாக்குதலுக்குள்ளானவர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளதைப் பார்க்கும்போது, அதிமுக ஆட்சியில், இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கில் முதலிடம் வகித்த தமிழக காவல்துறை, தற்போதுள்ள திமுக அரசில் ஆளும் கட்சியினரின் கைப்பாவையாக செயல்பட்டு வருவது வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

இனியாவது முதல்வர் ஸ்டாலின், சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று என்றில்லாமல், தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகள், சமூக செயல்பாட்டாளர்கள், மக்களின் நலன் விரும்பிகள், சமூக ஊடகங்கள் ஆகியவை ஜனநாயக முறையில் பொதுக்கூட்டம் நடத்துவதையும், கருத்துக்கள் வெளிப்படுத்துவதையும் காவல் துறையினரை வைத்தும், தனது கட்சியினரை வைத்தும் தடுக்க நினைக்கும் போக்கை கைவிட வேண்டும். இல்லையெனில் இந்த அராஜகப் போக்கை எதிர்த்து பொதுமக்களே வீதியில் இறங்கி போராடும் நிலை உருவாகும்.'' இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் ஒமைக்ரான் தொற்று ஏற்பட்டு குணமடைந்த மூவர்: நேரில் நலம் விசாரித்து அனுப்பிவைத்த அமைச்சர் மா.சுப்பிரமணியன்



ஒமைக்ரான் தொற்று ஏற்பட்டு குணமடைந்து வீடு திரும்ப உள்ள மூன்று நபர்களை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்தமிழகத்தில் ஒமைக்ரான் தொற்றால் பாதிக்கப்பட்டு சென்னை கிண்டி கிங்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து 23.12.2021 வீடு திரும்ப உள்ளவர்களை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சுகாதாரத் துறை செயலாளர் ஜெ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து வழியனுப்பி வைத்தனர்.

இந்நிகழ்விற்கு பிறகு அமைச்சர் தெரிவித்ததாவது :தமிழகத்தில் முதல் ஒமைக்ரான் தொற்றுக்குள்ளான நைஜீரியாவில் இருந்து வந்தவர், அவர் சகோதரி மற்றும் சகோதரி மகள் பாதிக்குப்பட்டு இன்று குணமடைந்து வீடு திரும்புகின்றனர். 3 பேர் குணமடைந்ததில் மகிழ்ச்சி, அவர்களை நலம் விசாரித்தேன், லேசான பாதிப்பு இருப்பதாகக் கூறினர். இவர்கள் 7 நாட்கள் வீட்டில் தனிமை படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.மேலும் அவர் குடும்பத்தைச் சேர்ந்த மீதம் உள்ள 5 நபர்கள் நாளை குணமடைந்து வீடு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் ஒமைக்ரானால் 34 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், தற்போது சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை 31 ஆக குறைந்துள்ளது. மத்திய சுகாதாரத்துறை சார்பாக நாடு முழுவதும் உள்ள மாநில சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் இன்று ஒமைக்ரான் பரவல் கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பாக தலைமை செயலகத்தில் முதல்வர் தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்படும். இன்று ஒரே நாளில் 33 பேர் ஒமைக்கரான் தொற்றால் பாதிக்கப்படவில்லை,

கடந்த 20 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கண்டறிந்தவர்களின் முடிவுகளை தான் தற்போது மத்திய அரசு ஆய்வகம் வெளியிட்டுள்ளது.தடுப்பூசிவேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் பகுதிகளில் தடுப்பூசி போடுவது குறைவாக இருப்பதால் தன்னார்வலர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளோம். இந்த வாரம் மயிலாடுதுறை சென்று அங்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளோம். மேலும் தமிழகத்தில் 93 லட்சம் பேர் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை. அடுத்து வரும் மாபெரும் தடுப்பூசி முகாமை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒமைக்ரான் உடல் ரீதியான பாதிப்பு குறைவாக இருந்தாலும் நோய்ப் பரவல் அதிகமாக உள்ளது. அனைத்து விழா கொண்டாட்டங்களிலும் தனி மனித கட்டுப்பாடு அவசியம்.

இந்நிலையில் ஒமைக்ரான் பாதிப்பு ஏற்பட்டால் ஆக்சிஜன் வசதி தேவைப்படவில்லை என்பது ஒரு நல்ல செய்தி. இருப்பினும் தமிழகம் போதிய மருத்துவ கட்டமைப்புகளுடன் தயார் நிலையில் உள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

# டிசம்பர் 23 புயலால் தனுஷ்கோடி அழிந்த 57வது ஆண்டு நினைவு தினம்; ராமேசுவரம்




தனுஷ்கோடி இடையே மீண்டும் ரயில் பாதை: பீனிக்ஸ் பறவை போல புத்துயிர் பெறுகிறது. பரபரப்பாக இயங்கும் ரயில் நிலையம், அதனருகேயே துறைமுகம், நிரம்பி வழியும் சுற்றுலாப் பயணிகள், இருபுறமும் கடல், அதில் எந்நேரமும் மீன்களைப் பிடிக்கும் மீனவர்கள். இவையெல்லாம் தனுஷ்கோடியின் முந்தைய அடையாளங்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்பாம்பன் ரயில் பாலம் கட்டப்பட்டு,1914 பிப். 24ம் தேதி போர்ட் மெயில் ரயில் சேவை தொடங்கப்பட்டது. இதன் மூலம் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து ஒரே டிக்கெட்டில் தனுஷ்கோடிக்கு ரயிலில் சென்று, அங்கிருந்து கப்பல் மூலம் தலைமன்னாருக்கும், பின்பு மீண்டும் ரயிலில் கொழும்பு வரையிலும் சென்றனர்.

1964 டிச.23ல் தனுஷ்கோடியை புயல் தாக்கியதில் ரயில் நிலையமும், துறைமுகமும் ஆயிரக்கணக்கான மக்களுடன் அழிந்து போனது. புயல் தாக்கி 54 ஆண்டுகளுக்குப் பிறகு ராமேசுவரத்தில் இருந்து தனுஷ்கோடி வரை 17.20 கி.மீ தொலைவுக்கு புதிய ரயில் பாதை திட்டத்துக்கு கன்னியாகுமரியில் 1.3.2019 அன்று நடந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து சென்னை ஐஐடியைச் சார்ந்த பொறியாளர்கள் ஆய்வு செய்து, தனுஷ்கோடிக்கான ரயில் பாதையை வெள்ளத்தில் இருந்து பாதுகாக்க சாலை மட்டத்தில் இருந்து 7 மீட்டர் உயரத்தில் அமைக்க பரிந்துரைத்தனர். 1964ல்புயல் தாக்கியபோது அப்போதையரயில் தண்டவாளங்கள் ஒரு மீட்டருக்கும் குறைவான உயரத்திலேயே இருந்தது. இதனால் தற்போது இத்திட்டத்துக்கான நிதி ரூ.208 கோடியில் இருந்து சுமார் ரூ.700 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரதமரால் அடிக்கல் நாட்டப்பட்டு 2 ஆண்டுகளாக தனுஷ்கோடிரயில் பணிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், தற்போது ரயில் பாதை அமைய உள்ள இடங்களான கோதண்டராமர் கோவில், முகுந்தராயர்சத்திரம், கம்பிபாடு ஆகிய இடங்களில் முதல்கட்ட பணியாக, சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி தொடங்கியுள்ளது.மேலும் சமீபத்தில் தனுஷ்கோடி தலைமன்னார் இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்துத் தொடங்குவது குறித்து இந்திய இலங்கைவெளியுறவு மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத் தக்கது.பீனிக்ஸ் பறவை போல் தனுஷ்கோடி மீண்டும் எழுவதால் தென் கடலோர மாவட்டங்கள் பொருளாதாரரீதியாக வளர்ச்சி பெறும்என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

# இந்து சமுத்திர பிராந்தியத்தில் இனப்படுகொலையாளிகள் ஆளும் ஒரு நாடு

- தீபச்செல்வன்

தீபச்செல்வன்இந்த உலகம் விசித்திரமான அரச தலைவர்களை சந்தித்துக் கொண்டே இருக்கிறது. நேர்மையும் அறமும் கொண்ட தலைவர்கள் எனப்படுபவர்கள் பற்றி கதைகளிலும் திரைப்படங்களிலும் தான் கற்பனையாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். அளவுகளிலும் உயரங்களிலும் வெவ்வேறு வி-தமான கிட்லர்களைத்தான் உலகின் நாடுகள் சந்தித்து வருகின்றன. ஒரு காலத்தில் உன்னதமான தலைவர்களை கண்ட உலகில் இப்போதெல்லாம் ஆட்சிக்கும் அதிகாரத்திற்குமான தகைமைகளும் அடையாளங்களும் மாறி வருகின்றன. குறிப்பாக இலங்கைத் தீவில் நல்ல தலைவர்களும் வெற்றி பெறுகின்ற தலைவர்களும் ஒரு இனப்படுகொலையை நிகழ்த்த வேண்டி இருக்கிறது. குறிப்பாக ஈழத் தமிழ் இனத்தை கூட்டுப் படுகொலைக்கு உள்ளாக்குபவர்களுக்கே பதவியும் ஆட்சியும் பரிசளிக்கப்படுகிறது.

இலங்கையின் இன்றைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, இன்று உலக அளவில் அறியப்பட்ட இனப்படுகொலையாளி. முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போர் நடந்த சமயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தார். அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சேவின் தம்பியான கோத்தபாய ராஜபக்ச முன்னாள் இராணுவ அதிகாரியும் கூட. இதனால் முள்ளிவாய்க்கால் போரில் அவர் அறிவிக்கப்படாத ஒரு இராணுவத்தளபதியைப் போலச் செயற்பட்டார். அன்றைக்கு போரில் எடுக்கப்பட்ட பெரும்பாலான முடிவுகள் அவருடையதே. இன்றைக்கு அவரை அதிபராக பார்க்கின்ற சர்வதேச நாடுகள் கடந்த காலத்தில் அவரை வெறுமனே போர்க்குற்றவாளியாகவும் பார்த்திருப்பதும் உள்ளே உறைந்த உண்மையாகும்.

ஈழத்தில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்தப்பட்ட போர் என்பது இந்த நூற்றாண்டின் பெருந் துயரம். மனிதர்கள் கொத்துக் கொத்தாக கொன்று பலியெடுக்கப்பட்ட பேரினவாத வன்முறை. உணவாலும் மருந்தாலும் தடை செய்யப்பட்ட இரக்கமற்ற கொடும்போர். மனிதர்கள் சுவாசிக்கும் காற்றிலும் விசத்தைப் பரப்பி செய்யப்பட்ட படுகொலை. எங்கள் சனங்கள் உணவுக்கு மாத்திரமல்ல காற்றுக்கும் தவித்தே கரைந்து போயினர். மருத்துவமனைகள்மீது மட்டும் கொட்டப்பட்ட குண்டுகள் ஏராளம். பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட இடங்கள்மீதே கடும் தாக்குதல்கள். போர்க்களத்தில் சரணடைந்த குழந்தைகள் முதல் காயம்பட்டவர்களும் முதியவர்களும் எனப் பலர் சிதைக்கப்பட்டனர். நிர்வாணமாக இருத்தப்பட்டு கூட்டம் கூட்டமாக கிடங்குகளில் புதைக்கப்பட்டார்கள். ஒரு இனத்தின் பெரும்பகுதியே இல்லாமல் ஆக்கப்பட்ட இந்த நூற்றாண்டின் பெரும் இனப்படுகொலைப் போராகும்.

ஈழ இறுதிப் போரில் மனித குலம் அஞ்சி நடுங்கும் வகையில் பல படு-கொலைகள் நடந்திருக்கின்றன. சரணடைந்த போராளிகள் மற்றும் பொதுமக்கள் மிக மோசமான வகையில் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் பாலகசன் பாலச்சந்திரன் படுகொலையும் போராளி ஊடகவியலாளர் இசைப்பிரியா சிதைத்து கொல்லப்பட்டதையும் மனிதர்களால் சகித்தே கொள்ள முடியாத பெருந்துயரம். இப்படி ஈழ இனப்படுகொலையில் சில பக்கங்களே வெளியாகி இருக்கின்றன. இன்னும் வெளிச்சத்திற்கு வராத பக்கம் நிறைய நிறைய உண்டு. மேற்படி படுகெ-ாலைகளை நேரடியாக நடாத்தியிருந்ததுடன் அதற்கு சட்ட ரீதியான பொறுப்பையும் கோத்தபாய ராஜபக்சவே வகிக்கிறார்.

அப்பாவித் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதே இலங்கையின் வீரம் என்று கோத்தபாய ராஜபக்கவும் ஸ்ரீலங்கா இராணுவப் படையும் கருதுகின்றனர் என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களின் வாயிலாக நாம் உணர்ந்திருக்கிறோம். குறிப்பாக இனப்படுகொலைக்கான பரிசாகவே தனக்கு அதிபர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக கோத்தபாய ராஜபக்ச பெருமிதம் கொண்டுள்ளார். இரண்டு பிரதான சிங்கள கட்சிகளுக்கு இடையிலான தேர்தல் போட்டி என்றபோதும் தனக்கு ஆட்சிப் பதவி கிடைத்திருப்பது போரில் பெற்ற வெற்றிக்கு பரிசென்றே அவர் கருதுகிறார். இதனால்தான் ஈழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக செய்த இனப்படுகொலைகளை வீரமாகச் சித்திரிக்கும் பேச்சைத்தான் அவர் தன் அரசி-யல் முதலீடாகக் கொள்கிறார். “நந்திக்கடலில் நாளைப் போல இழுத்து வந்து தமிழர்களை சுட்டுக் கொன்றேன்..” என்று பேசுகின்ற ஒருவர்தான் இலங்கை ஜனாதிபதி. அவர்தான் தமிழர்களுக்கும் ஜனாதிபதி என்று சொல்லிக் காட்டுகிறார்.

முள்ளிவாய்க்கால் என்பதும் நந்திக்கடல் என்பதும் தமிழர்களின் வாழ்வில் வரலாற்றில் மறக்க முடியாத காயத்தின் நிலமும் கடலும். தமிழர்களின் குருதி இனப்படுகொலையினால் சிந்தி உறைந்த அந்த நிலத்தில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை வீரமாக சித்திரிக்கும் ஒருவர் ஒருபோதும் தமிழர்களின் அதிபராக இருக்க முடியாது. கோத்தபாய ராஜபக்சசை இனப்படுகொலையாளியாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர்மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழி நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி ஈழத் தமிழர்கள் இங்கே போராடி வருகிறார்கள். இப்படிப் போராடுகிறவர்களை மாத்திரமின்றி அப்பாவிகளையும் சிறையில் தள்ளி, தமிழர்களுக்கு எதிரான சிறை பெருப்பிக்கப்படுகிறது.

இலங்கையை இனப்படுகொலையாளிகளாலும் போர்க்குற்றவாளிகளாலும் நிரப்பிக் கொண்டிருக்கிறார் கோத்தபாய ராஜபக்ச. ஈழ இறுதிப் போரில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ஸ்ரீலங்காவின் 58 இராணுவ அதிகாரிகளுக்கு மேற்குலகம் பயணத்தடை வித்திருத்திருக்கிறது. இவர்களில் முதன்மையானவர் ஜெனரல் சவேந்திர சில்வா. போரில் களத்தில் நின்று இனப்படுகொலையை வழி நடத்திய இவரை இராணுவத் தளபதியாக நியமித்தார் கோத்தபாய. பின்னர் இவரை கொரோனா தடுப்பு ஒருங்கிணைப்பு தலைவராகவும் நியமனம் செய்தார். ஜெனரல் சவேந்திர சில்வாவை புனிதப்படுத்த முனைவதுடன் இனப்படுகொலைக்கு வெள்ளையடிக்கவும் கோத்தபாய ராஜபக்ச முயற்சிக்கிறார். அத்துடன் தற்போது இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் கமால் குணரத்தின நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதன் அடுத்த கட்டமாக தற்போது ஆட்கடத்தல் குற்றம் சுமத்தப்பட்ட வசந்த கரன்னகொட வடமேல் மாகாண ஆளுநராக அதிபர் கோத்தபாய ராஜபக்சேவினால் நியமிக்கப்பட்டுள்ளார். ஐந்து மாணவர்கள் உள்ளடங்கலாக பதினொரு பேரை கடத்தி சித்திரவதை செய்து கொலை செய்த நிகழ்வின் குற்றவாளியாக இவர் கருதப்படுகிறார்.

அரசின் உயர்பதவிகளில் இனப்படுகொலையாளிகளை இருத்துவதன் வாயிலாக சர்வதேச குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்கொள்ளலாம் என்றும் இனப்படுகொலையை மூடி மறைத்துவிடலாம் என்றும் கோத்தபாய ராஜபக்ச நினைத்தே இவ்வாறு நடந்து கொள்வதாக மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. மருத்துவம், கல்வி, நிர்வாகம் என அனைத்து மட்டத்திலும் இராணுவ மயமாக்கலை ஏற்படுத்தும் வகையில் கோத்தபாய மேற்கொள்ளும் நியமனங்கள் குறிப்பாக தமிழ் மக்களை ஒடுக்கி அழிக்கும் நோக்கில் இடம்பெறுகின்றனவா என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்றும் தமிழர்கள் பலர் சிறையில் காரணமின்றி வாடுகின்ற நிலையில், யாழ்ப்பாணத்தில் குழந்தைகள் அடங்கலாக எட்டு அப்பாவித் தமிழர்களை கழுத்தறுத்துப் படு-கொலை செய்து இலங்கை நீதிமன்றத்தால் மரண தண்டனை அறிவிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்காவுக்கு பொதுமன்னிப்பு கொடுத்தார் கோத்தபாய ராஜபக்ச. இப்படியாக தமிழர்களை படுகொலை செய்பவர்களுக்கு பொதுமன்னிப்பும் பதவி உயர்வுகளும் வழங்குவதன் வாயிலாக இலங்கை தீவு இனப்படுகொலையாளிகள் ஆளுகிற நாடு என்ற அடையாளத்தால் அச்சமூட்டுகிறது.


SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305



**மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்**

# 'மஹாகவி' பாரதி பாடல்கள்




***அத்தியாயம் - 03***

இந்தியா சுதந்திரம் பெற்றது 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள். ஆனால் சுதந்திரம் அடைவதற்கு 26 ஆண்டுகளுக்கு முன்பே பாரதமாதாவின் கரங்களில் பூட்டப் பெற்ற அடிமைச்சங்கிலி அறுத்தெறியபட்ட காட்சியை தனது மனத்திரையில் கண்டுகளித்த மஹாகவி மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் "ஆடுவோமே பள்ளு பாடுவோமே!... ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே.. என ஆனந்தக் கூத்தாடினார் பாடினார்!.

அதேபோன்று ஆகஸ்ட் 15 - 1947 முன்னமேயே சுதந்திரம் அடையும் நாளை உறுதி செய்வது போல் ஏவிஎம் செட்டியார் தான் தயாரித்த "நாம் இருவர்" படத்தை அதே ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள் திரையிட்டு மகிழ்கிறார். பின்னாளில் ஏழு மாதங்கள் கழித்து வரும் சுதந்திர நாளுக்குக் கட்டியம் கூறுவது போல் அமைந்துவிட்ட படமே "நாம் இருவர்" படமாகும். அதுவும் பாரதி எழுதிய - பாடிய பாடல்களைத் தாங்கி வெளிவந்த முதல் தமிழ் படம் என சினிமா வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.

இதோ அந்தப் பள்ளு பாடல். "நாம் இருவர்" திரைப்படத்தில் அம்மையார் திருமதி டி கே பட்டம்மாள் குரலில் எல்லோரையும் குதூகலித்து பாட வைத்த பாடல்.

"வராளி" ராகத்தில் மகாகவியால் எழுதப்பட்ட இப்பாடலுக்கு இசை அமைப்பாளர் ஆர் சுதர்சனம் இசையமைத்திருந்தார்.

முன்னமேயே நான் எழுதியிருந்தபடி திரைப்பட இயக்குனரும் - இசையமைப்பாளரும் தங்களது விருப்பு அல்லது தேவைக்கு ஏற்றாற்போல் பாடல் வரிகளை வெட்டி ஓட்டுவார்கள் அல்லது சுருக்குவார்கள்.

அப்படித்தான் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" பாடல் வரிகள் சுருக்கப்பட்டன. இதோ பல்லவியும், பாடல் வரிகளும்...

பல்லவி : "ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (ஆடு)

சென்சாருக்கு பயந்து அடுத்து வந்த நான்கு வரிகளோடு - மேலும் நான்கு சரணங்களையும் நீக்கியே இப்பாடல் இசையமைத்து பாடப்பெற்றது.
திரையில் பாடப்பெற்ற பாடல் வரிகளைத் தொகுத்துப் பார்ப்போம்.

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்
தரணிக்கெல்லாமெடுத்து ஓதுவோமே".. (ஆடு)

...."உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்..
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம் - வெறும்
வீணருக்கு உழைத்தும் ஓயமாட்டோம்.." (ஆடு)

"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் - இது
நமக்கேயுரிமையாம் என்பதறிந்தோம் - இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக்கேயடிமை செய்து வாழ்வோம்..." (ஆடு)

தமிழர் தம் இல்லங்கள் தோறும் பாரதி பாடல் தொகுப்பும், திருக்குறள் நூலும் அவசியம் இருக்க வேண்டும். தினமும் சில நிமிடங்களேனும் வாசித்து, நேசிக்கப் பழகுதல் அவசியம்.
உங்கள் வீட்டில் பாரதி பாடல் தொகுப்பு இருக்குமேயானால், விடுபட்ட வரிகள் எவை என நீங்களே சரி பார்த்து புரிந்து கொள்ளுங்கள். ஒரு உதாரணத்திற்காக குறிப்பிட்டுள்ளேன்.
இப்படித்தான் பாரதி பாடல்களில் சுருக்கப்பட்டும், வெட்டியும், ஒட்டியும் சினிமாவில் பயன்படுத்தப்பட்டன.



இவ்வாறே "விடுதலை.. விடுதலை.."
"வெற்றி எட்டுத்திக்கும்",
"சோலை மலரொளியோ"
"வாழிய செந்தமிழ்" என நான்கு பாடல்கள் காட்சிக் ஏற்றார்போல் இசையமைத்து பாடப்பெற்றன.

மேலும் "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" பாடலுக்குத் திரையில் அபிநயம் பிடித்து ஆடியவர் செல்வி கமலாவாகும். குமாரி கமலா என அழைக்கப்படுபவர். இவர் இந்திய பரத நாட்டியக் கலையில் மிகச் சிறந்தவர்களுள் ஒருவராகும். முதன் முதலில் ஏவிஎம் செட்டியாரே இவரைச் சினிமாவில் அறிமுகம் செய்து வைத்தவராகும்.

உடனே உங்களுக்கு ஞாபகம் வர வேண்டுமானால் "பராசக்தி" படத்தில் சிவாஜியின் பணத்தையும், நகைகளையும் அபகரித்து, கொள்ளையடிப்பதற்கு உதவியாக " ஓ ரசிக்கும் சீமானே.." என கேபி காமாட்சியின் பாடல் வரிகளுக்கு நடனமாடி மயக்கிய நர்த்தகி குமாரி கமலா ஆவார்.


அடுத்து வெளியான "வேதாள உலகம்" (1948) திரைப்படத்திலும் பாரதியின் "தீராத விளையாட்டுப் பிள்ளை" பாடலுக்கு ராதையும் கண்ணனுமாக இருவேடங்களில் நடனமாடி யிருப்பார்.

அதே படத்தில் "ஓடி விளையாடு பாப்பா.." பாடலுக்கும் ஆடியிருந்தார். பரதம் பயின்று வரும் நமது பிள்ளைகள் ஸ்ரீமதி. கமலா லட்சுமணன் ஆடிய நடன காட்சிகள் இடம் பெற்ற திரைப்படங்களை அவசியம் பார்க்க வேண்டும். ஓடி விளையாடு பாப்பா.. நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" எனும் பாரதி பாடல் பின்னாளில் "கப்பலோட்டிய தமிழன்" படத்தில் இடம்பெற்றுள்ளது. இக்காட்சி பற்றி பிறிதொரு அத்தியாயத்தில் எழுதுவேன்.

பாரதியாரின் ஒரே பாடல் ஒன்றுக்கு மேற்பட்ட படங்களிலும் இடம் பெற்றுள்ளன.
1948 இல் வெளியான "வேதாள உலகம்" படமும் ஏவிஎம் தயாரிப்பாகவே வந்தது. அமரர் மெய்யப்ப செட்டியார் பாரதியின் மேல் கொண்டிருந்த பற்றினாலும் - காதலினாலும் "வேதாள உலகம்" படத்திலும் மகாகவியின் நான்கு பாடல்களை ஆர் சுதர்சனம் அவர்களின் இசையமைப்பில் இணைந்திருந்தார். அவையாவன...

"செந்தமிழ் நாடெனும் போதினிலே.." பாடியவர் டி ஆர் மகாலிங்கம்
"தீராத விளையாட்டுப் பிள்ளை.." பாடியவர் டி கே பட்டம்மாள்
"ஓடி விளையாடு பாப்பா.." பாடியவர் எம் எஸ் ராஜேஸ்வரி
"தூண்டில் புழுவினைப் போல்" பாடியவர் டி கே பட்டம்மாள்

பண்டிதர்க்கும் - படித்தோருக்குமே சொந்தமெனப் பாவனையில் இருந்த தமிழ் மொழியை வெகுசனப்படுத்தி - சாமானியர்களுக்கும் புரியும்படி இலகுபடுத்தி அறிய வைத்த மகாகவியை பெருமைப்படுத்தி புகழாரம் சூட்டிய கவிஞர் அப்துல் ரகுமான் எழுதிய கவிதை வரிகளை மீண்டும் நினைத்துப்பார்க்கிறேன்.




"எட்டையபுரத்தில் இரட்டை பிரசவம் நீயும் புதிய தமிழும்!

எழுத்தாணிகளால் சிலுவை அறையப்பட்ட கவிதைக்கு மறு உயிர்ப்பு தந்தவன் நீ!

கவிதைப் பெண்ணின் கையில் அலங்கரிக்க அணிகலன்களையல்ல ஆயுதங்களை தந்தவன் நீ!

உன் கவிதையை விட அழகிய கவிதை உன் வாழ்க்கை!

உன் வாழ்க்கைதான் உன் கவிதையின் நிழல்கள்!
-அப்துல் ரகுமான்.

பரதக் கலையில் சிறந்து விளங்கிய அந்த இன்னொரு நடிகையையும் ஏவிஎம் அவர்களே அறிமுகம் செய்து வைத்தார்! அவர் அறிமுகமாகிய படத்திலும் மகாகவியின் பாடலே இடம் பெற்றது!
ஆவலுடன் எதிர் பாருங்கள்..! அடுத்த இதழில்..

வீணை மைந்தன்



மலேசிய மடல்

# மலேசியாவில் வெள்ளம்: 40–க்கும் மேற்பட்டோர் பலி ஆயிரக் கணக்கான குடும்பத்தினர் நிர்க்கதி கோடிக் கணக்கில் பொருள் நட்டம்:



நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச.23:



இரண்டே இரண்டு நாட்கள்தான் தொடர் மழை பெய்தது அதுவும் கடுமையான மழைகூட அல்ல் இடையிடை-யே விட்டுவிட்டும் பெய்த அந்த மழைக்கு மலேசியாவ-ில் 40 பேர் வரை பலியாக நேர்ந்துள்ளது. இன்னும் 10 பேரைக் காணவில்லையாம் எவரும் எதிர்பாராமல் நேர்ந்துவிட்ட இந்த இயற்கைப் பேரிடர், நல்வாய்ப்பாக அந்த மட்டில் நின்று போனது.

டிசம்பர் 18, 19-ஆம் நாட்களில் பெய்த அந்த தொடர்மழை இன்னும் இரண்டொரு நாட்களுக்கு நீடித்திருந்தால், நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் அஞ்சுகிறது.

மழைவிட்டு ஐந்து நாட்களாகியும் இன்னும் முழுமையாக வெள்ளம் வடியவில்லை. வடிவதற்கு வழியே இல்லை. மலேசியாவின் பாரம்பரிய தலைநகரமான கோலாலம்பூரில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீ மூடா என்னும் வீடமைப்புப் பகுதியில் அதுவும் நாட்டின் மையப் பகுதி மாநி-லமான சிலாங்கூரின் புதிய அரச நகரான ஷா ஆலம் என்னும் புது மாந-கர எல்லையைச் சேர்ந்த இந்த வட்டாரத்தில் உள்ள குடியிருப்புப் பகுதிக-ளில் 10 அடிவரை நீர் மட்டம் உயர்ந்ததால் மேல் மாடியில் தஞ்சம் புகுந்து, உடைமை யாவும் வெள்ளத்தில் மூழ்கிவிட, ஒவ்வொரு வீட்டினரும் உண்ண உணவும் உடுத்த உடையும் இன்றி பெரும் அல்லலுக்கு ஆளாகி நின்றனர். மாடி வீட்டுவாசிகளின் நிலை இதுவென்றால் தரைவீடுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் வீடுகளில் புகுந்த வெள்ள நீர் அபாயக் கட்டத்தை எட்டியதும் அருகில் உள்ள வழிபாட்டுத் தலங்களின் கூரைகளில் ஏறி தப்பித்தனர். இதில், ஒருசில வழிபாட்டுத் தலங்களும் வெள்ளத்தில் மூழ்கியது குறிப்பிடத்தக்கது.



இந்த நிலைக்கு யார் காரணம்? அரசாங்கம், பொதுமக்கள் ஆகிய இரு தரப்பாருக்கும் இதில் சம பங்குண்டு!

சுமார், ஒரு மாதத்திற்கு முன்புதான் பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி, நாட்டில் தொழில்நுட்ப மேம்பாடு குறித்து மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார். கோலாலம்பூரில் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ள உலகின் இரண்டாவது உயரமான கட்டடமான "மெர்டேக்கா 118" தொடர்பாக நெகிழ்ந்துபோன பிர-தமர், நாட்டின் தொழில்நுட்ப மேம்பாடு குறித்தும் தன் மனநிறைவையும் வெளிப்படுத்தினார்.

இப்படிப்பட்ட கோபுரம் அமைந்துள்ள இடத்தில் இருந்து ஏறக்குறைய 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பெருங்குடியிருப்புப் பகுதியில் இருநாள் மழை ஐந்து நாட்களாக வடியாமல் இருக்கிறதென்றால், வடிகால் கட்டமைப்பில் மத்தியக் கூட்டரசும் மாநில அரசும் கோட்டை விட்டுள்ளன எனபதுதான் வெள்ளிடை மலை.

முடிவு எடுக்கும் நிலையில் உள்ள உயர் அதிகாரிகளிடமோ மக்கள்மீதான அக்கறையும் சமுதாயக் கடப்பாடும் இக்காலத்தே மிகவும் அருகி வருகிறது. இத்தகையப் போக்கு, பொதுவாக உலக நாடுகள் அனைத்திலுமே தென்படுகிறது.

பருவ நிலை மாற்றம் குறித்தும் கடுமையான மழை-வெள்ளம் குறித்தும் அரசுதான் எச்சரிக்கை செய்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையில், இலட்சக் கணக்கான குடியிருப்புகளை நெருக்கமாக கட்டமைத்துள்ள மாநில அரசும், இதை கவனத்தில் கொள்ள வேண்டிய மத்திய அரசும் வாளாவிருந்தது மி-கவும் அபத்தமானது.

இதுதான் இப்படி யென்றால், வெள்ளப் பேரிடரில் அகப்பட்டுக் கொண்ட மக்களை மீட்பதிலாவது உடனடி கவனம் செலுத்தப்பட்டதா என்றால் அதுவும் இல்லை இந்த நாட்டில் எல்லா வசதி-வாய்ப்பையும் தொழில்மய மேம்பாட்டையும் அரசு எய்தியுள்ள நிலையில் பகாங், நெகிரி செம்பிலான், போன்ற அண்டை மாநிலங்களையும் கிளந்தான் உள்ளிட்ட தொலைதூர மாநிலங்களையும் விடுங்கள் நாட்டின் பாரம்பரிய தலைநகரை ஒட்டியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களை ஆபத்தில் இருந்து மீட்கவும் அவர்களை அரவணைக்கவும் உடனே களமிறங்கி மின்னல் வேக மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக இரு நாட்களுக்குப் பின் துயில் நீங்கி, கண்களை கசக்கி, முகத்தைக் கழுவி, மெல்லிய நடை பயிலு-வதைப் போல செயல்பட்ட அரசத் தரப்பின் போக்கு இனியும் தொடரக் கூடாது.



இரு நாட்களுக்குப் பின் அதுவும் மீனவப் படகுகளை மிகவும் குறைந்த எண்ணிக்கையில் பயன்படுத்தினால், பல்லாயிரக் கணக்கான மக்களை எப்படி உடனே மீட்க முடியும்?.

தேசிய-மாநில மக்கள் பிரதிநிதிகள் ஒரு சிலர் ஆங்காங்கே களத்தில் இறங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டினார்களேத் தவிர, பெருந்-தலைவர்கள் எவரும் எட்டிப்பார்க்கவில்லை பிரதமரும் இரண்டொரு அமைச்சர்களும் வந்து பார்வையிட்டுச் சென்றனர் இரண்டொரு அறிவிப்புகளையும் செய்தனர்.

இந்த விசயத்தில் பொது மக்களின் நிகரில்லா ஈடுபாட்டையும் அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளின் கைம்மாறு கருதாக் கடப்பாட்டையும் மக்கள் என்றென்றும் நினைவில் கொண்டிருப்பார்கள். படகுகளை வழங்கியது கனரக வாகங்களை தாமாக பயன்படுத்தியது சமைத்த-சமைக்காத உணவுப் பண்டங்களை சொந்தமாக சேகரித்தது-விநியோகித்தது இரவு-பகல் பாராமல் ஆளளவு தண்ணீரையும் கருதாது மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் என்றென்றும் சமுதாயத்தின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

ஸ்ரீ மூடா வட்டாரத்தைப் பொறுத்தவரை, இப்படிப்பட்ட இன்னலுக்கு அங்கு வாழ்கின்ற மக்களும் சுற்றுவட்டார மக்களும் ஒரு வகையில் காரணம்.

ஆறுகளை இயற்கை வழங்கிய கொடையாகவும் வாழ்க்கைப் பயண நண்பனாகவும் கருதா-மல் நகர்கின்ற-ஓடுகின்ற குப்பைத் தொட்டியாகக் கருதி வாழ்ந்தது பெருந்தவறு. குறுக்கே அணைக் கட்டியதைப் போல குப்பைகள் அடி-யோடு அடைத்துக் கொண்டு ஸ்ரீ மூடா ஆற்றின் நீரோட்டத்தைத் தடுத்து தேக்கியதும் வெள்ள நிலைமைக்கு ஒரு துணைக் காரணம்.



இவற்றை யெல்லாம் கடந்து இயற்கையின் பாரம்பரிய கட்டமைப்பும் மாறிவிட்டது. புவி வெப்பமயமாதல் காரணமாக, வான்வெளியில் பரவியுள்ள காற்று மண்டலத்தின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. இதனால், மேகக் கூட்டங்கள் தம்மகத்தே அதிக நீர்த் திவலைகளை சேமித்து வைக்க முடிவதுடன், அவை மழையாக மாறும்பொழுது கொட்டித் தீர்த்துவிடுகின்றன.

இவற்றை யெல்லாம் உணர்ந்து, தெளிந்து விழிப்புடன் நடந்து கொள்ளத் தெரியாத மனிதன், அதற்கான தண்டனையை அனுபவிக்கிறான்.

இத்தனைக்கும் இயற்கை சும்மா இருப்பதில்லை நான் இப்படிப்பட்ட நிலைக்கு மாறிக் கொண்டிருக்கிறேன் என்று அவ்வப்பொழுது பாடம் நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. தன்னகத்தே உள்ள எதையும் மறைத்துக் கொள்ளவோ ஒளித்துக் கொள்ளவோ இயற்கைக்குத் தெரியாது.

காலம் என்னும் நல்லாசிரியனும் இயற்கை என்னும் நற்றாயும் காலந்தோறும் நடத்திவரும் பாடத்தில் நாம்தான் அக்கறைக் காட்டுவதில்லை.

மனதாலும் உடலாலும் ஆணைவிட பெண்ணே வலிமையானவள் என்பதை காலமகள் எத்தனை முறை கற்றுத் தந்தாலும் இன்றைய நவீன சமூகம் அதை ஏற்பதில்லை: மறைந்த மனிதனுக்கு மரியாதை செலுத்தவும் அவனை அடக்கம் செய்யவோ அல்லது எரிக்கவோ கற்றுத் தந்தது இயற்கைதான் விலங்கை வேட்டையாடவும் வேட்டையாடிய விலங்கை சுட்டுத் தின்னவும் கற்றுத் தந்தது இயற்கைதான் சூரியனின் கோடிக் கணக்கான செல்சியஸ் வெப்ப அனல், உலகவாழ் உயிரினங்களை அப்படியே தாக்கா வண்ணம் ஓசோன் என்னும் பாதுகாப்புப் படலத்தை ஏற்படுத்தியதும் இயற்கைதான் ஆனால், அதில் ஓட்டையைப் போட்டு இயற்கை வகுத்துத் தந்த பாதுகாப்பான பாட்டையிலிருந்து நாமே விலகிக் கொண்டிருக்கிறோம். இயற்கை மி-கவும் விரும்புவது பச்சைவண்ண பட்டாடையைத்தான் நாமோ அதைக் கிழித்து நார்நாராகத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கின்றோம்.



அறிவியல் சார்ந்த வாழ்க்கையை நம்மால் புறக்கணிக்க முடியாது என்பது உண்மைதான் என்றாலும் இயற்கை வகுத்தக் கட்டமைப்பை நாம் அளவுக்குமீறி சிதைத்தால் இப்படித்தான் அனைத்துவித பேரிடரையும் எதிர்கொள்ள நேரி-டும்!.

இந்த இடத்தில் இன்னொன்றை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இந்தப் பேரிடர்கால நிவாரணப் பணியிலுக்கூட அரசத் தரப்பு அரங்கம் காண்பதிலும் பாதகை வைப்பதிலும் அதிக முனைப்பு காட்டி சுய விளம்பரத்தை மக்களின் வரிப்பணத்தில் செய்துக் கொண்டது சரியா என்பதை நாளைய உலகம் சொல்லும்!

அதைப்போல தொண்டூழியம் புரிந்த நல்லுள்ளங்கள் மரியாதைக்குரியன என்றாலும் ஒருசில தரப்பினர் இதன்மூலம் விளம்பரம் தேடிக் கொண்டதும் தங்களை முன்னிலைப்படுத்திக் கொண்டதும் பொதுவெளியில் விமர்சிக்கப்-படுகின்றன.

இதனால்தான், மக்களுக்கு நன்மை புரிந்தாலும் அரசத் தரப்பினரும் பொது மக்களும் ஒருங்கிணைந்து செயல்பதாமல் போனது!

**நக்கீரன் -** Nakkeeran 013-244 36 24

ஜீவன் முக்தி (பகுதி ) 135

# செல்வத்தை ஈர்க்கும் குணங்கள்



இந்த ஆனந்த சக்தி செல்வத்தை உருவாக்கக்கூடிய உடல் நிலையையும், மனநிலையையும் உருவாக்கும்.

செல்வத்தை உருவாக்குவது மட்டுமல்ல, அதுபைப் பாதுகாத்து வைப்பதும் அவசியம்.

பொதுவாகவே செல்வம் இல்லாதபொழுது வறுமை என்கின்ற பிரச்சினையும் அது வந்த பின்பு காப்பாற்ற வேண்டுமே என்ற பயத்தையும் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

செல்வத்தை சரியாகக் கையாளத் தெரியவில்லை என்றால், பக்குவம் இல்லையென்றால் வருவதற்கு முன் ஆசையையும், வந்த பின்பு அச்சத்தையும் கொடுக்கும். வருவதற்கு முன்பு ஆசை, வேண்டுமே வேண்டுமே என்றும், வந்துவிட்டதென்றால், 'ஐயோ காப்பாற்ற வேண்டுமே' என்ற அச்சமும் ஏற்படும்.

செல்வத்தை ஈர்ப்பதற்கு மட்டுமல்ல அதை காப்பதற்றுவதற்கும், அனுபவிப்பதற்கும் ஆனந்தம் தேவை. ஆனந்த மயமான மன அமைப்பு தேவை.

செல்வத்தை ஈர்க்கும் ரகசியத்தையும் ஐந்து சூத்திரங்களாக வளங்குகின்றோம். நம்முடைய எண்ணங்களுக்கு மிகப் பெரிய சக்தியுண்டு. அதற்கு (நம்மையும, நம்மைச் சுற்றியிருக்கும் எல்லாவற்றையும் மாற்றும் சக்தியுண்டு.

தன்மை (உங்களையும்) முன்னிலை (உங்கள் முன் இருப்பதையும்) படர்க்கையையும் உங்களைச் சுற்றியிருக்கும் உலகத்தையம்) என மூன்று நிலைகளையும் மாற்றும் ஆற்றல் உடையது.

**முதலாவது:** நம்முடைய எதிர்மறை எண்ணங்கள் எல்லாவற்றையுமே பாதிக்கின்றது.

**இரண்டாவது:** நம்முடைய எண்ணங்களும், நம்பிக்கைகளும் நேர்மையானதாக இருந்தால், தன்மை, முன்னிலை, படர்க்கை என்கின்ற மூன்றுமே இனிமையானதாகவும், செல்வத்தை ஈர்க்கவும் காக்கவும் செய்கின்ற சக்தியோடு மலர்கின்றன.

**மூன்றாவது:** நம்முடைய நம்பிக்கைகளும் எண்ண அமைப்பும், எதிர்மறையானதாக இருக்குமானால் தன்மை, முன்னிலை, படர்க்கை என்கின்ற மூன்று நிலைகளிலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி இயற்கைச் சீற்றங்களுக்கும் காரணமாக முடிக்கின்றன.

**நான்காவது:** நம்முடைய எண்ண ஓட்டத்திற்குத் தகுந்தாற்போன்ற வேதனை தரக்கூடிய அல்லது ஆனந்தத்தை தரக்கக்கூடிய நபர்களையும், நிகழ்ச்சிகளையும் நாம் ஈரக்கின்றோம்.

**ஐந்தாவது:** தியானம் நம்முடைய எண்ண ஓட்டத்தையும், மன ஓட்டத்தையும் மாற்றி ஆனந்த்த்தை உருவாக்கி ஆனந்தமான சூழ்நிலைகளையும் ஆனந்தமாள நபர்களையும் ஆனந்தமான நிகழ்சிகளையும் நம்முடைய வாழ்க்கையில் ஈர்த்துக்கொண்டே இருக்கும்.

ஜீவன் முக்தராக வாழ்வதும், அதற்காக உழைப்பதுமே உங்களின் உழைப்பால் மட்டுமே நீங்கள் தொடுவதைத் தாண்டிய செல்வ நிலைக்கு உங்களை அழைத்துச் செல்லும்.

## உணர்சிகளின் இரகசியம்.

அருணாச்சல மலையைச் சுற்றிக் கிரிவலம் வருவதுண்டு. ஒருமுறை தொடர்ந்து 108 நாட்கள் கிரிவலம் செல்வது என்று உறுதியாக முடிவு செய்தோம். எடுத்த முடிவிலிருந்து பின்வாங்கக் கூடாது என்ற சிரத்தை எப்போதும் எனக்குள் இருக்கும்.

அருணாச்சலம் எனக்கு எல்லாமாகவும் இருந்தது என்பதற்குப் பல நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று எந்தக் கவலையும் இல்லாமல் இருப்பேன்.

அருணாச்சல மலையின் அரவணைப்பில் ஒரு குழந்தையாக வலம் வருவதுண்டு. 108 முறை தொடர்ந்து வலம் வர வேண்டும் என்று முடிவெடுத்த நாளிலிருந்து என்னுள் புது உணர்வு நிகழத்துவங்கியது.

எடுத்த முடிவிலிருந்து பின் வாங்கக்கூடாது என்ற சிரத்தை எப்போதும் என்னுள் இருக்கும்.

முடிபு செய்தபடியே அன்று மிகச்சீக்கிரமாகவே அதிகாலை 4 மணிக்கே நடக்கத் துவங்கிவிட்டேன்.

அந்த நாட்களில் மலைலையச் சுற்றி, சாலைகளோ விளக்குகளோ இல்லை. ஒரு அடர்ந்த காட்டைப்போல்தான் இருக்கும். ஒரு சிறு ஓடையை சுற்றி நடந்து கொண்டிருந்தேன். நடக்கும்போது ரசித்து படித்த பக்தி பாடல்களைபாடியபடி சென்று கொண்டிருந்தேன். அந்த பாடலிலேயே மூழ்கியிருந்தேன்.

இப்படி பாடியபடியே சென்றபோது ஏதோ ஒரு உள்ளுணர்வு தடுக்கப்படுவதை நிறுத்திவிட்டு எதிரிலிருப்பதைக் கூர்மைர்னு பார்த்தால்....

எதிரே ஐந்து, ஆறு கழுதைப்புலிகள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தது. ஒரு அடிதான் இடைவெளி. எந்த நேரத்திலும் பாயத்தயாராய் இருந்தது. கையிலும் தற்காத்துக் கொள்ள எதுவும் இல்லை. ஓடியும் தப்பிக்க முடியாது.

என்ன செய்வது?

கூப்பிட்டால் வருவதற்குக்கூட அந்தக் காட்டில் யாரும் அருகில் இல்லை. எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. 'அவ்வளவுதான் இன்று நாம் தீர்ந்தோம்' என்ற பய உணர்வு அடிவயிற்றை பிசையத்துவங்கியது.

இந்த மனநிலையில் அப்படியே நின்று கொண்டிருந்தோம். ஒரு விதத்தில் பாய்ந்தால் அவற்றிடம் தனியாளாக நிச்சயம் போராட முடியாது. அந்த விலங்குகளும் பயப்படாமல் வழியை மறித்துக் கொண்டு நிற்கிறது. பின்னால் ஒரு அடி எடுத்து வைத்தாலும் ஆபத்து. உடனே எங்கிருந்து அந்த சக்தி வந்ததோ முழு சிரத்தையுடனும் நம்பிக்கையுடனும் தீவிரத் தன்மையோடு அருணாச்சலேஸ்வரா மீதிருந்த ஆழ்ந்த பக்தியுணர்வோடு அருணாச்சலா என்ற வார்த்தை என் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டது.

அருணாச்சலா என்று என் உயிரின் அழைப்பாக அடிவயிற்றின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டது. அந்த பயஉணர்வு குபீரென்று மேல் எழுந்தது. அருணாச்சலர் என்னை கவனித்துக் கொள்வார். என்று முழு சரணாகதி உணர்வோடு அழைத்தோம்.

அந்த உணர்வுப்பூர்வமான சப்தமிடுதல் என் சுவாதிஷ்டானத்ச் சக்கரத்தை முற்றிலும் குணப்படுத்தியது. பிறக்கும்போது தொப்புள் கொடி ஆறுந்ததால் ஏற்படும் ஆழ் உணர்வுக்கு வலிக்கு primordial pain எனறு பெயர். இது எல்லோருக்குள்ளும் இருப்பது அது அந்த நிமிடத்தில் எனக்குள் குணமானது. பய உணர்ச்சி அன்றே சரியானது. உணர்ச்சி சமச்சீர் அந்த நிமிடத்திலிருந்து என்னை விட்டு கலையாத ஒன்றாக மாறிவிட்டது.

இதே போன்று மற்றொரு சம்பவமும் கிரிவலம்வரும்போது நடந்தது. எனக்குப் 13 வயது இருக்கும்.

ஒரு நாள் நள்ளிரவில் கிரிவலம் வந்தோம். வழியில் ஒரு கல்லறை வரும். அதைப்பற்றி கவலைப்படாமல் தாண்டிச் செல்வோம். அன்று இரவு பலத்த மழை பெய்தது. எங்கும் ஒரே இருள். கரண்ட் இல்லை. தண்ணீர் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

தூரத்தில் நாய்கள் குரைக்கும சத்தம் கேட்டது. திடிரென ஒரு நாய் எதையோ தன் வாயில் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதை தூரத்திலிருந்து பார்த்தோம்.

உடனே பக்கதில் போய் பார்த்தபோது அந்த நாய் முதலில் குரைத்தது. பயத்தைப் பற்றி கவலைப்படாமல். மேலும் அருகில் சென்று பார்த்தோம். உடல் பாதி மண்ணில் புதைந்திருக்க, தலை மட்டும் வெளியே தெரிந்தது.

அது ஒரு மனிதனின் தலை என்று தெரிந்தது. முழுவதுமாகப் புதைக்கப்படாத பிணம். கற்பனை செய்து பாருங்கள். ஒரு பதிமூன்று வயதுப் பையன் தனியாக நடுராத்திரியில் ஒரு தலையில்லாத பிணத்தைப் பார்த்தால் எப்படி இருக்கும்.

அந்த நாய் தன் வாயில் பிணத்தின் தலையை வைத்திருந்தது. அந்த உடல், மழை தண்ணீரால் மண்ணுக்கு வெளியே வந்து சாலையில் கிடந்தது. அப்போது முதலில் உடல் முழுவதும் பயம் பரவ ஆரம்பித்துவிட்டது. ஆனால் அது என் இருப்பை முழுவதுமாக அடைவதற்கு முன்பே ஒரு எண்ணம் தீக்ஷையாக எழுந்தது. 'இந்த சூழ்நிலையில் அண்ணாமலை சுவாமிகள் இருந்தால் எப்படி நடந்து கொள்வார். அவர் இதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பார். அப்போது நானும் இதைப்பற்றிக் கவலைப்படமாட்டேன்' என்ற தீக்ஷை, பய உணர்வு உடலின் இருப்பாக மாறுவதற்கு முன்பே எழ பயத்திலிருந்து வெளிவந்தோம்.

கழுதைப் பலியைப் பார்க்கும்போது என்னுள் பய உணர்ச்சி தாக்குதல் இருந்தது. அதன்பிறகு இப்போது இறந்துபோன மனித தலையைப் பார்க்கும்போது என் உணர்வு நிலை உணர்ந்திருந்ததால் உணர்ச்சி சமசீர் நிலையடைந்ததினால், அதே பய உணர்வுதான் ஆனால் அது என்னை பாதிக்கவில்லை. மாறாக தெளிவைத்தரும் நிகழ்ச்சியாக பிறந்தது. வாழ்க்கையில் இன்னொரு பரிமானத்தை காண்பிக்கும் நிகழ்ச்சியானது. உணர்ச்சி சமச்சீர் அடைவது மிகமிக முக்கியமானது.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**


**இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'**

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களை தபால் மூலமாகவோ
அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும்
WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com

மலேசிய மடல்


# மனிதநேய சிந்தை கொண்டவர் டத்தோ சகாதேவன் டான்ஸ்ரீ குமரன், டான்ஸ்ரீ வீரசிங்கம் பிறந்த நாள் வாழ்த்து



நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச.20:

தேசிய நில நிதி கூட்டுறவு சங்க செயலாளரும் தலைமை இயக்குநருமான டத்தோ பா. சகாதேவன் அவர்கள், மனிதநேயமிக்க பண்பாளரும் நிருவாக மேலாண்மைமிக்க ஆற்றலாளரும் ஆவார் என்று டான்ஸ்ரீ க.குமரன் தெரிவித்துள்ளார்.





ஏராளமான அமைப்புகளில் ஆலோசகராகவும் புரவலராகவும் இருக்கும் சகாதேவன், இந்திய சமூகத்தின்பால் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர். வலது கையால் செய்யும் உதவியை இடது கை அறிவா வண்ணம் உதவுகின்ற பண்புநலம் மிக்கவர் சகாதேவன் என்பதை நேரில் கண்டுள்ளேன்.

குறிப்பாக, பொது அமைப்புகளின் வளர்ச்சிக்கும் அவை ஆற்றுகின்ற சேவைக்கும் துணைநிற்கும் இவர், இந்திய சமூகம் கல்வியில் மேம்பட்டுத் திகழ வேண்டும் என்ற எண்ணத்தை நெஞ்சம் நிறையக் கொண்டிருப்பவர்.

மலேசியவாழ் தமிழர்களின் தாய் மொழிக்கும் தமிழ் இலக்கிய மேன்மைக்கும் என 2010-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி-இலக்கிய அறவாரியம், தற்பொழுது பன்னாட்டு அளவில் தமிழ்ப் பணியை மேற்கொண்டு வருகிறது. கூட்டுறவு சங்கத் தலைவர் மதிப்புமிகு டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்களின் தலைமையிலான இந்த அறவாரியத்தின் தலைமை அறங்காவலராகவும் இருந்து தமிழ்ப்பணி ஆற்றிவரும் சகாதேவன், மலேசிய எழுத்தாளர்களை ஆதரித்து ஊக்குவித்தும் வருகிறார்.

அமைதியான தோற்றத்தையும் பாங்கையும் தன்னகத்தேக் கொண்டுள்ள டத்தோ சகாதேவன் அவர்கள் பிறந்த நாள் காணும் இந்த வேளையில் அவர் நீடு வாழ்ந்து சமுதாயத் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துவதாக மூத்தத் தலைவரும் மேநாள் துணை அமைச்சரும் டான்ஸ்ரீ சோமா அறவாரிய அறங்காவலர்களில் ஒருவருமான டான்ஸ்ரீ குமரன் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பேராக் மாநில தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சிக்காகவும் பி-40 தரப்பு குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி உதவிக்காகவும் அம்மாநில அரசால் பேராக் மாநில இந்தியர் கல்வி மேம்பாட்டு வாரியத்திற்கு 2000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இந்த நிலத்தில், பேராக் முன்னாள் மந்திரி பெசார் டத்தோஸ்ரீ டாக்டர் ஸம்ரி அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் கூட்டுறவு சங்கம் தோட்ட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு கல்வித் தோட்டத்தை உருவாக்கியது. இதன் தொடர்பில் கூட்டுறவு சங்கத் தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் அவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்ட டத்தோ பா. சகாதேவன் அவர்களுக்கு பேராக் கல்வி அறவாரியத்தின் சார்பில் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பதாக அதன் தலைவரும் முன்னாள் துணை அமைச்சருமான டான்ஸ்ரீ எஸ்.வீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு சங்கத்தின் முன்னெடுப்பும் முயற்சியும் இல்லை என்றால் 2000 ஏக்கர் நிலத்தில் கல்வித் தோட்டம் உருவாகி இருக்காது. பேராக் மாநில இந்தியர்களின் வளர்ச்சியில் மாநிலத்தில் உள்ள 130-க்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகளின் மேம்பாடும் உள்ளடங்கியுள்ளது.


அதனடிப்படையில், தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சிக்கான நிலத்தில் வருமானம் கிடைக்கும் அளவுக்கு அந்தத் தோட்டத்தை மேம்படுத்தி கல்வித் தட்டத்தை உருவாக்கியதில் கூட்டுறவு சங்கத் தலைவர் டான்ஸ்ரீ சோமசுந்தரம் அவர்களின் சமூக நல சிந்தனைக்கு ஏற்ப அந்த நிலத்தில் கல்வித் தோட்டம் உருவானதில் சகாதேவன் அவர்களின் பங்களிப்பும் ஈடுபாடும் மிகவும் குறிப்பிடத்தக்கது என்பதை அவரின் பிறந்த நாள் சமயத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

NLFCS

தவிர, கூட்டுறவு சங்கத் தோட்டங்களில் தமிழ்ப் பள்ளியையும், ஆலயங்களையும் உருவாக்கி அவற்றின்வழி கல்விப் பணியையும் ஆன்மிக சேவையையும் கூட்டுறவு சங்கம் ஆற்றிவருகிறது.

அந்த வகையில் பேராக் மாநிலத்திலும் கல்வி, ஆன்மிகப் பணியை கூட்டுறவு சங்கம் ஆற்றி வருகிறது. இதன் தொடர்பில் சங்கத் தலைவர் டான்ஸ ்கே.ஆர். சோமசுந்தரம் அவர்களுடன் இணைந்து டத்தோ சகாதேவன் அவர்களும் ஆற்றிவரும் பங்களிப்பும் ஈடுபாடும் குறிப்பிடத்தக்கது.

அப்படிப்பட்ட சகாதேவன் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து மலேசிய இந்திய சமுதாயத்திற்கு கல்வி, ஆன்மிக, சமூகப் பணியை ஆற்ற வேண்டும் என்று அவர் பிறந்த நாள் காணும் இந்த வேளையில் பேராக் கல்வி அறிவாரியத்தின் சார்பில் மீண்டும் வாழ்த்துவதாக தாப்பா நாடாளுமன்ற முன்னாள் மக்கள் பிரதிநிதியுமான டான்ஸ்ரீ வீரசிங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.





நக்கீரன் - Nakkeeran 013-244 36 24



# கிறிஸ்மஸ் கொண்டாட்டமும் ஆங்கில புதுவருடமும்

- குரு அரவிந்தன்

**ந**த்தார் என்று சொல்லப்படுகின்ற, கிறிஸ்மஸ் கிறிஸ்தவர்களின் முக்கியமான திருநாளாகும். டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் கொண்டாட்டமும், அதைத் தொடர்ந்து ஆங்கில நாட்காட்டியின்படி ஜனவரி மாதம் முதலாம் திகதி புதுவருடமாகவும் பல நாட்டு மக்களாலும் கொண்டாடப் படுகின்றது. இயேசு கிறிஸ்த்துவின் பிறப்பைக் குறிக்க கொண்டாடப்படும் விழாவே கிறிஸ்மஸ் ஆகும். இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாகக் கணிக்கப்படா விட்டாலும், அதனால் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பொதுவாக டிசெம்பர் 25 ஆம் திகதியையே இயேசு பிறந்தநாளாக அதிகமானவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். சிலர் ஜனவரி 7 ஆம் திகதியிலும் கொண்டாடுகிறார்கள்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது திருப்பலி கொடுப்பது, தேவாலயங்களுக்குச் சென்று விசேடமாக வழிபடுவது, வீடுகளிலே கிறிஸ்மஸ் மரம் வைத்து அதற்கு மின்விளக்குகளால் அழகூட்டுவது, கரோல் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி இயேசுநாதரைப் பற்றிப் பாடல்கள் பாடுவது, உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் வாழ்த்து மடல் அனுப்புவது, கிறிஸ்மஸ் தாத்தா பிள்ளைகளுக்குப் பரிசுப் பொருட்களைக் கொடுப்பது, குழுக்களிடையே போட்டிகள் நடத்திப் பரிசுகள் கொடுப்பது, கிறிஸ்மஸ் விருந்து மூலம் உறவுகள், நண்பர்கள் ஒன்றுகூடுவது, விடுமுறையை மகிழ்வாகக் கொண்டாடுவது போன்ற பல நிகழ்வுகள் பொதுவாக இந்த விடுமுறை நாட்களில் நடைபெறும். பல நாடுகள் கிறிஸ்மஸ் தினத்தையும், ஜனவரி முதலாம் திகதி புதுவருடத்தையும் அரச விடுமுறையாக விடுவதால், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் இத்தினங்களை நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாடுவர்.

கிறிஸ்மஸ் விடுமுறையின்போது வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகைக்குச் சென்றிருந்தேன். அமெரிக்காவின் எல்லா மாகாணங்களில் இருந்தும் மற்றும் பிரதேசங்களில் இருந்தும் ஒவ்வொரு கிறிஸ்மஸ் மரங்கள் கொண்டுவந்து நிரையாக நட்டு வண்ணவிளக்குகளால் அலங்கரித்திருந்தார்கள். மாலை அந்திசாயும் நேரம் அந்தக் காட்சி மிக அழகாக இருந்தது. பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொள்கிறார்கள். மாளிகையின் உள்ளேயும் விருந்தினர் வரவேற்பறை மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அது பற்றி அங்கு பணிபுரிந்த பெண்மணியிடம் வினாவியபோது ஜாக்குலின் கென்னடி முதல் பெண்மணியாக இருந்த காலத்தில்தான் வரவேற்பறை மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டதாகவும், அந்த வழக்கத்தை இப்பொழுதும் தொடர்வதாகவும் குறிப்பிட்டார். வெள்ளை மாளிகையின் வடகிழக்குப் பக்கத்தில் உள்ள சுமார் 25-30 அடி உயரமான எவகிறீன் மரம்தான் நீண்டகாலமாக, அதாவது 1923 ஆம் ஆண்டில் ஜனாதிபதி கல்வின் கூலிட்ஜ் காலத்தில் இருந்து தேசிய கிறிஸ்மஸ் மரமாக அலங்கரிக்கப்படுகின்றது. பழைய மரம் பட்டுப் போகவே 1972 ஆம் ஆண்டு புதியமரம் பென்சில்பேனியாவில் இருந்து புதிய கொண்டு வரப்பட்டது. அதன்பின் 2011 ஆம் ஆண்டு புதிதாக நியூஜேர்சியில் இருந்து கொண்டுவரப்பட்டு நடப்பட்ட மரம்தான் இப்பொழுதும் இருக்கின்றது. 2 ஆம் உலக யுத்த காலத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக விளக்குகளால் அலங்கரிக்கப்படவில்லை. வருடாவருடம் மிச்சிக்கன் மாகாணம்தான் அமெரிக்காவுக்குத் தேவையான 60 சதவீதமான, 60 மில்லியன் டொலர் பெறுமதியான 13 வகையான கிறிஸ்மஸ் மரங்களை வழங்குகிறது. பொஸ்ரன் நகருக்கு கனடாவின் நோவாஸ்கோஸியாவில் இருந்துதான் கிறிஸ்மஸ் மரம் அனுப்பப்படுகின்றது. உலகிலேயே டென்மார்க்தான் அதிக கிறிஸ்மஸ் மரங்களை ஏற்றுமதி செய்யும் நாடாக இருக்கின்றது.

கனடாவில் 51 சதவீதமானவர்கள் கிறிஸ்மஸ் விடுமுறையைக் கொண்டாடினாலும், சுமார் 35 சதவீதமானவர்கள்தான் சமய நிகழ்வாகக் கொண்டாடுகின்றனர். 1500களின் தொடக்கத்தில் இருந்து நாடுபிடிப்பதில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டதால், அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பல நாடுகளில் கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டதால், உலகெங்கும் கிறிஸ்தவ மதம் பரவலாயிற்று. இலங்கையிலும் 1505 ஆம் ஆண்டு போத்துக்கேயர் வரவைத் தொடர்ந்து, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் மதம் பரப்பப்பட்டது. அதனால் இன்று உலகிலே அதிக மக்களைக் கொண்ட மதமாக கிறிஸ்தவ மதம் இருக்கின்றது. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் மாற்றுக் கருத்துடையவர்களால் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் சில வருடங்கள் தடைப்பட்டாலும், 1843 ஆம் ஆண்டு சாள்ஸ் டிக்கின்ஸ் வெளியிட்ட "கிறிஸ்மஸ் கரோல்", மற்றும் 1886 ஆம் ஆண்டு வெளிவந்த அமெரிக்க எழுத்தாளர் வாஷிங்டன் இர்விங்கின் "ஓல்ட் கிறிஸ்மஸ்" போன்ற நூல்களால் வாசகர்கள் மீண்டும் ஈர்க்கப்பட்டனர். கிறிஸ்மஸைக் கருப்பொருளாக வைத்து ஆண்டுதோறும் பல திரைப்படங்களும், சின்னத்திரைப் படங்களும் பல மொழிகளிலும் வெளிவருகின்றன. "கிறிஸ்மஸ் இன் கனடா" என்று ஆங்கிலத்தில் சின்னத்திரை தொடர் ஒன்றும் ஒளிபரப்பானது.

கிறிஸ்மஸ் பண்டிகைக்காக கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510 ஆம் ஆண்டு தொடங்கியதாகத் தெரிகின்றது. அலபாமா மாகாணத்தில் 1836 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் ஆரம்பித்தது. பிரான்ஸ் நாட்டில் 1847 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் கரோல் சேவிஸ் ஆரம்பிக்கப்பட்ட போது, "ஓ ஹோலி நைட்" என்ற கிறிஸ்மஸ் பாடல் பாடப்பட்டதாகப் பதிவுகளில் இருந்து அறிய முடிகின்றது. இன்டியானாவில் உள்ள சன்ராக்ளாஸ் நகரம்தான் வருடம் முழுவதும் கிறிஸ்மஸ் கொண்டாடுகின்றது. சுமார் 2500 மக்கள் வாழும் இந்த நகரத்தின் சிறிய கிராமத்திற்கு கிறிஸ்மஸ் லேக் விலேஜ்ச் என்றும், வீதிகளுக்கு சில்வபெல், ரெயின்டியர், கன்டிகேன் என்றெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டு இருக்கின்றன.

கோவட்-19 பேரிடர் காரணமாக இந்த வருடமும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன. சுகாதாரப் பிரிவின் வேண்டுகோளை ஏற்றுப் பேதமில்லாது பாதுகாப்புடன் செயற்பட்டால், சமூகத்திற்கும், நாட்டிற்கும் சிறந்ததாக இருக்கும்.




நீங்கள் வர்த்தகத்தில்
இருக்கிறீர்கள் என்பதை
பொதுமக்கள் அறிந்துகொள்ளவும்,
உங்கள் தொலைபேசி
இலக்கத்தினைத் தேடி அலையாது
உடன் பெற்றுக்கொள்ளவும்...
விளம்பரத்திற்கு இன்றே அழையுங்கள்
செந்தியின்... தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
www.tamilsguide.ca
info@tamilsguide.com | 416-615-4646


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS
C R PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?
நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.
நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.
தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077
கடன் அட்டை முறிவுகள்
சம்பளக் கடன்கள்
அங்காடி அட்டை முறிவுகள்
சகல பிற முறிவுகள்
ஓட்டாண்டியாகப் போக வேண்டியதில்லை
மகிழுந்தகளை வைத்திருங்கள்
வீட்டை வைத்திருங்கள்
ஆர்.ஆர்எஸ்பியை வைத்திருங்கள்
கூலி முடக்கம் இல்லை
கடன் அறவிடும் அழைப்புக்கள் இல்லை
0%வட்டி
மாதம் ஒரு சிறு கொடுப்பனவு
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills
வசந்தி சிவராஜா
எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு
MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga
SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7
HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto
RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill
NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்
30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# அன்பின் தொனி - 634

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் - Be Holy**

**பரிசுதம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்?**

*1. தேவனையும் தேவனோடு சம்பத்தப்பட்டவற்றையும் கருத்தில் கொள்கிறோம்.*
*2. தேவனுடைய சேவைக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட காரியங்களை நினைவுபடுத்துகிறோம்.*
*3. புனிதத்தையும், ஆன்மீகத்தையும், சுத்தத்தையும், தாழ்மையையும், இன்னும் அர்ப்பணிப்பு போன்றவற்றை சிந்திக்க வைக்கிறது.*

ஒப்புக்கொடுத்தல், பிரதிஸ்டைபண்ணுதல், வணக்கத்துக்குரியவை என்பனவற்றை தெரிவிக்கிறது. மேலே காணப்கடும் விளக்கங்கள் பரிசுத்தத்தை நாம் எப்படி விளங்கிக்கொள்கிறோம், கருதுகிறோம் என்பதை உணர்த்துகிறது. இந்த அடிப்படையில் தேவனுடைய பரிசுத்த ஜனம், பிரத்தியேகமானவர்களும், வித்தியாசமுமான அடையாளத்தை உடையவர்கள் என்பது புலனாகிறது. மேலும் அவர்கள் தேவனுக்குப் பிரியமில்லாதவற்றிலிருந்து தம்மை தூரமாக்கி நடப்பதுடன், தேவன் வெறுக்கும் காரியங்களை தவிர்ர்துக்கொண்டு செயற்படுவது பரிசுத்தத்திற்கு தேவையான அம்சங்க ளாகவும் அமைகிறது.

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக் கும்படி காக்கப்படுவதாக. **- 1 தெசலோனிக்கேயர் 5: 21-23**

முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள், முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லு கிறேன். **- 1 பேதுரு 2: 10-12**

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகனவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். **- எபிரேயர் 7: 26**

**நான் பரிசுத்தன் என்று எப்படித் தெரியும்?**

நான் பரிசுத்தனா இல்லையா என்பதற்கு நம்மை நாமே நியாயம் தீர்க்க வெண்டும். எமது இருதயத்தை நாம் ஆராய்ந்து பார்த்து, நாம் எந்தவிதத்திலும் குற்றவாளிகளல்ல என்பதை தீர்க்கக்கூடியதாய் இருப்பது அவசியம்.

நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம். **- 1 யோவான் 3: 20-22**

துர்ரதிஸ்டவசமாய் அநேகர் தம்மை சரிவர நியாயம் தீர்ப்பதில்லை. ஏனெனில் ஒருவர் தனது தப்பிதங்களை, அவை தப்பானவை என்று சரிவர புரிந்துகொள்ளாத பட்ச்சத்தில் அவர் தான் சுத்தமானவர் என்ற உணர்வோடு நடப்பது கவலைக்குரியதாகும். தான் செய்வது பிளை என்பதை உணராதவர், குற்ற உணர்வு இல்லாதவராய் நடந்துகொண் டாலும் நீதிக்கு முன்னிலையில் அவர் குற்றவாளியே. எனவே நாம் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்பதற்கு எச்சரிப்பாகவும், கவனமாகவும் இருக்கவேண்டும். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயம் தீர்க்கப்படொம்.

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. **- 2 தீமோத்தேயு 2: 15**

**A. பரிசுத்தத்திற்கான வழி**

சிலுவையில் தமது குமாரனுடைய மரணத்தின்மூலம், படைத்தவராகிய மாபெரும் தேவன் ஒவ்வருடைய பாவம், பாடுகள் மற்றும் வேதனைகள் துக்கங்கள் யாவற்றையும் நீக்க உன்னதமான ஒரு நடவடிக்கையை எடுத்தார். சகலருடைய பாவங்களையும் போக்க தமது குமாரனாகிய இயேசு சிலுவையில் மரித்ததின் நிமித்தம் அந்த மாபெரும் திட்டத்தை செய்து முடித்தார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. **- ரோமர் 5: 8**

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவ னால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார். **- ஏசாயா 53: 4**

*தொடரும்...*

---


***(சென்ற வார தொடர்ச்சி)*** ***(அத்தியாயம் 37)***

## கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவன் பழையாறைக்கு திரும்பும் பயணம்

அப்போது பழுவேட்டரையர்கள் மதுராந்தகர் தஞ்சை சிங்காசனத்திற்கு தமக்குள்ள உரிமைகள் பற்றி தாயிடம் வாதாடும்படி கேட்டிருந்தனர். இதற்காக இளவரசர் மதுராந்தகர் பழையாறு போகிறார். போகும் வழியில் வந்தியத்தேவன் காண்கிறான். எப்படியாவது இவர்களோடு பழையாறைக் கோட்டைக்குள் நுழைந்திட வேண்டும் என்று யோசனை செய்தான். திடீர் என்று தன் குதிரையை வேகமாகச் செலுத்தி இளவரசர் ரதம் அருகே வந்தான். உடனே அபாயம் என்று கத்தியபடி குதிரையில் இருந்து கீழே விழுந்தான். எல்லோரும் சிரித்தார்கள். இளவரசரும் அவனைப் பார்த்து சிரித்தார். பின்னர், 'நீ யார் தம்பி ஏன் என்னை உற்றுப் பார்க்கின்றாய்?' என்றார் மதுராந்தகர். அதற்கு வந்தியத்தேவன் 'நான் உங்களை இரு தடவை பார்த்திருக்கிறேன் அது நீங்கள் தானா என்று தெரிந்து கொள்ளவே பார்த்தேன். சில வேளை அது கனவோ நினைவோ தெரியவில்லை அல்லது நான் பார்த்தது வேறு யாரா என்றும் தெரியவில்லை' என்றான். அதற்கு மதுராந்தகர், 'என்னை எங்கே பார்த்தாய் சொல்' என்றார். 'ஒரு பெரிய கோட்டை வீராதி வீரர்கள் பலர் கூடியிருந்தார்கள். நள்ளிரவு அந்த கூட்டத் தலைவர் ஆத்திரமாக பேசிக் கொண்டிருந்தார். திடீர் என்று வேகமாகச் சென்று மூடு பல்லக்கில் இருந்த ஒரு மனிதனை அழைத்தார் அந்த சுந்தர புருஷரும் வெளியே வர வாழ்க! வாழ்க! என்ற கோஷம் வந்தது அந்த சுந்தர பருஷர் பார்ப்பதற்கு உங்களைப் போல் இருந்தார்' என்றான். மதுராந்தகருக்கு வியர்க்கத் தொடங்கியது. 'நான் மூடு பல்லக்கில் கடம்பூர் சென்றதை பற்றி இவன் சொல்கிறானே! அப்போது நீயும் கூடவே இருந்தாயா?' என்றார் மதுராந்தகர். 'இல்லை சத்தியமாக இல்லை' என்றான் வந்தியத்தேவன். 'பின்னர் எங்கே என்னைப் பார்த்தாய்' என்றார் இளவரசர். 'இருளடைந்த நிலவறை ஒரு சுரங்கப் பாதை வளைந்து வளைந்து கீழே சென்று கொண்டிருந்தது நான் கடம்பூரில் இருந்து அந்தச் சுரங்கப் பாதை வழியாக சென்று கொண்டிருந்தேன். அங்கே மூன்று பேர் வந்து கொண்டிருந்தார்கள் அதில் ஒருவர் உங்களைப் போல் இருந்தார்.' என்றான் வந்தியத்தேவன். மதுராந்தகர், 'நிறுத்து' என்ற மிகப் பயத்துடன் கூறிவிட்டு, 'நீ நிமித்தக்காரன்' என்றார். 'நான் நிமித்தக்காரன் இல்லை ஆனால் நடக்கப் போவதை சொல்லும் சக்தி என்னிடம் உள்ளது என்னை உங்களுடன் கோட்டைக்குள் அழைத்துப் போனால் அவற்றைப் பற்றிச் சொல்லுவேன்' என்றான். உடனே இளவரசர் தன் காவலாளிகளிடம் 'இவரை அழைத்து வாருங்கள்' என கட்டளை பிறப்பித்தார். இவ்வாறாக வந்தியத்தேவன் பழையாறைக் கோட்டைக்குள் பிரவேசித்தான். அப்பொழுது பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி அரண்மனை வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். மதுராந்தகர் ரதத்தில் இருந்து இறங்கி அன்னையின் ஆசி பெற்று நின்றார்.

அப்பொழுது 'மகனே திரு நாரையூர் நம்பி வந்து கொண்டிருக்கிறார் அவருக்காக நான் காத்திருக்கிறேன். நீ போய் விரைவாக சபா மண்டபத்திற்கு வா திரு நாரையூர் நம்பியை அங்கு அழைத்து வருகிறேன்' என்றார் அன்னை. இதைக் கேட்ட மதுராந்தகருக்கு பெரும் துக்கம் தன்னை வரவேற்க காத்திருக்கவில்லை என் அன்னை. வந்தியத்தேவனோ, 'இளவரசர் மதுராந்தகர் ஊர்வலம் வரும் போது மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை அவர் தாயும் அவருக்காக காத்திருக்கவில்லை. இவர் நாட்டுக்கு அரசராவாரா? என்று எண்ணிக் கொண்டான். பின்னர் தன் அன்னை அழைத்தபடி சபா மண்டபத்திற்கு போக விருப்பமில்லை என்றாலும் போக நேர்ந்தது. அதனால் தன்னுடன் வந்தியத்தேவனையும் மற்றும் சேனாதிபதியையும் அழைத்துக் கொண்டு சபா மண்டபம் சென்றார். சபா மண்டபத்தில் செம்பிபயன் மாதேவியும், குந்தவை பிராட்டியும் மற்றும் அரண்மனைப் பெண்களும் கூடியிருந்தனர். சபையின் நடு நாயகமாக ஒரு இளம் வாலிபன் இருந்தான். சபா மண்டபம் நிறைந்து இருந்தது. மதுராந்தகர் தன் ஆசனத்தில் அமர்ந்தார். வந்தியத்தேவன் தன் கண்களை சுற்றி உலாவ விட்டான். குந்தவை தேவியும் அவன் கண்களில் பட்டாள். அப்போது குந்தவை வியப்புடன் அவனைப் பார்த்தாள். பின்னர் அவள் கண்கள் மீண்டும் அவன் பக்கம் திரும்பவில்லை.




அதனால் தன்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லையோ என்று நினைத்துக் கொண்டான் வந்தியத்தேவன். சபா மண்டபத்தில் பாடல்கள், பதிகங்கள் பாடப்பட்டன. சாஸ்திர சம்பிரதாயப் படி எல்லாம் முடிவடைந்தது. வந்தியத்தேவனோ குந்தவையிடம் தான் கொண்டு வந்த செய்தி சொல்லுவதற்கு சந்தர்ப்பம் பார்த்திருந்தான். குந்தவை முகம் கவலையில் இருந்ததை வந்தியத்தேவன் கண்டான். ஒரு வேளை என்னை மறந்து விட்டாளோ? என்றும் எண்ணத் தோன்றியது அவனுக்கு. பின்னர் குந்தவை பெரிய பிராட்டியுடன் சென்றாள். அதே சமயம் இளவரசர் மதுராந்தகன் வந்தியத்தேவனை அழைத்தார். நீ நிமித்தக்காரன் என் யோகம் பற்றிச் சொல் நான் என் அன்னையிடம் உரையாடப் போகிறேன் அதற்கு முன் என் யோகத்தைப் பற்றி உன்னிடம் தெரிந்து கொள்வதே நல்லது' என்றார். வந்தியத்தேவனோ 'எப்படியாவது சாமர்த்தியமாக நான் இவருக்கு பதில் சொல்ல வேண்டும்' என்றபடி நிமித்தம் சொல்லத் தொடங்கினான். எரியும் தீபத்தை உற்று நோக்கியபடி தன் கற்பனை கலந்து சொன்னான். அவன் சொன்னவற்றை இளவரசர் மதுராந்தகர் நம்பி நான் தான் சோழ நாட்டு ராஜா என்ற பெருமிதம் கொண்டார். அதே சமயம் அவன் அன்னையின் அழைப்பு வந்தது. அதே வேளை 'இளவரசரே நான் அரண்மனைக்கு வெளியே சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்றபடி அனுமதி பெற்று வந்தியத்தேவன் புறப்பட்டான். பழையாறை வைத்தியர் மகன் பினாகபாணி வந்தியத்தேவனைத் தன் எதிரியாக கொண்டிருந்தான். தன் தந்தையிடம் வைத்தியம் கற்பதை விட்டு விட்டு வந்தியத்தேவனை தேடிக் கண்டு பிடிப்பதில் தீவிரம் காட்டினான். தஞ்சை அரண்மனையில் இருந்து தன்னிடம் சொல்லாமல் தப்பிச் சென்ற வந்தியத்தேவனிடம் பெரும் கோபம் கொண்டிருந்தாள் பழுவூர் ராணி. அத்துடன் இலங்கைக்குத் தப்பிச் சென்றான், இவன் மீண்டும் ஒரு நாள் பழையாறை திரும்பி வந்து இளைய பிராட்டி குந்தவையை சந்திப்பான் என்று சந்தேகம் கொண்டு தஞ்சை சிறையில் இருந்து விடுதலை செய்த பினாகபாணியை அழைத்து, வந்தியத்தேவனை பிடித்துக் கொடுத்தால் உனக்கு வெகுமதி தருவேன் என்று சொல்லியிருந்தாள். பினாகபாணிக்கு சின்னப் பழுவேட்டரையர் கட்டளையிட்டார். அத்துடன் உன்னை ஒற்றர் படையில் சேர்த்து அதிகாரி ஆக்குவேன் என்றாள். இதனால் பினாகபாணி தெருத் தெருவாக அலைந்து வந்தியத்தேவனைத் தேடினான். திருநாரையூர் நம்பியின் ஊர்வலம் பழையாறைக் கோட்டைக்குச் சென்ற போது வந்தியத்தேவன் இருக்கிறானா என்று சுற்றிச் சுற்றித் தேடினான். ஆனால் அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. வந்தியத்தேவன் அரண்மனையை விட்டு வெளியே வந்தான். அப்பொழுது வைத்தியர் மகன் அருகில் வந்து 'அப்பனே நீ யார்?' என்றான். வந்தியத்தேவன் திகைத்துப் போய் இவனிடமிருந்து தப்பியாக வேண்டும் என்று தன் குதிரை மேல் தாவி ஏறி குதிரையை வேகமாக ஓட்டிக் கொண்டு போனான். அந்த வேளை பினாகபாணிக்கு சந்தேகம் வந்துவிட்டது. உடனே அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு இரு காவலர்களுடன் சென்று வந்தியத்தேவனை தேடலானான். இறுதியில் வந்தியத்தேவனை சந்தித்த போது 'இவன் தான் ஒற்றன் இவனைப் பிடியுங்கள்' என்றான் பினாகபாணி. அதற்குள் வந்தியத்தேவன் 'உனக்குப் பைத்தியமா?' என்றான். பினகபாணியோ 'இல்லை நான் வைத்தியர் மகன் உன்னுடன் கோடிக் கரை வந்தவன்' என்றான். காவலாளர்கள் வந்தியத்தேவனை நெருங்கினர்.

***(தொடரும்...)***

---

Jenita.Jaffna@gmail.com **தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 09-04-1928

விண்ணில்: 03-01-2014



**அமரர். அற்புதம்மா சந்தியாப்பிள்ளை**

**யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அற்புதம்மா சந்தியாப்பிள்ளை அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி**

கருவறை தொடக்கம் உலகெங்கும் நாம்- இன்று<br>
கலங்கரை விளக்குப் போல் விளங்குவதற்கு – உன்னைக்<br>
கரைத்து எம்மை ஆளாக்கிய அன்புத் தெய்வமே<br>
கலக்கமின்றி துணிவுடன் தலை நிமிர்ந்து வாழ்கின்றோம் உன்<br>
வளர்ப்பில் நாம்

காலங்கள் பல கடந்தாலும் கனவெல்லாம் உன் காட்சியினை<br>
கண்ணிறையக் கண்டு களிப்படைய நிஜமாக வாராயோ - அம்மா எம்<br>
காலில் அடிபட்டால் உன் கண்ணில் நீர் வடியும் அம்மா<br>
காலமெல்லாம் உன்மடியில் தூங்க நிஜமாக வாருமம்மா

கயவர்கள் காடையர்கள் மத்தியிலும் துணிவுடன் எம்மை<br>
கண்ணியமாய் வளர்த்தாய் உன் துணிவு தான் எம்மை தலை நிமிர<br>
வைத்ததம்மா<br>
கண்ணை இமை காப்பது போல் என்றும் எம்மை காப்பாய்<br>
எம் கரங்கள் பற்றி என்றும் வழிகாட்டுவாயம்மா...

**என்றும் உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

தகவல்: உதயன் (மகன்)
(416) 843-0589


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# இவ்வார ராசிபலன்

**24-12-2021 வெள்ளி தொடக்கம் 30-12-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். களவு போனப்பொருள் திரும்ப கிடைக்கும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வாய்ப்பு வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. குடும்ப சுமைக்கூடும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வாகனத்தில் செலவு ஏற்படும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கலைகளில் ஈடுபாடு கூடும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். தாய்வழி தகராறு குறையும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமாட்சி, அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**ரிஷபம்:** தொட்டது துலங்கும் வாரம். சாதகமான காலம். தாராளமான தனவரவு உண்டு. பூர்வீகச்சொத்துக்கள் விற்பனையாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அன்னிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாக அமையும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உயர்ந்த பதவி யோகமுண்டு. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். பெற்றோர்களிடத்தில் அன்பு அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,1,7,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,H




**மிதுனம்:** திட்டமிட்ட காரியம் வெற்றி தரும் வாரம். புண்ணியம் சேரும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். வராத கடன் வந்து சேரும். பணவரவு திருப்தி தரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிட தொழில் கவனம் தேவை. கமிஷன் தொழில் வளம் சேரும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். பட்டம் பதவி தேடி வரும். நட்டமில்லாத நன்மை பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**கடகம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். புதிய முதலீடு லாபம் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. கலகலப்பான காலம். எதார்த்தமாக செயல்படவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். வீண்வம்பு உருவாகும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மனிதநேயம் மிகுதியாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிவட்டாரப் பழக்கம் உருவாகும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,S




**சிம்மம்:** அதிகாரப் பேச்சு அரங்கேறும் வாரம். உள்ளம் மகிழும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். செயல்திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்புத் தடைப்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப்பொலிவு கூடும். தாய்வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் தரும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். கணவன், மனைவி வாக்குவாதங்கள் ஏற்படும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பண வரவு அதிகரிக்கும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நலனில் அக்கறை தேவை. ஏற்றுமதித் தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்மச்சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். விரக்திகள் மறையும். பொது வாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன் பிறப்புகளால் உதவி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். பேரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பகவதிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,8,1




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,U





**துலாம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். தேக பலன் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. சுபகாரியம் கைகூடும். ஞாபகத் திறமை அதிகரிக்கும். குடும்ப வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பாதகம் விலகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. இ'ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**விருச்சிகம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். வாயில் தேடி வாய்ப்பு வரும். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் அதிகரிக்கும். மன ஆரோக்யம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சுபகாரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். பூர்வீக சொத்து வந்து சேரும். புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழிலால் ஏற்றம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். நல்லோர்களின் நட்பு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,6,2,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,G




**தனுசு:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பெருமைகள் கூடும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். வீண் பழி அகலும். அரசியலில் புகழ் கூடும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மை உண்டு. முடிவுகள் சாதகமாகும். முயற்சி பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல் நலம் பாதிக்கும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. முற்போக்கு சிந்தனை உருவாகும். மாணவர்கள் பாராட்டு பெறுவார்கள். சந்தோஷம் பெருகும். ஆபரணச் சேர்க்கையுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 7,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மகரம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதுமுயற்சிகள் பலன் தரும். ஆன்மீக பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். திறமைகள் வெளிப்படும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதுமுயற்சிகளை தள்ளி போடவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பலன் தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். உறவினரால் உதவிகள் கிடைக்கும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K





**கும்பம்:** குடும்ப வளர்ச்சி பெருகும் வாரம். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உறவினர் பகை ஏற்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். சுபச்செய்திகள் வரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். பயணம் வெற்றித் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,4
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,H




**மீனம்:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். சகோதரியினால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். அணிகலன்கள் சேரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அமையும். பழைய பாக்கிகள் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பயணம் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 4,3,2,8
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,Z


முதலாம் ஆண்டு
நினைவுகளுடன்...
"சேவைத்திலகம்"
அமரர் திரு.இராசையா சிவராசா
வன்னிச்சங்க ஸ்தாபக தலைவர்களின் ஒருவர்)
1948 –2020
உள்ளம் கனிந்த உத்தமராய்
உயர்ந்த எண்ணம் நிறைந்தவர்
உண்மை பேசும் உத்தமராய்
ஊரார்க் உழைத்த மனிதரிவர்
மென்மையான குணத்துடன்
அன்பைச் சொரியும் புனிதரிவர்
பண்பாய்ப் பேசும் பண்புடன்
எங்களை ஆண்ட மனிதரிவர்
அன்பாய்ப் பழகி அரவணைத்து
எங்கள் மனதில் குடியிருந்தவர்
யாருக்கும் தீங்கின்றி வாழ்ந்து
உள்ளத்தில் உயர்ந்த மனிதரிவர்.
ஆண்டுகள் பல கடந்தாலும் தந்தையை
இழந்து நிற்கும் உங்கள் வன்னிச்சங்க
பிள்ளைகளின் மனங்களின்
என்றும் நீக்க மற நிறைந்திருப்பீர்கள்..!
உங்களின் கனவான தாயகம் நோக்கிய
இடைவிடா உதவிகள் என்றும்
தொடர்ந்திட உறுதி கொள்கிறோம்..!
வன்னிச்சங்கம் –கனடா
V United Care for Kids Inc.

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE · TRANSMISSION · RUSTPROOFING · OILCHANGE · TYRES · AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1342 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 24, 2021

# கனடிய வரலாற்றில் முதற் தடவையாக ஒரு வருடத்தில் அதிக குடிவரவாளர்களை அனுமதித்துள்ளது

**கடந்து போகும் 2021ல். 401,000 நிரந்தர குடிவரவாளர்கள் கனடாவில் தம் புதிய வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர்**



கனடாவில் வாழும் பழங்குடியினரைத் தவிர, ஏனைய கனடா வாழ் மக்களும் முதலில் வேறு எந்தவொரு நாட்டிலிருந்தோ வந்தவர்கள் என்பது தான் உண்மை. குடியேற்றம் பற்றிய கதை கனடாவின் வரலாற்றில் பல அத்தியாயங்களைக் கொண்டது-

கனடாவின் தொற்றுநோய் பரவலுக்குப் பிந்தைய மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கும், மேலும் வளமான எதிர்காலத்தை விளக்குவதற்கும், கனடிய அரசாங்கம் 2021-2023 குடியேற்ற நிலைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2021 இல் 401,000 புதிய நிரந்தர குடிவரவாளர்களை வரவேற்கும் இலக்கை அடைந்துள்ளது

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

## HomeLife/Future Realty Inc Brokerage வீடு விற்பனை முகவர்கள் நிறுவனத்தின் விருதுகள் வழங்கும் விழா










கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவரும் **HomeLife/Future Realty Inc Brokerage** வீடு விற்பனை முகவர்கள் நிறுவனத்தின் தலைவரும் ஸ்தாபகருமான திரு செல்வா வெற்றிவேல் கடந்த 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் உள்ள **Crystal Banquet Facility** மண்டபத்தில் நிறுவனத்தின் விருதுகள் வழங்கும் விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இங்கே காணப்படும் படங்களில் சிறந்த இணை விற்பனை முகவர்களுக்கான விருதினை திரு சிவா சண்முகநாதன்- திரு ஜோய் செல்வநாயகம் ஆகியோர் விருது பெறுவதையும் சிறப்பு விருதுகள் பெற்றவர்கள் இணைந்து நிற்பதையும் **Toronto Sick KIDS** வைத்தியசாலைக்கு நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்ட 37. 000 டாலர்கள் மாதிரிக் காசோலையோடு நிதி சேகரிப்பிற்கு பொறுப்பானவர்கள் நிற்பதையும் காணலாம்.

## RE/MAX ACE Realty Inc Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் வருடாந்த விற்பனை விருதுகள் விழா





ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் **RE/MAX ACE Realty Inc Brokerage** வீடு விற்பனை முகவர் நிறுவனத்தினர் கடந்த 18-12-2021 அன்று தமது வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவத்தையும் கிறிஸ்த்துமஸ் கொண்டாட்டத்தையும் இணைந்து நடத்தினர்.

நிறுவனத்தைச் சேர்ந்த பல வீடு விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனைத் திறன்களுக்கு ஏற்ப தங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

## "அலைபேசிகளின் அரசன்" 'BEST MOBILEZ' கைத்தொலைபேசி விற்பனை நிறுவனத்தின் 3வது கிளை







"அலைபேசிகளின் அரசன்" என்று வாடிக்கையாளர்களால் உச்சரிக்கப்படும். **'BEST MOBILEZ'** கைத்தொலைபேசி விற்பனை நிறுவனத்தின் 3வது கிளை கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் 5215 **Finch Ave. East -Unit0112, Scarborough. Finch and Middlefield Inter-section** என்னும் விலாசத்தில் திறந்து வைக்கப்பெற்றது.

ஒன்றாரியோ மாகாணத்தின் முதியோர்கள் நலன்கள் தொடர்பான அமைச்சர் **Raymond Cho** பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கிளையைத் திறந்து வைத்தார்.

விற்பனை நிறுவனத்தின் உரிமையாளர் திரு குமார் தனது துணைவியார் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் சகிதம் அனைவரையும் வரவேற்று உபசரித்தார்.

கிளை நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம்: 416-319-1111

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker